# ඉඩම් ප්‍රතිසංස්කරණ කොමිෂන් සභාව

# காணிச் சீர்திருத்த ஆணைக்குழு

# LAND REFORM COMMISSION

## *වාර්ෂික වාර්තාව*

## *ஆண்டறிக்கை*

## *ANNUAL REPORT*

## *2014*

2014 ජනවාරි 01 සිට 2014 දෙසැම්බර් 31 දක්වා

2014 ஆம் ஆண்டு சனவரி 01 ஆந் திகதி
தொடக்கம் 2014 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந்
திகதி வரை

From 1st of January-31 st of December 2014

# காணிச் சீர்திருத்த ஆணைக்குழு

## ஆண்டறிக்கை

## 2014

2014.01.01 ஆந் திகதி தொடக்கம் 2014.12.31 ஆந் திகதி வரை

## காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் தகவல்கள்

| | |
|---|---|
| **நிறுவனம்** | காணி சீர்திருத்த ஆணைக்குழு |
| **அமைச்சு** | காணி அமைச்சு |
| **முகவரி** | சீ, 82 ஹெக்றர் கொப்பேகடுவ மாவத்தை,<br>கொழும்பு – 07 |
| **மின்னஞ்சல் முகவரி** | ircadmin@slatrcy.lk |
| **தொலைபேசி இலக்கங்கள்** | 011-2694251/0112-672273 |
| **தொலைநகல் (பெக்ஸ்) இலக்கங்கள்** | 011-2693438/011-2698849 |
| **கணக்காய்வாளர்கள்** | கணக்காய்வாளர் தலைமை அதிபதி<br>கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்<br>பத்தரமுல்லை |
| **வங்கியாளர்கள்:** | இலங்கை வங்கி,<br>தாபனக் கிளை,<br>கோட்டை.<br><br>தேசிய சேமிப்பு வங்கி,<br>பொரளை.<br><br>அரச ஈட்டு முதலீட்டு வங்கி,<br>கொள்ளுப்பிட்டி. |

## தலைவர் அவர்களின் செய்தி

தேசிய அரச சபையின் 01 ஆம் இலக்க காணிச் சீர்திருத்த ஆணைக்குழு சட்டத்தின் படி காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவை ஸ்தாபித்து ஏறத்தாழ நான்கு தசாப்த காலம் முடிவடைந்துள்ள இச்சந்தர்ப்பத்தில், காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் 2014 ஆம் ஆண்டுக்கான முன்னேற்றம் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆணைக்குழுவின் ஸ்தாபகரான காலஞ்சென்ற ஹெக்டர் கொப்பாகடுவ அவர்கள் எதிர் பார்த்த வாறு சிறிய எண்ணிக்கையினரிடத்தில் இலங்கையின் காணிகள் உரித்தாகியிருந்ததுடன், அதன் உண்மையான உரிமையாளர்களான இந் நாட்டு மக்களுக்கிடையில் நியாயாமானதாகவும் பயனுள்ளதாகவும், நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபடுத்த கூடியதாகவும் வழங்குவதில் பல்வேறு செய்முறை பிரச்சினைகள் காரணமாக கஷ்டமானதும் சிக்கலானதுமான பணியாக இருந்தது. இவ்வாறானதொரு கால கட்டத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் புதிய தலைவராக என்னை நியமனம் செய்தமையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

தற்போது இலங்கையில் நடைமுறைப்படும் தேசிய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாட்டு மக்களின் பெறுமதி வாய்ந்த வளமான காணிகளை உரியவாறு பயன்கொள்வதற்கு நாட்டு மக்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதுடன், இன்று தேசிய அபிவிருத்தியில் நேரடியான பங்களிப்பை ஆணைக்குழு வழங்குகின்றது.

2014 ஆம் ஆண்டில் ஆணைக்குழுவின் நோக்கங்களில் 80% ஐ அண்மித்து கொள்வதற்கு முடிந்துள்ளதுடன், ஏறத்தாழ 3500 இற்கு அண்மித்த உறுதிகளை மக்களுக்கு அளித்தல், ஆணைக்குழுவின் மாவட்ட அலுவலகங்களில் நிறைவேற்றிய அலுவல்களுக்கு அப்பாற்சென்று 04 மாவட்டங்களில் வருமானம் உற்பத்தி செய்யும் கருத்திட்டங்களை ஆரம்பித்தல், ஏனைய மாவட்டங்களில் புதிய கருத்திட்டங்களுக்கான வாய்ப்புகளை இனம்காணுதல், அலுவலர்களின் தொழில் கட்டுக்காப்பு மற்றும் நலன்புரி சேவைகளை அதிகரிக்கும் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், ஆணைக்குழுவின் காணி பதிவேடை கொழும்பு பல்கலைக்கழகத்தின் கண்காணிப்பின் கீழ் கணினிமயப்படுத்துவதனை ஆரம்பித்தல் போன்ற முக்கியமான பல பணிகள் இவ்வாண்டில் நிறைவேற்ற முடிந்துள்ளது.

தற்போது காணி சீர்திருத்த ஆணைக்குழு, காணி அமைச்சின் நேரடி கண்காணிப்பின் கீழ் தனது அலுவல்களை செயற்படுத்துவதுடன், கௌரவ காணி அமைச்சர் மற்றும் அமைச்சு செயலாளர் ஆகியோர் ஆணைக்குழுவின் பணிகளின் மீது எடுக்கும் முயற்சி மற்றும் ஒத்துழைப்பு என்பவற்றை இதன்போது நினைவு கூறுவதுடன், அண்மித்துக்கொண்டுள்ள வெற்றிக்கு உதவியளிக்கும் நிறைவேற்றுப்பணிப்பாளர் உள்ளிட்ட மொத்த பதவியினறுக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

ரீ.ஏ.சுமனதிஸ்ஸ தாம்புகல
தலைவர்
காணிச்சீர்திருத்த ஆணைக்குழு

## நிறைவேற்றுப்பணிப்பாளரின் செய்தி

1972 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க காணிச் சீர்திருத்த ஆணைக்குழு சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் 2014 ஆம் ஆண்டுக்கான முன்னேற்றம் தொடர்பான செய்தியினை வெளியிடகிடைத்தமையிட்டு காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் நிறைவேற்று பணிப்பாளர் என்ற வகையில் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

ஹெக்டர் கொப்பாகடுவ அவர்களுடன் இணைந்து 1972 ஆம் ஆண்டில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவை தேசத்திற்கு கொடையாக வழங்குவதற்கு பங்களிப்பு வழங்கிய மாபெரும் மனிதர்களில், கௌரவ காணி அமைச்சர் இன்று அதன் மேற்பார்வையும் வழிகாட்டல்களையும் மேற்கொள்கின்ற முன்னோடியாக உள்ளார்.

2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் முன்னரான ஆண்டுகளையும் பார்க்க ஆணைக்குழுவானது, இந்நாட்டின் பொருளாதார அமைப்பில் குறிப்பிடத்தக்க நிறுவனமாக இருத்தல் நம் அனைவரது மகிழ்ச்சிக்கு ஒரு காரணமாகும்.

ஆணைக்குழுவிற்குரிய காணிகளை பல்வேறு அபிவிருத்தி பணிகளின் பொருட்டும், கருத்திட்டங்களின் பொருட்டும் பயன்படுத்தும் போது, கௌரவ தலைவர் அவர்களுக்கு நேரடியான வழிகாட்டல்களை வழங்கும் கௌரவ அமைச்சர் அவர்கள் தமது வரலாற்று கடமைப்பொறுப்புகளை உயர் மட்டத்தில் நிறைவேற்றுதலானது நாம் இதுவரை பெற்ற வெற்றியின் அடிப்படையாகும்.

தற்கால இலங்கை பெற்றுள்ள புதிய அரசியல் பயணத்தில் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்குரிய காணிகளை முறையாகவும் பயனுள்ளதாகவும் குறித்த நோக்கங்களின் பொருட்டு பயன்படுத்துவதற்கு ஆணைக்குழு 2014 ஆம் ஆண்டில் பெரும்பாலான அலுவல்களை வெற்றிகரமாக நிறைவேற்றியது என்பதை குறிப்பிடுகின்றேன்.

தற்போது காணி அமைச்சின் விடயவெல்லைக்குள் உட்பட்டுள்ளதுடன், கௌரவ காணி அமைச்சரதும் அமைச்சு செயலாளரதும் நேரடி கண்காணிப்பின் கீழ் இடம் பெறுவதால் காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் எல்லா நடவடிக்கைகளும் அலுவல்களும் மிகச் சிறந்த மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு எதிர் காலத்தில் ஆற்றல் கிடைக்குமென நம்புகின்றேன்.

ஆணைக்குழுவின் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் பொருட்டு அதன் முன்னோடியாக பணியாற்றும் தற்கால தலைவரிடம் எனது ஆகக்கூடிய பங்களிப்பை வழங்கப்படுவதுடன், பணிப்பாளர் உள்ளிட்ட எல்லா அலுவலர்களுக்கும் குறித்த பணிகளின் உரிமையாளர்களாக வழங்குகின்ற ஒத்துழைப்பு தொடர்பாக எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

வழக்கறிஞர். ஐ.எம்.அபேரத்ன

நிறைவேற்றுப் பணிப்பாளர்,

காணிச் சீர்திருத்த ஆணைக்குழு

# அறிமுகம்

1972 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க காணிச்சீர்திருத்த சட்டத்தால் ஸ்தாபிக்கப்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழு, 1972 ஆம் ஆண்டு வரை நீண்டுச் செல்லும் வரலாற்றைக் கொண்டுள்ளது.

ஆணைக்குழுவானது, ஏறத்தாழ 35 வருடங்களாக காணி சீர்திருத்த சட்டத்தினால் அளிக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் மற்றும் அரசாங்கத்தால் அவ்வப்போது மேற்கொள்கின்ற கொள்கை ரீதியான தீர்மானங்கள் ஆகியவற்றுக்கமைவாக அதன் பணிகளை வழிநடாத்தியது. மேலும் காணி உரிமையாளர்களின் சட்ட ரீதியான பிணைப்புகளை வழங்குதல், அவர்களுக்கு நஷ்டஈடு செலுத்துதல், பாராதீனப்படுத்திய காணிகளை பயனுள்ள முதலீடுகளில் ஈடுபடுத்தல், ஆணைக்குழுவிற்கு கிடைக்க வேண்டிய வருமானங்களை சேகரித்தல், காணிகளை பாதுகாத்தல், பதவியினரின் பயிற்றுவித்தல் மற்றும் நலனோம்பல் ஆகியன இவற்றுள் முக்கியமான பணிகளாகும்.

தற்கால இலங்கையில் புரட்சிகரமான அரசியல் பயணத்தை வெற்றிகரமாக்கி 100 நாள் கொள்கை படி அதிகளவிலான காணி துண்டுகளை மக்களிடத்தில் பகிர்ந்தளிக்கும் நிகழ்ச்சியின் கீழ், குறித்த பணிகளை வெற்றிகரமாக்கி கொள்வதனை இலக்காகக்கொண்டு ஆணைக்குழுவின் பணிகளை வழிநடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மேலும் இவ்வாண்டில் நிறுவனத்தின் ஊழியர்களின் தொழில் கட்டுக்காப்பை ஏற்படுத்துவதன் மூலம் புத்துயிரூட்டும் நிகழ்ச்சித்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகின்றது.

**2014 ஆம் ஆண்டில் கீழே குறிப்பிடப்படும் அம்சங்கள் விசேடமாக இனம்காணப்பட்டன.**

i. ஆணைக்குழுவிற்கு சொந்தமான இனம்காணப்படாத காணிகளை இனம்காணல்.
ii. பயனற்ற முதலீடுகளுக்கு கையளிக்கப்பட்ட காணிகளை மீளப் பெற்றுக்கொள்ளுதல்.
iii. ஒரு இலட்சம் காணித்துண்டுகளை பகிர்ந்தளிக்கும் வேலைத்திட்டத்தின் கீழ் ஆணைக்குழுவிற்குரியதான பகிர்ந்தளிக்க முடியுமான காணிகளை பகிர்ந்தளிப்பதற்கு துரித வேலைத்திட்டமொன்றை தயாரித்தல் மற்றும் இதுவரை பகிர்ந்தளித்திருந்த காணிகளில் வதிவிடலாளர்களை ஒழுங்குப்படுத்தி தற்போது நடைமுறைப்படுகின்ற நிகழச்சித்திட்டத்திற்கு புது வடிவம் கொடுத்து தேசிய பணியாக உறுதி வழங்கல் நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

iv. வருமானத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சித் திட்டம்

(அ) ரணவிரு சேவை அதிகாரசபை

(ஆ) அரசினால் சுவிகரிக்கப்பட்ட காணிகளுக்கு நட்டஈடு செலுத்துதல்

(இ) அரச நிறுவனங்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள காணிகளுக்கான வருமானங்களை பெறுதல்

(ஈ) குத்தகை அடிப்படையில் ஆட்களுக்கு கையளிக்கப்பட்ட காணிகளில் இதுவரை அறவிட முடியாதுள்ள குத்தகை பணத்தை அறவிடுவதற்கு முறையான வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்.

(உ) கருங்கற்களை குத்தகைக்கு விடுதல் மற்றும் அதற்கான வருமானங்களை சேகரித்தல்.

(ஊ) இரத்தினக்கல் காணிகளுக்கு உரியதாக புதிய ஒழுங்கு விதிகளை விதித்து வருமானம் சேகரித்தல்

(எ) சிலிக்கா, டொலமைட், மணல் போன்ற கனிமப்பொருட்கள் உள்ள காணிகளில் இருந்து வருமானம் பெறுதல்.

நிறுவனத்தின் மேற்படி கடமைப்பொறுப்புகள் தொடர்பாக பதவியினரை அறிவுறுத்தல் மற்றும் அலுவலர்களின் கருத்துக்கள், பிரேரணைகள் ஆகியவற்றை பெற்றுக் கொள்வதற்காக, ஒவ்வொரு பணியின் பொருட்டும் நிறுவனத்தைச் சேர்ந்த அனைத்து அலுவலர்களையும் கொண்டமைந்த குழுக்களை நியமித்தல், செயலமர்வுகளை நடாத்துதல் ஆகியவற்றை மேற்கொள்ளப்பட்டன. அதே போன்று பதவியினரை பயிற்றுவிப்பதற்காக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களும் நடாத்தப்பட்டன.

அரசாங்க கொள்கைகளுக்கு ஏற்புடையதாக காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிகளை வழிநடாத்தல் மற்றும் துரிதகதியில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் காலோசிதமான நடவடிக்கையாக கருதி எப்பொழுதும் கலந்துரையாடல்களை நடாத்தி தேவையான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அதன் பின்னர் அத்தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி பின்னாய்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. மேலும் பொது மக்களின் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக அவர்களை அழைத்து நியமிக்கப்பட்ட குழுவின் மூலம் நேரடி கலந்துரையாடல்களை நடாத்தி உடனடித் தீர்மானங்களை மேற்கொள்ளப்பட்டது.

இதற்கு மேலதிகமாக பயனுள்ள முதலீடுகளை இனம்கண்டு அவைகளின் பொருட்டு காணிகளை வழங்குவதற்கு கௌரவ அமைச்சர் அவர்களின் அறிவுரைகளுக்கமைவாக நிபுணத்துவ அறிவுடைய ஆலோசனை குழுவின் பரிந்துரைகளின் படி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

மேலும் கௌரவ காணி அமைச்சரதும், அமைச்சு செயலாளரதும் துரிதமான வழிநடாத்தல் ஆலோசனைகள் மற்றும் வழிநடாத்தல் என்பவற்றுக்கமைவாக காணி சீர்திருத்த ஆணைக்குழுவால் சுவிகரிக்கப்பட்ட காணிகளுள் இல்லாது போன வளங்களை கொண்டு நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு மட்டுமல்லாது நாட்டின் பொருளாதார சமூக அபிவிருத்தியிலும் பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.

# காணிச்சீர்திருத்த ஆணைக்குழு

**நோக்குகை**

காணிச்சீர்திருத்த சட்டத்தின் கீழ் பராதீனப்படுத்திய காணிகள், பௌதீக வளங்கள் ஆகியவற்றை மக்கள் மற்றும் தேசத்தின் சுபீட்சம் கருதி வழிநடாத்தும் முன்னணி நிறுவனமாக செயற்படுதல்

# காணிச்சீர்திருத்த ஆணைக்குழு

## செயற்பணி

காணிச்சீர்திருத்த தொழிற்பாடு மற்றும் உச்ச எல்லைக்கு அதிகமான காணிகள் ஆகியவற்றை நாட்டின் நலன்கருதி அவற்றின் உற்பத்தி திறனை அதிகரித்தும், பௌதீக வளங்களின் உரிமையை பாதுகாத்து நிர்வகித்தும், காணிகளின் உச்ச எல்லையை காலத்திற்கேற்றவாறு நடைமுறைப்படுத்தியும், சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நட்டஈடு செலுத்தி பொருளாதார நடவடிக்கைகளில் முதலீடு செய்தும், எதிர்கால சந்ததியினரின் மேம்பாட்டின் பொருட்டு பயன்படுத்த முடியுமான காணி ஒதுக்கமொன்றை பேணிக்கொண்டும் தேசிய அபிவிருத்தியில் முனைப்பாக பங்களிப்புச் செய்தல்.

## நோக்கங்கள்:

01. காணிகளைப் பற்றிய தகவல்களை திரட்டுதல்

i. வெளிப்படுத்திய போதும் இனம் காணப்படாத காணிகளை இனம்காணுதல்.

ii. பொது மக்களிடமிருந்து கிடைக்கும் தகவல்களின் படி காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவுக்கு சொந்தமான காணிகளை இனம்காணுதல்.

iii. கையளிக்கப்படினும் அச் செயற்பாடு நிறைவேறாதிருப்பின் அக் காணிகளை ஆணைக்குழுவிற்கு கையேற்றல்.

02. ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பாக,

i. வெளியிடப்பட்ட நியதிச்சட்ட முறையிலான தீர்மானங்கள் மற்றும் சட்டமுறையிலான பிணைப்புகள் ஆகியவற்றை விடுவித்தல்.

ii. உச்ச எல்லைக்கு மேற்பட்ட காணிகளை ஆணைக்குழுவிற்கு கையேற்றல்.

iii. ஏற்கப்பட்ட காணிகளுக்காக நஷ்டஈடு வழங்குதல்.

iv. வெளிப்படுத்திய எனினும் வெளிப்படாதோரின் காணிகளை மீள வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ளுதல்

03. நாட்டின் பொருளாதார, சமூக அபிவிருத்திக்காக அரசினால் மேற்கொள்ளப்படும் கொள்கை முறையிலான தீர்மானங்களையும் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி ஏற்கப்பட்ட காணிகளையும் பயனுள்ள முதலீடுகளில் ஈடுபடுத்தல்.

04. ஆணைக்குழுவிற்குரியதாக உள்ள காணிகளில் கிடைக்க வேண்டிய வருமானங்களை சேகரித்தல் மற்றும் அதன் மூலம் நாட்டின் பொருளாதார அபிவிருத்தி செயற்பாட்டில் பங்களித்தல்.

## தொழிற்பாடுகள்:

* காணிச் சீர்திருத்த சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக ஆளொருவர் வைத்திருக்க முடியுமான ஆகக் கூடிய காணி அளவினை சட்ட முறைப்படுத்தல்.

* உச்ச எல்லைக்கு மேற்பட்ட காணிகளை அடையாளம் கண்டு ஆணைக்குழுவிற்கு சுவீகரித்துக் கொள்ளல்.

* சட்டங்களிலிருந்து கிடைக்கப்பெற்றிருக்கும் ஏற்பாடுகளின் படி சட்டமுறையிலான பிணைப்புகளிலிருந்து விடுவித்தல்.

* ஆணைக்குழுவிற்கு சுவீகரித்துக்கொண்ட காணிகளின் பொருட்டு வெளிப்படுத்துநர்களுக்கு நஷ்டஈடு செலுத்துதல்.

* பாராதீனப்படுத்தியிருப்பினும் சட்டத்திற்குப் புறம்பான காணிகளை மீள வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

* காணிகள் தொடர்பான பதிவேடுகளை நாளது வரைப்படுத்தல் மற்றும் வெளிக்கள துறையை தொடர்பு கொண்டு காணிகள் பற்றிய தகவல்களை சேகரித்தல்.

i. வெளிப்படுத்தியிருப்பினும் அடையாளம் காணப்படாத காணிகள்.
ii. உச்ச எல்லைக்கு மேற்பட்ட வெளிப்படுத்தப்படாத காணிகள்.
iii. கையளிக்கப்பட்டிருப்பினும் பயனுள்ள முறையில் முதலீடு செய்யப்படாத காணிகள்

❋ நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்தல்.

1. முதலீட்டுச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்காக காணி வழங்குதல்.
11. கமத்தொழில் சார்ந்த கருத்திட்டங்கள் மற்றும் பயிர்ச்செய்கைகளுக்கு தேவையான காணிகளை வழங்குதல்.
iii. கைத்தொழில்களுக்கான காணிகளை வழங்குதல்.

* நாட்டின் சமூக அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்தல்.

i. காணிகள் இல்லாத மக்களுக்கு வீடமைப்பு நோக்கத்திற்காக காணி வழங்குதல்.
ii. அரச கொள்கை ரீதியில் மேற்கொள்ளப்படும் விஷேட கருத்திட்டங்களுக்காக காணி வழங்குதல்.
iii. வழிப்பாட்டிடங்களுக்கு காணி வழங்குதல்.
iv. மக்களுக்காக பொது அலுவலகங்களின் பொருட்டு காணி வழங்குதல்
v. அரச நிறுவனங்களுக்கு காணி வழங்குதல்.

* வருமானம் சேகரிக்கும் கருத்திட்டங்களை செயற்படுத்தல்.

i. நிலத்திலுள்ள வளங்களினால் வருமானங்களை சேகரித்தல்.
ii. குத்தகை அடிப்படையில் காணிகளை கையளித்து குத்தகை வருமானங்களை சேகரித்தல். அரசு சார்ந்த, அரசு சாராத நிறுவனங்கள், அத்துடன் ஆட்களிடம் இருந்து கிடைக்கவுள்ள பணத்தொகைகளை அறவிடுதல்.

* நிறுவனத்தின் அமைப்பான்மை கட்டமைப்பை அமைவுபடுத்தல்.

v. பயிற்றப்பட்ட மற்றும் வினைத்திறன்மிக்க பதவியினரை உருவாக்குதல்.

vi. முறையாக கடமைகளை கையளித்தல்.

vii. அதிகாரங்களை பரவலாக்கி கடமைகளை கையளித்தல்.

viii. பதவியினரை கலந்துரையாடல்கள், செயலமர்வுகள் மற்றும் பயிற்சி ஆகியவற்றில் பங்குபெறச்செய்வித்தல்.

* நிறுவனத்தில் பணிகளை வினைத்திறன்மிக்கதாகவும் பயனுள்ளதாகவும் நிறைவேற்றுவதற்கு பௌதீக வளங்களை வழங்குவதோடு வேண்டிய வசதிகளை ஏற்படுத்தல்.

## காணி சீர்திருத்த ஆணைக்குழு

**கடமைப்பொறுப்புகள்**

சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக கையளிக்கப்பட்டுள்ள கடமைப்பொறுப்புகளுக்கு மேலதிகமாக அவ்வப்போது அரசாங்கத்தால் மேற்கொள்ளகின்ற கொள்கை முறையிலான தீர்மானங்களின் பிரகாரம், ஆணைக்குழுவின் இக் கடமைப்பொறுப்புகளை விரிவான விடயவெல்லைக்குள் அமுல்படுத்த வேண்டியுள்ளது.

# காணி சீர்திருத்த ஆணைக்குழு

## சட்ட அதிகாரம் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான சட்டங்கள்

1. 1972 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க காணி சீர்திருத்த சட்டம்.
2. 1975 ஆம் ஆண்டு 39 ஆம் இலக்க காணி சீர்திருத்த (திருத்தச்) சட்டம்
3. 1981 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க காணி சீர்திருத்த (திருத்தச்) சட்டம்
4. 1981 ஆம் ஆண்டு 39 ஆம் இலக்க காணி சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.
5. 1986 ஆம் ஆண்டு 14 ஆம் இலக்க காணி சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) சட்டம்.
6. 1986 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க காணி சீர்திருத்த (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டம்.

சட்ட இலக்கங்கள் (1) மற்றும் (2) ஆகியவற்றின் படி

| | | | |
|---|---|---|---|
| 1. | உள்ளக வெளிப்படுத்துநர்கள் | - | ஏக்கர் 563,449 |
| 2. | தங்கப்பவுன் கம்பனிகள் | - | ஏக்கர் 195,644 |
| 3. | ரூபா கம்பனிகள் | - | ஏக்கர் 228,813 |

என்ற வகையில் 987906 ஏக்கர் அளவிலான காணிகள், காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளன. மேற்படி சட்ட இலக்கங்கள் (1) மற்றும் (2) ஆகியவற்றின் படி,

i. திருத்தங்கள் - சட்ட இலக்கங்கள் 3 மற்றும் 6 ஆகியவற்றிலும்

ii. ஏற்பாடுகள் - சட்ட இலக்கங்கள் 4, 5 மற்றும் 6 ஆகியவற்றிலும் அளிக்கப்பட்டுள்ளன.

# காணி சீர்திருத்த ஆணைக்குழு

1972 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க காணிச் சீர்திருத்த சட்டத்தின் படி ஸ்தாபிக்கப்பட்ட காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் கட்டமைப்பு கீழ் குறிப்பிட்டுள்ளவாறாகும்.

1. கௌரவ விடயபொறுப்பு அமைச்சர் அவர்களால் நியமனம் செய்கின்ற - தவிசாளர்

2. கௌரவ விடயபொறுப்பு அமைச்சர் அவர்களால் நியமனம் செய்கின்ற உறுப்பினர்கள் - 05

3. உத்தியோகபூர்வ முறையில் நியமனம் பெறுகின்ற உறுப்பினர்கள் - 03

ஆணைக்குழுவின் பணிகளை அமுல்படுத்தும் பொருட்டு இவ் ஆணைக்குழுவால் மேற்கொள்கின்ற தீர்மானங்கள் மற்றும் அனுமதிகள் பயன்படுத்தப்படுகின்றன. அத்துடன் ஒவ்வொரு பணிகளுக்கும் ஆணைக்குழுவின் அனுமதி பெற்றுக்கொள்ளப்படுகிறது. 1972 ஆம் ஆண்டு தொடக்கம் 2014.12.31 ஆந் திகதி வரை 663 ஆணைக்குழுவின் கூட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

**சட்டத்தில் பிரிவு 45 (1) அ இன் கீழ் நியமனம் செய்யப்பட்ட தவிசாளர்**

| தொடர் இல. | பெயர் | நிரந்தர பதவி | நியமனத் திகதியும் அங்கத்துவம் வகித்த காலப் பகுதியும் | அலுவலக முகவரி | தொலை பேசி இல. |
|---|---|---|---|---|---|
| 01 | சட்டத்தரணி நிமல் ஜீ புஞ்சிஹேவா | தவிசாளர் காணி சீர்திருத்த ஆணைக்குழு | 2008.03.12 தொடக்கம் 2014.12.31 வரை | C 82 ஹெக்றர் கொப்பேகடுவ மாவத்தை கொழும்பு - 07. | 011-2698798 |

**02. சட்டத்தின் பிரிவு 45(1) ஆ வின் கீழ் நியமனம் செய்யப்பட்ட உறுப்பினர்கள்**

| தொடர் இல | பெயர் | நிரந்தர பதவி | நியமனத் திகதியும் அங்கத்துவம் வகித்த காலப் பகுதியும் | அலுவலக முகவரி | தொலை பேசி இல. |
|---|---|---|---|---|---|
| 01 | சட்டத்தரணி திரு. ஹரிகுப்தா றோஹனதீர | நிறைவேற்றுப் பணிப்பாளர் | 2008.06.04 ஆந் திகதி தொடக்கம் 2014.12.31 வரை | காணி சீர்திருத்த ஆணைக்குழு, C 82, ஹெக்டர் கொப்பேகடுவ மாவத்தை, கொழும்பு - 07. | 011-2693967 |
| 02 | திருமதி. எம் அனோமா நந்தனி | பணிப்பாளர் | 2012.11.23 ஆந் திகதி தொடக்கம் 2014.12.31 ஆந் திகதி வரை | தேசிய வரவுசெலவு திணைக்களம், பொது திறைசேரி, கொழும்பு-01. | 011-2484500 |
| | திரு.எஸ்.ஆர். டபிள்யூ.எம்.பீ.சத்குமார | பணிப்பாளர் | 2012.11.23 ஆந் திகதி தொடக்கம் 2014.12.31 ஆந் திகதி வரை | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் | 071-5320029 |
| 03 | திரு.யு.கே.எஸ். மிஹிந்துகுலசூரிய | மேலதிக செயலாளர் | 2013.09.01 ஆந் திகதி தொடக்கம் 2014.08.25 ஆந் திகதியிலிருந்து இன்று வரை | பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, 55/75, வொக்ஷோல் ஒழுங்கை, கொழும்பு – 02. | 0112-438707 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திரு.எம்.ஏ.எல்.எஸ். என்.கே.மந்திரிநாயக்க | மேலதிக செயலாளர் | 2014.09.23 ஆந் திகதி தொடக்கம் 2014.12.31 ஆந் திகதி வரை | | |
| 4. | பீ.டபிள்யூ.சேனாரத்ன | ஆலோசகர் | 2007.01.01 ஆந் திகதி தொடக்கம் 2014.12.31 ஆந் திகதி வரை | மிலோதா நிறுவனம், ஒல்கட் மாவத்தை, கொழும்ப 11. | 071-4450080 |

## 03. சட்டத்தில் பிரிவு 45 (1) இ வின் கீழ் உத்தியோகபூர்வமாக நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்

| தொடர் இல | பெயர் | நிரந்தர பதவி | நியமனத் திகதியும் அங்கத்துவம் வகித்த காலப் பகுதியும் | அலுவலக முகவரி | தொலை பேசி இல. |
|---|---|---|---|---|---|
| 01. | திரு.ஆர்.பீ.ஆர். ராஜபக்ஷ | காணி ஆணையாளர் நாயகம் | 2010.08.19 ஆந் திகதி தொடக்கம் இன்று வரை | காணி ஆணையாளர் திணைக்களம், பத்தரமுள்ள | 0112-866172 |
| 02 | எம்.ஏ.எஸ். வீரசிங்க | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகம் | 2012.05.24 ஆந் திகதி தொடக்கம் இன்று வரை | கமநல அபிவிருத்தி திணைக்களம், இல: 42, ஸ்ரீமத் மாகஸ்பர்னாண்டோ மாவத்தை, கொழும்பு-07. | 0112-672712 |
| 03 | திரு.கே.ஜீ. ஸ்ரீயாபால | கமத்தொழில் பணிப்பாளர் நாயகம் | 2012.06.25 அந் திகதி வரை | விவசாய திணைக்களம் கன்னொறுவ பேராதனை | 081-2388331 |

# பௌதீக வளங்களின் முகாமை

| தொடர் இல. | சொத்துக்களின் வகை | ஆண்டு தொடக்கத்தில் இருந்த நிலை | ஆண்டிற்குள் ஏற்பட்ட மாற்றங்கள் | | | | ஆண்டு முடிவில் இருந்த நிலை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | விற்பனை | கொள்வனவு | | | |
| 01 | கெப் வண்டிகள் | 13 | 02 | 01 | | | 12 |
| 02 | மோட்டார் வாகனங்கள் | 01 | | 01 | | | 02 |
| 03 | மயிக்ரோ கயிரன் ஜீப் வண்டிகள் | 02 | | | | | 02 |
| 04 | வான் | 01 | 01 | 01 | | | 01 |
| 05 | மோட்டார் சைக்கிள்கள் | 01 | 01 | | | | |
| 06 | டுப்ளோ இயந்திரங்கள் | 01 | | | | | 01 |
| 07 | நிழற்பட பிரதி இயந்திரங்கள் | 06 | | | | | 06 |
| 08 | கணினிகள் | 41 | | 06 | | | 47 |
| 09 | கணினி அச்சுப் பொறிகள் | 31 | | | | | 31 |
| 10 | லெப்டொப் கணினிகள் | 01 | | | | | 01 |
| 11 | பெக்ஸ் இயந்திரங்கள் | 20 | | | | | 20 |
| 12 | தட்டச்சுக்கள் | 03 | | | | | 03 |
| 13 | காப்புப் பெட்டிகள் (லொக்கர்கள்) | 10 | | | | | 10 |
| 14 | கெமராக்கள் | 01 | | | | | 01 |
| 15 | தொலைக்காட்சிப் பெட்டிகள் | 01 | | | | | 01 |
| 16 | குளிர்சாதனப் பெட்டிகள் | 01 | | 01 | | | 02 |
| 17 | றோனியோ இயந்திரங்கள் | 02 | | | | | 02 |
| 18 | ஒலிபெருக்கி இயந்திரங்கள் | 01 | | | | | 01 |

## காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிற்றொகுதி

காணிச் சீர்திருத்த சட்டத்தின் கீழ் கையளிக்கப்பட்ட காணிகள் மற்றும் பௌதீக வளங்கள் ஆகியவற்றை மக்களினதும் தேசத்தினதும் சுபீட்சம் கருதி வழிநடாத்தும் முன்னணி நிறுவனமாக உருவாகுதல் எதிர்கால நோக்கமாகும். இதனை அடிப்படையாகக்கொண்டு காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பிரதான நிறைவேற்று அலுவலராக தவிசாளர் பணியாற்றுவதுடன், அவரின் உதவிக்காக நிறைவேற்றுப்பணிப்பாளர், பணிப்பாளர் நாயகம், பிரிவுகளுக்கு பொறுப்பான பணிப்பாளர்கள் மற்றும் உதவிப்பணிப்பாளர்கள் உள்ளிட்ட 390 உத்தியோகத்தர்களை கொண்ட பதவியணி காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றுகின்றது.


குறித்த பதவியணி தலைமை அலுவலகத்தில் 14 பிரிவுகளையும் 20 மாவட்ட அலுவலகங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.

## 2014.12.31 ஆந் திகதியில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பணிற்றொகுதி

| தொடர் இலக்கம் | பதவி | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | தற்போதுள்ள எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01. | பணிப்பாளர் நாயகம் | 01 | | 01 |
| 02. | பணிப்பாளர் நிர்வாகம்-செயலாளர் | 01 | 01 | - |
| 03. | பணிப்பாளர் - நிதி | 01 | 01 | - |
| 04. | பணிப்பாளர் - சட்டம் | 01 | - | 01 |
| 05. | பணிப்பாளர் - காணி | 01 | 01 | - |
| 06. | பணிப்பாளர்- அளவிடல் (ஒப்பந்தம்) | - | 01 | - |
| 07. | உதவிப்பணிப்பாளர் (நிர்வாகம்) | 01 | 01 | - |
| 08. | உதவிப்பணிப்பாளர்(நிதி) | 02 | 03 | - |
| 09. | உதவிப்பணிப்பாளர் (சட்டம்) | 03 | 04 | - |
| 10. | உதவிப்பணிப்பாளர் (புலனாய்வு) | 01 | 01 | - |
| 11. | உதவிப்பணிப்பாளர் (மாகாணம்) | 20 | 20 | - |
| 12. | உதவிப்பணிப்பாளர் (கருத்திட்ட விவசாய அபிவிருத்தி) | 01 | 01 | - |
| 13. | உதவிப்பணிப்பாளர் (காணி உச்ச எல்லை) | 01 | 01 | - |
| 14. | உதவிப்பணிப்பாளர் (காணி பாராதீனப்படுத்தல்) | 01 | 01 | - |
| 15. | உதவிப்பணிப்பாளர் (மதிப்பீடு மற்றும் நட்டஈடு) | 01 | - | 01 |
| 17. | உதவிப்பணிப்பாளர் | 01 | - | 01 |

| | | | | |
|---|---|---|---|---|
| | (அளவைகள்) | | | |
| 18. | உள்ளக கணக்காய்வாளர் | - | 01 | - |
| 19. | தனிப்பட்ட உதவியாளர் IV | - | 01 | - |
| 20. | கணக்கு அலுவலர் | 01 | - | 01 |
| 21. | நிர்வாக அலுவலர் | 01 | 01 | - |
| 22. | தகவல் தொழில்நுட்ப அலுவலர் | 01 | 01 | 01 |
| 23. | மதிப்பீட்டு அலுவலர் | 01 | - | - |
| 24. | மதிப்பீடுடு பரிசோதகர் | 03 | - | 03 |
| 25. | பதவிநிலை உதவியாளர் V | - | 23 | - |
| 26. | கணக்கு அலுவலர் V | - | 05 | - |
| 27. | திட்டமிடலாளர் | 02 | - | 02 |
| 28. | போக்குவரத்து உதவியாளர் | 01 | 01 | - |
| 29. | முகாமைத்துவ உதவியாளர் | 215 | 241 | - |
| 30. | சாரதிகள் | 17 | 17 | - |
| 31. | அலுவலக பணியாளர் | 44 | 43 | - |
| | | 354 | 370 | 11 |

# Organization Structure



**செயலாற்றுகை**

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் ஒவ்வொரு பிரிவால் நிறைவேற்றப்படுகின்ற பணிகள் மற்றும் 2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் திசெம்பர் 31 ஆந் திகதி வரை நிறைவேற்றியுள்ள பணிகள் தொடர்பான முன்னேற்றத்தின் சாராம்ச அறிக்கை பின்வருமாறாகும்.

**பணிகள்:-**

i. காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் அனைத்து பணிகள் தொடர்பில் தேவையான அனுமதிகளையும் ஆலோசனைகளையும் வழங்குதல்.

ii. அலுவலகத்திற்கு வருகை தரும் பொது மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

iii. அமைச்சின் கூட்டிணைப்புடன் நிறுவன நடவடிக்கைகளை முறைசார்படுத்தல்.

iv. மேன்மைதங்கிய சனாதிபதி மற்றும் கௌரவ அமைச்சர் ஆகியோருடன் கூட்டிணைப்பினை மேற்கொள்ளுதல்.

## 2. முகாமைத்துவ மற்றும் மனித வள அபிவிருத்தி பிரிவு

**பணிகள்**

i. பிரதான அலுவலகத்தில் எல்லா பிரிவுகளாலும் சமர்ப்பிக்கப்படும் ஆணைக்குழு பத்திரிக்கைகளை பரிசீலனை செய்து பணிப்பாளர் சபையிடம் முன்வைத்தல்

ii. பணிப்பாளர் சபையின் கூட்ட அறிக்கைகளை பெற்றுக்கொள்ளுதல் மற்றும் அவற்றை உரிய பிரிவுகளிடம் அனுப்பி வைத்தல்

iii. கருத்திட்ட குழுக்களை கூட்டுதல் மற்றும் அதற்கு ஏற்புடையதான அறிக்கைகளை பெற்றுக்கொள்ளுதல்

iv. காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் எல்லா அலுவலர்களுக்கும் ஏற்புடையதாகும் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

v. ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு, இடமாற்றம், வேதனவேற்றங்கள் மற்றும் ஊழியர் நிர்வாகம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

vi. மாவட்ட அலுவலகங்களின் கூட்டிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

vii. அலுவலர்களுக்கு ஏற்புடையதான நலனோம்பல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

viii. அலுவலக தேவைகளை பூர்த்திசெய்தல்.

ix. அன்றாட அலுவலக பேணுதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

x. பெறுகை நடவடிக்கைகளை பேணிச்செல்லுதல்

xi. பொதுமக்கள் தினத்தை பேணிச்செல்லுதல்

xii. நிறுவனத்தின் இணைந்த திட்டம், செயற்றிட்டம், ஆண்டறிக்கை மற்றும் ஏனைய அறிக்கைகளை தயாரித்தல்

xiii. சுற்றுநிருபங்களை வெளியிடுதல்

xiv. ஓய்வுபெற்ற மற்றும் இராஜினமா செய்த அலுவலர்களுக்காக பணிக்கொடை கொடுப்பனவு, ஊழியர் சேமநல நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் என்பவற்றை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

xv. பொது வைபவங்களை ஒழுங்கமைத்தல்

xvi. பொது வாகன முகாமைத்துவ முறைமையை பேணிச்செல்லுதல்

xvii. நிறுவனப் பதவியினரின் ஒழுக்காற்று நடவடிக்கைகளை பேணிச்செல்லுதல்

xviii. கணக்காய்வு அறிக்கைகளை பேணிச்செல்லுதல் மற்றும் அரச தொழில்முயற்ச்சி தொடர்பாக கணக்கு செயற்குழுவிடம் தேவையான தகவல் அறிக்கைகளை சமர்ப்பித்தல்

xix. ஆண்டு அறிக்கைகளை அமைச்சரவையிடமும் பாராளுமன்றத்திடமும் அனுப்பி வைத்தல்

**2014.01.01 ஆந் திகதி தொடக்கம் 2013.12.31 ஆந் திகதி வரை நிறைவேற்றியுள்ள பிரதான பணிகள்.**

1. 1994 ஆம் ஆண்டு வரை காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் மொத்த பதவியினரின் எண்ணிக்கையான 190 பேருக்கு மட்டும் முறையான அனுமதி கிடைக்கப்பெற்றிருந்தது. மொத்த பதவியினரின் தொழில் கட்டுக்காப்பை ஏற்படுத்துவதற்காக பல ஆண்டுகள் மேற்கொண்ட முயற்சியின் பலனாக மொத்த பதவியினரின் எண்ணிக்கையை 354 ஆக உயர்த்துவதற்கு முகாமைத்துவ திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

2 அலுவலக பணிகளின் பொருட்டு இரண்டு கட்டங்களில் கணினி இயந்திரங்கள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அன்றாட கடமைகளுக்கு தேவையான உபகரணங்கள் வழங்கப்படாத சில அலுவலகங்களின் பொருட்டு தேவையான அலுவலக உபகரணங்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

3. மாவட்ட கடமைகளை துரிதப்படுத்துவதற்காகவும் வருமானங்களை விருத்தி செய்வதற்காகவும் 14 நாள்கள் என்ற வகையில் உத்தியோகபூர்வ வாகன வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

4. மாவட்ட அலுவலகங்களின் கடமைகளை துரிதப்படுத்துவதற்காகவும் வருமானங்களை விருத்தி செய்வதற்காகவும் கண்டி. குருணாகல், புத்தளம் காலி/ மாத்தறை ஆகிய நான்கு மாவட்டங்களுக்கும் நிரந்தர அடிப்படையில் கடமை பொருட்டான வாகன வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் மூலம் வருமானம் அதிகரித்துக்கொள்வதனை இலக்காக கொண்டுள்ளதுடன், வாகனத்தின் மாதாந்த குத்தகை தொகையை உரிய மாவட்ட அலுவலகத்திடம் செலுத்த வேண்டியுள்ளது.

5. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் வருமான இலக்குகளை பூர்த்தி செய்துகொள்வதற்கு பங்களிப்பு வழங்குதல் மாவட்ட அலுவலகங்களால் மேற்கொள்ளப்படுகிறது. குறித்த வருமான நிலையை தொடர்ச்சியாக பேணிச்செல்வதற்கு ஆணைக்குழுவால் ஒவ்வொரு மாவட்டத்திலும் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. இதன் கீழ் புத்தளம் தவுல் குருந்துவத்தையில் தெங்கு செய்கை கருத்திட்டமும், நுவரெலியாவில் லிந்துல பங்களாவ, சுற்றுலா விடுதியாக பேணிச்செல்வதற்கும் தற்போது நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

6. 1972 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைமை அலுவலகம் இது வரை ஹெக்றர் கொப்பாகடுவ மாவத்தை, கொழும்பு 07 இல் அரசாங்க நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சிற்குரிய சீ.81 மற்றும் சீ.82 ஆகிய கட்டிடங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இக் கட்டிடத்தின் குத்தகை மதிப்பீட்டு தொகை எதிர்காலத்திற்கு ஏற்ற வாறு அதிகரித்ததன் காரணமாக வாடகை தொகை செலுத்தல் தொடர்பாக ஏற்பட்ட

பிரச்சினை தொடர்பில் ஆணைக்குழு பல கலந்துரையாடல் சுற்றுகளை சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் நடாத்தியது.

7. நாட்டில் எல்லா மாவட்டங்களும் உள்ளடங்கும் வண்ணம் காணி இல்லாத குடும்பங்களுக்கு உறுதி வழங்கும் வைபவமொன்று நடாத்தல்

8. சனவரி மாதம் 01 ஆந் திகதி பதவியினரின் பங்களிப்புடன் புதிய ஆண்டை கொண்டாடுவதற்காக சிறிய அளவிலான வைபவமொன்றை ஒழுங்கமைத்தல்.

9. சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டின் பொருட்டு ஏப்பிரல் மாதம் 22 ஆந் திகதி பதவியினரின் பங்களிப்புடன் புத்தாண்டு வைபவமொன்றை நடாத்தல்.

10. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் ஸ்தாபகரான காலஞ்சென்ற கௌரவ ஹெக்றயர் கொப்பாகடுவ அவர்களின் 31 ஆவது ஞாபகார்த்த விழாவை முன்னிட்டு தானம் வழங்கும் வைபவமொன்று பதவியணியின் பங்களிப்புடன் செப்தெம்பர் மாதம் 25, 26, 27 ஆகிய திகதிகளில் கண்டி பொகம்பர பொமளுவ ரஜமகா விகாரையில் நடாத்தப்பட்டது.

11. அலுவலக பதவியினரின் குழு உளப்பாங்கினை விருத்தி செய்வதற்காக திசெம்பர் மாதம் 26 ஆந் திகதி வாத்துவ பிசமன்விலா வைபவ மண்டபத்தில் ஒன்றுகூடல் நிகழ்ச்சியும் பதவியினருக்கு மதிய நேர உணவு விருந்துபசாரமும் வெகு விமரிசியாக ஒழுங்கமைத்தல்.

12. சேவைப்பெறுநர்களின் கஷ்டங்களுக்கு நிவாரணம் வழங்கும் முறைமை. காணி பிரச்சினைகளை சீராக்குதல், பிரச்சினைகளை இனம்காணுதல், கலந்துரையாடல், முறைப்பாடுகளை புலனாய்வு செய்தல் ஆகியவற்றின் பொருட்டு தலைமை அலுவலகத்தில் ஒவ்வொரு புதன்கிழமையும் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப 4.00 மணி வரை பொது மக்கள் தினம் நடாத்தப்படுகின்றது. மொத்த நாடும் உள்ளடங்கும் வண்ணம் நாளொன்றுக்கு 200 - 300 இற்கும் இடையிலான சேவைப்பெறுநர்கள் பங்குபற்றுவதுடன், தவிசாளர், நிறைவேற்றுப்பணிப்பாளர், பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட கிளைகளுக்கு பொறுப்பான பணிப்பாளர்கள் ஆகியோர் முன்னிலையில் தமது பிரச்சினையை சமர்ப்பித்து நிவாரணம் பெற்றுக்கொள்வதற்கு பொது மக்களுக்கு இடவசதி அளிக்கப்பட்டுள்ளது. மாவட்ட அலுவலகங்களில் பொதுமக்கள் தினம் திங்கள்கிழமை மற்றும் புதன்கிழமை என்று இரண்டு நாள்கள் நடாத்தப்படுகின்றன.

## பயிற்சி மற்றும் செயலமர்வுகளின் பொருட்டு பங்குபற்றச் செய்வித்தல்

1. 2014.02.21 ஆந் திகதி தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை 10 நாட்கள் நிருமாணிப்பு எந்திரவியல் நிலையத்தால் நடாத்திய களஞ்சியப்படுத்தல் தொடர்பான சான்றிதழ் பாடநெறியில் ஆவணக்கூடத்தின் அலுவலரை பங்குபற்றச் செய்வித்தல்.

2. 2014.07.03 மற்றும் 04 ஆகிய இரண்டு நாட்களில் எல்லா மாவட்ட பணிப்பாளர்கள் மற்றும் தலைமை அலுவலகத்தில் பணிப்பாளர்கள் ஆகியோரின் முன்னேற்ற மீளாய்வு கூட்டமும், அதற்கு சமமாக இலங்கை தேயிலை சபை கேட்போர் கூடத்தில் செயலமர்வும் நடாத்தப்பட்டன.

3. வழக்கு பணிகளை மேற்கொள்கின்ற ஆணைக்குழுவின் எல்லா அலுவலர்களுக்கும் 2014.08.22 ஆந் திகதி பயிற்சி செயலமர்வொன்று நடாத்தப்பட்டது.

4. கள அலுவலர்களின் பொருட்டு 2014.09.12 ஆந் திகதி பயிற்சி செயலமர்வு நடாத்தப்பட்டது.

5. 2014.09.18 ஆந் திகதி நடைபெற்ற நிருமாணிப்பு மற்றும் எந்திரவியல் பயிற்சி நிறுவனத்தின் மூலம் வழிநடாத்திய நிர்வாக முறைமைகள் மற்றும் மனித வள முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி நிகழ்ச்சியில் அலுவலரொருவரை பங்குபற்றச் செய்வித்தல்

6. அலுவலர்களின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக கணக்கு அலுவல்களை நிறைவேற்றுகின்ற எல்லா அலுவலர்களுக்கும் 2014.09.19 ஆந் திகதி செயலமர்வொன்று நடாத்தப்பட்டது.

7. 2014.10.03 ஆந் திகதி இரத்தினபுரி, காலி, மாத்தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட்ட பணிப்பாளர்களுக்கு முன்னேற்ற மீளாய்வு கூட்டம் நடாத்தல்

8. 2014.11.17 மற்றும் 18 ஆகிய இரண்டு நாட்கள், திறன் அபிவிருத்தி நிதியத்தால் வழிநடாத்திய கணக்கு புத்தகங்களை முறையாக பேணுதல் தொடர்பான பயிற்சி பாடநெறிக்கு இரண்டு அலுவலர்களை பங்குபற்றச் செய்வித்தல்.

9. 2014.11.29 ஆந் திகதி தொடக்கம் 20 அலுவலர்களை திறன் அபிவிருத்தி அமைச்சின் பயிற்சி அபிவிருத்தி மன்றத்தால் வழிநடாத்திய கணினி பாடநெறியில் பங்குபற்றச் செய்வித்தல்.

## மாவட்ட அலுவலகங்கள்

2014 ஆம் ஆண்டு திசெம்பர் மாதமாகும் போது, 20 மாவட்ட அலுவலகங்களை பேணிச்செல்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முழு இலங்கையிலும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் மாவட்ட அலுவலகங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளதுடன், மாவட்ட அலுவலகங்களின் முகவரிகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 01. | **களுத்துறை**<br>பணிப்பாளர்<br>மாவட்ட காணிச் சீர்திருத்த அதிகாரச் சபை<br>220, பழைய வீதி,<br>களுத்துறை.<br>தொலைபேசி இல:- 034-2223611 | 11 | **கேகாலை**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச் சீர்திருத்த அதிகாரச் சபை<br>அரசாங்க அதிபர் அலுவலகம்,<br>கேகாலை,<br>தொலைபேசி இல:- 035-2222664 |
| 02. | **காலி**<br>பணிப்பாளர்,<br>காணிச் சீர்திருத்த அதிகாரச் சபை,<br>மாவட்ட அலுவலகம்,<br>காலி,<br>தொலைபேசி: 091-2232357 | 12. | **அம்பாறை**<br>பணிப்பாளர்,<br>காணிச் சீர்திருத்த அதிகாரச் சபை,<br>மாவட்ட அலுவலகம்,<br>அம்பாறை,<br>தொலைபேசி: 063-2224021 |
| 03. | **மாத்தளை**<br>பணிப்பாளர்,<br>காணிச் சீர்திருத்த அதிகாரச் சபை,<br>மாவட்ட அலுவலகம்,<br>மாத்தளை,<br>தொலைபேசி: 066-2232357 | 13. | **மட்டக்களப்பு**<br>பணிப்பாளர்,<br>காணிச் சீர்திருத்த அதிகாரச் சபை,<br>மாவட்ட அலுவலகம்,<br>மட்டக்களப்பு,<br>தொலைபேசி: 065-2222986 |
| 04. | **மாத்தறை**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச் சீர்திருத்த அதிகாரச் சபை,<br>24, சம்போதி மாவத்தை,<br>பல்லேமுல்லை,<br>மாத்தறை,<br>தொலைபேசி: 041-22220 | 14. | **இரத்தினபுரி**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச் சீர்திருத்த அதிகாரச் சபை,<br>பொதுச்செயலக கட்டிடம்,<br>நவ நகரம்,<br>இரத்தினபுரி<br>தொலைபேசி: 045-2222492 |
| 05. | **மொணராகலை**<br>பணிப்பாளர்,<br>காணிச் சீர்திருத்த அதிகாரச் சபை,<br>ஜனசவி கட்டிடம்,<br>கச்சேரி சந்தி,<br>மொணராகலை,<br>தொலைபேசி: 055-2277208 | 15. | **எம்பிலிபிட்டிய**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச் சீர்திருத்த அதிகாரச் சபை,<br>இலக்கம் 12 பி,<br>மொத்த களஞ்சிய வீதி, நவ நகரம்,<br>எம்பிலிபிட்டிய,<br>தொலைபேசி: 047-2261801 |

| | | | |
|---|---|---|---|
| 06. | **கண்டி**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச் சீர்திருத்த அதிகாரச் சபை,<br>4 ஆவது மாடி,<br>புதிய பொதுச்செயலகம்,,<br>கண்டி,<br>தொலைபேசி: 081-2222316 | 16. | **மாதம்பே**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச் சீர்திருத்த அதிகாரச் சபை,<br>சேனாநாயக்க ஆரண்ய முன்னிலையில்<br>பழைய நகரம் மாதம்பே,<br>தொலைபேசி: 032-2247183 |
| 07. | **கம்பகா**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச் சீர்திருத்த அதிகாரச் சபை,<br>கிராமிய அபிவிருத்தி கருத்திட்ட கட்டிடம்,<br>கச்சேரி தொகுதி,<br>கம்பகா,<br>தொலைபேசி: 033-2230134 | 17. | **அநுராதபுரம்**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச் சீர்திருத்த அதிகாரச் சபை,<br>இலக்கம் 229,<br>தஹய்யாகம சந்தி,<br>அநுராதபுரம்<br>தொலைபேசி: 025-2225890 |
| 08. | **கொழும்பு**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச் சீர்திருத்த அதிகாரச் சபை,<br>சென்ட்ரல் பாமசி கட்டிடம்,<br>பாதுக்க<br>தொலைபேசி: 011-3154787 | 18. | **குருணாகல்**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச ்சீர்திருத்த அதிகாரச் சபை,<br>இலக்கம் 16,<br>உத்துரு வெவ வீதி,<br>குருணாகல்<br>தொலைபேசி: 037-2222553 |
| 09 | **பதுளை**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச் சீர்திருத்த அதிகாரச் சபை,<br>10/1 ஏ, தாவரவியல் பூங்கா வீதி,<br>பதுளை,<br>தொலைபேசி: 055-2222308 | 19. | **நுவரெலியா**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச் சீர்திருத்த அதிகாரச சபை,<br>அய்.ஆர்.டி.பி.கட்டிடம்,<br>உடுபுஸ்ஸல்லாவ வீதி,<br>நுவரெலியா<br>தொலைபேசி: 052-2235385 |
| 10. | **அம்பாந்தோட்டை**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச் சீர்திருத்த அதிகாரச் சபை,<br>பிரதேச செயலகம்,<br>தங்கல்லை<br>தொலைபேசி: 047-2241766 | 20 | **யாழ்ப்பாணம்,**<br>பணிப்பாளர்,<br>மாவட்ட காணிச் சீர்திருத்த அதிகாரச் சபை,<br>மாவட்ட அலுவலகம்,<br>யாழ்ப்பாணம்,,<br>தொலைபேசி: 021-2219326 |

**மாவட்ட அலுவலகத்தின் கடமைப்பொறுப்புகள்**

- களா நடவடிக்கைகளில் ஈடுபடுதல்
- காணி பங்கீட்டாளர்களை தெரிவு செய்கின்ற விசாரணைகளில் பங்குபற்றுதல் மற்றும் அவர்களை அறிவுறுத்துதல்
- அரசாங்கத்தின் தேவைப்பாடுகளின் பொருட்டு நிறுவனங்களுக்கு காணி வழங்கும் போது தலையிடுதல்
- தலைமை அலுவலகத்தின் அனுமதிப்படி பகிர்ந்தளிப்பதற்குள்ள காணிகளை அரசாங்க நிறுவனங்களிடத்திலிருந்து விடுவித்துக்கொள்ளும் நடைமுறையினை செயற்படுத்தல்.
- பங்கீட்டாளர்களிடையே காணி பகிர்ந்தளிப்பதற்காக ஏ/எல் படிவத்தை பரிசீலனை செய்து பரிந்துரை செய்தல்.
- தவிசாளர், நிறைவேற்றுப்பணிப்பாளர் ஆகியோரின் ஆலோசனைக்கமைவாக தேவையான சந்தர்ப்பங்களில் விசேடமான கள விசாரணைகளில் பங்குபற்றுதல்
- அலுவலகத்தின் புதன்/திங்கள் ஆகிய நாட்களில் பொது மக்கள் தினத்தை நடாத்துதல் மற்றும் அதற்கு ஏற்புடைய கடமைகளை நிறைவேற்றுதல்.
- காணி ஆவணத்தை இற்றைப்படுத்தலுக்கு தேவையான தகவல்களை தொகுத்து கோவைகளை பேணிச்செல்லுதல்
- மாவட்டத்தின் வழக்குகளுக்கு பணிப்பாளர்கள் செல்ல வேண்டிய சந்தர்ப்பங்களில் பங்குபற்றுதல்
- கொள்கைகள் மற்றும் முக்கியமான தீர்மானங்கள் என்பவற்றை மேற்கொள்வதற்காக தவிசாளர் அவர்களிடம் அறிக்கையிடுதல்
- கடமை அலுவல்களின் பொருட்டு வருகை தரும் பொது மக்கள் மற்றும் வெளிப்படுத்துநர்கள் ஆகியோரின் பொருட்டு தவிசாளரின் கண்காணிப்பின் கீழ் அவர்களின் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்குதல்
- மாவட்ட அலுவலகத்தின் நிதிசார் நடவடிக்கைகளை கண்காணித்தல்
- வருமானம் சேகரித்தல்

- வெளிக்கள அலுவலர்களின் கள நடவடிக்கைகளை கண்காணித்தல் மற்றும் பயிற்றுவித்தல்

- வெளியிடப்பட்டுள்ள வெளிக்களத்தில் இனம்காணப்படாத காணிகள் மற்றும் வெளிப்படுத்தாத 50 ஏக்கருக்கு அதிகமான காணிகள் தொடர்பான தகவல்களை கண்டறிதலும் அறிக்கையிடலும் மேற்கொள்ளல்.

- ஆணைக்குழுவின் எதிர்கால நடவடிக்கை கருதி வருமான நிலைமைகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

- கள அலுவலர்களால் சமர்ப்பிக்கின்ற விசாரணை அறிக்கைகள் தொடர்பில் தேவையான கள விசாரணைகளை மேற்கொள்ளுதல்

- பங்கீட்டாளர்களை அறிவுறுத்தல் மற்றும் தெரிவு செய்யும் விசாரணைகளில் பங்குபற்றுதல்

- காணி நிருணயம் தொடர்பான விசாரணைகளை நடாத்தல்

- உறுதி வழங்கும் வைபவங்களை ஒழுங்கமைத்தல்

## 04. <u>உள்ள கணக்காய்வுப் பிரிவு</u>

### <u>அறிமுகமும் பணிகளும்</u>

i. 1972 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க காணிச்சீர்திருத்த சட்டம் மற்றும் 1971 ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவின் நிதிக் கோவை பகுதி 11 பிரிவு 2 உப பிரிவு 01-03 இன் கீழ் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களுக்கமைவாக கடமைகளை நிறைவேற்றுதல்.

ii. காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ள விவசாய காணிகளுக்கான நட்டஈடு மற்றும் வட்டி செலுத்தல் தொடர்பான முன் கணக்காய்வுகளை மேற்கொள்ளுதல்.

iii. உறுதிகளை தயாரிக்கும் போது அதற்கு ஏற்புடையதான கடித ஆவணங்கள் உள்ளனவா?, மதிப்பீட்டு அறிக்கைகளில் உள்ள பணத்தை அறவிடுதல், ஆள்களின் நிலைமை ஆகியவற்றின் செவ்வைத்தன்மையை பரிசீலனை செய்தல்.

iv. கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை பிரகாரம் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் இறுதி கணக்குகளில் குறிப்பிடுகின்ற குறைபாடுகளை குறைத்துக்கொண்டு எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உதவி வழங்குதல்

v. கணக்காய்வாளர் அதிபதியிடமிருந்து கிடைக்கப்பெறும் கணக்காய்வு உசாவுதல்களுக்கு ஏற்புடையதாக, சம்பந்தப்பட்ட பிரிவுகளிடமிருந்து தகவல்களை கோருதல், போதுமானதா என்று பரிசீலனை செய்தல் மற்றும் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளின் பிரகாரம் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**2014.01.01 ஆந் திகதி தொடக்கம் 2014.12.31 ஆந் திகதி வரை நிறைவேற்றியுள்ள பணிகள்**

**01. நிதிப்பிரிவு நடவடிக்கைகளின் கணக்காய்வு**

i. கிடைக்கப்பெறுதல்களதும் கொடுப்பனவுகளதும் பரிசீலனை

2014 ஆம் ஆண்டில் மாதிரி பரிசீலனையாக சனவரி, யூலை, செப்தெம்பர் ஆகிய மாதங்களுக்கு ஏற்புடையதாக 193393 மற்றும் கணக்கிலக்கம் 1443 இற்கு ஏற்புடையதாக காசேடு, பணம் கையளிக்கும் வவுச்சர்கள், பற்றுச்சீட்டுப்புத்தகங்கள், பணம் வைப்புச் செய்யும் பற்றுச்சீட்டுகள், வங்கி கூற்று, வங்கி கணக்கிணக்கு கூற்று, பணக்கட்டளை பதிவேடு, செலுத்தல் வவுச்சர்கள் மற்றும் வரவு செலவு குறித்த செலவு விடயத்தின் கீழ் குறிப்பிடுதல் செவ்வையாக உள்ளதா எனவும், காசோலைகளை இரத்துச்செய்யும் பதிவேடு மற்றும் உப பத்திரிக்கைகள் செவ்வையானதா எனவும் கணக்காய்வு செய்தல்.

ii கணக்கிலக்கம் 1415 இற்கு ஏற்புடையதான மாற்றங்களை செவ்வையாக குறிப்பிடப்பட்டுள்ளதா என பரிசீலனை செய்தல்.

iii பணிக்கொடை பணம் செலுத்தல் வவுச்சர் 14 இல் முன் கணக்காய்வுகளை மேற்கொள்ளுதல்.

iv காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் ஊழியர்கள் உள்ளீர்க்கப்பட்டுள்ளதால் அடிப்படை சம்பளத்தில் அமர்த்தியதற்கு அமைவாக எல்லா ஊழியர்களதும் சம்பள பத்திரிக்கைகளை கணக்காய்வு செய்தல்.

v சிறாப்பர் பிரிவில் புத்தகங்கள் மற்றும் பணம் என்பவற்றை சரிபார்தல் - 02 சந்தர்ப்பங்கள்

vi. பிரதான களஞ்சியத்தை பரிசீலனை செய்யும் சந்தர்ப்பங்கள் - 01

vii. இடர் கடன், ஒரு மாத கடன், பாடசாலை புத்தகங்கள் கடன் பேரேடை மாதிரி பரிசீலனைக்குட்படுத்தல்

viii. 2014 ஆம் ஆண்டில் போனஸ் வவுச்சர்களை கணக்காய்விற்கு உட்படுத்தல் (லீவு ஆவணங்களுடன்)

02. மதிப்பீட்டு மற்றும் நட்டஈட்டு பிரிவு நடவடிக்கைகளின் கணக்காய்வு

i. நட்டஈட்டு கடிதக்கோவைகள் 16 ம் வட்டி செலுத்தும் கடிதக்கோவைகள் 08 ம் முன் கணக்காய்விற்குட்படுத்தல்'

ii. நட்டஈடு மற்றும் வட்டி செலுத்தல் முடிவுறுத்துவதற்கு முடியாத சந்தர்ப்பங்கள்

- காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு காணி வெளிப்படுத்துநர்களின் உரித்துகளை உறுதிபடுத்தாமையால் நட்டஈடு செலுத்துவதற்கு முடியாமை.
- நட்டஈடுக்குப்பதிலாக மாற்று காணிகளை கோருதல்.
- பயன்கொள்ளலை பொறுப்பேற்கும் சான்றிதழ்கள் இல்லாமை.
- வெளிப்படுத்துநர்களிடத்தில் அனுப்பி வைக்கப்பட்ட நட்டஈட்டு அளிப்பு கடிதத்திற்கு அனுமதி கிடைக்கப்பெறாமை மற்றும் வவுச்சரகளை கையொப்பமிட்டு கையளிக்காமை.
- வர்த்தமானி அறிவிப்புகளை வெளியிடப்பட்டு நட்டஈடுகளை தீர்மானித்தல்.

நட்டஈடு செலுத்துவதற்கு ஏற்புடையதாக சட்டத்தின் பிரிவு 29 இன் கீழ் வர்த்தமானி அறிவிப்புகளை வெளியிடுவதற்கு உள்ள கடிதக்கோவைகளின் எண்ணிக்கை தொடர்பான தகவல்களை பணிப்பாளருடன் (மதிப்பீடு மற்றும் நட்டஈடு) கலந்துரையாடப்பட்டு அதனை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிடம் சமர்ப்பித்த பின்னர் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைத்தல்.

03. காணி கையளிப்பு பிரிவின் கணக்காய்வு

காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவில் உள்ள சுற்றுநிருபங்கள் மற்றும் வழிகாட்டல்கள் என்பவற்றை கடைபிடித்து காணி உறுதிகளை வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காணி கையளிப்பு பிரிவில் ஏ/எல் விண்ணப்பபடிவங்கள் மற்றும் உரிய ஆவணங்களை கையளிக்கும் கடிதக்கோவைகள் என்பவற்றுடன் கணக்காய்வு செய்தல்.

04. வருமானப் பிரிவு நடவடிக்கைகளின் கணக்காய்வு

i. பேரேடுகள் பேணிச்செல்வதனை பரிசீலனை செய்தல்.

ii. நிலுவை குத்தகை பணத்தை அறவிடும் நடைமுறைகளின் பரிசீலனை.

iii. இலக்காக கொண்டுள்ள வருமானத்தை பூர்த்தி செய்துகொள்ளல் தொடர்பான பரிசீலனை .

iv. பணிப்பாளருடன்(வருமானம்) கலந்துரையாடி குத்தகை கடிதக்கோவைகளில் உள்ள குறைபாடுகளை தயாரித்துக்கொள்வதற்காக ஏற்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிடம் சமர்ப்பித்தலும் அது தொடர்பான பின்னாய்வுகளும்.

05. முகாமைத்துவ மற்றும் மனித வளங்கள் அபிவிருத்தி பிரிவின் பணிகள்

i. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் ஊழியர்களது வரவு மற்றும் வெளியேறல் குறிப்பு பத்திரங்களையும் லீவு அட்டவணைகளில் சம்பளமற்ற லீவுகளின் பரிசீலனையும் மேற்கொள்ளுதல்.

ii. காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குரிய வாகனங்களை பழுதுபார்த்தல், ஓட்டக்குறிப்புகளின் மாதிரிகளை பரிசீலனை செய்தல்'

iii. கேள்விச்சபைகளின் நடவடிக்கைகளை பரிசீலனை செய்தல்

iv. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் மொத்த ஊழியர்களை புதிய ஆட்சேர்ப்புத்திட்டத்தின் படியும் முகாமைத்துவ சேவைகள் இலக்கம் 30 இன் படியும் மேற்கொண்ட உள்ளீர்ப்புச் செயற்பாட்டை பரிசீலனை செய்தல்

06. சட்டப்பிரிவின் கணக்காய்வு

சட்டச்செலவுகளை குறைப்பதற்காக சட்டப்பிரிவின் வழக்கு கோவைகளை பரிசீலனை செய்த பின்னரும் சட்ட அலுவலர்களுடன் கலந்துரையாடிய பின்னரும் முகாமைத்துவ குழுவிடம் சமர்ப்பித்ததுடன், அதன் மூலம் மேற்கொண்ட தீர்மானங்களுக்கமைவாக துரிதமான பிரேரணைகளை சமர்ப்பித்தல்.

06. கணக்காய்வு உசாவுதல்களுக்கு பதில் அனுப்புதல்

i. 2014 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக கிடைக்கப்பெற்ற 21 கணக்காய்வு உசாவுதல்களின் பொருட்டு கிளைகளிலிருந்து தகவல் கோருதல் மற்றும் அதன் படி பதில் கடிதங்களை தயாரித்து சமர்ப்பித்தல்

ii. 1971 ஆம் ஆண்டு 58 ஆம் இலக்க நிதி சட்டத்தின் கீழ் 14(2) சீ பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதி அறிக்கைக்கு பதில் அளித்தல்

07. முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு குழு கூட்டம் நடாத்தல்

2014 ஆம் ஆண்டில் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு குழு கூட்டம் 04 ஐ நடாத்தி மேற்கொண்ட தீர்மானங்களை ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்து உரிய பிரிவுகளுக்கு அறிக்கையிடல் மற்றும் அவை தொடர்பாக பின்னாய்வுகளை மேற்கொள்ளல்.

08. மாவட்ட அலுவலகங்களில் கணக்காய்வுப் பரிசீலனை

நுவரெலியா, களுத்துறை, கொழும்பு, மாத்தறை, எம்பிலிபிட்டிய, அம்பாந்தோட்டை, பதுளை, கண்டி, அம்பாறை, புத்தளம், மற்றும் மாத்தளை ஆகிய மாவட்ட அலுவலகங்களில் வரவு பதிவேடு, லீவு பதிவேடு, கணக்குகள் தொடர்பான புத்தகங்களும் ஆவணங்களும், பொருள் பதிவேடு, கள அலுவலர்களின் வேலை குறிப்புகளும் களச்சோதனையும், உரிய கொடுப்பனவு பெயர் அட்டவணை, காணி பதிவேடு, வரி பதிவேடு மற்றும் பதவியினரின் கடமைகளை கையளித்தல் ஆகியவற்றை பரிசீலனை செய்தல்

09. ஆணைக்குழுவின் தீர்மானங்கள் மற்றும் கருத்திட்ட தொழில்நுட்ப குழு தீர்மானங்கள் என்பவற்றை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக பின்னாய்வுகளை மேற்கொள்ளல்.

தலைவர் அவர்கள், நிறைவேற்றுப்பணிப்பாளர் ஆகியோரின் திடீர் அழைப்புகள், கலந்துரையாடல்கள் மற்றும் கூட்டங்கள் என்பவற்றில் பங்குகொள்ளுதல்.

## <u>04. காணிகளின் உச்ச எல்லைப்பிரிவு</u>

### <u>அறிமுகமும் பணிகளும்</u>

i. உச்ச எல்லைக்கு கூடிய அதாவது 50 ஏக்கருக்கு அதிகமான விவசாய காணிகள் உரித்தாகியிருந்த நபர்களிடமிருந்து வெளிப்படுத்தல்களை பெற்றுக்கொள்ளுதல்.

ii. வெளிப்படுத்தல்களை சமர்ப்பித்த நபர்களிடமிருந்து அதாவது, வெளிப்படுத்துநர்களின் விருப்பம் படி அவர்களின் காணிகளில் 50 ஏக்கரை

நியதிச்சட்ட தீர்மானத்தின் பிரகாரம் ஒதுக்கிகொள்வதற்கு வர்த்தமானியில் வெளியிடுவதன் ஊடாக கையளித்தல்.

iii. வெளிப்படுத்துநரின் கோரிக்கை படி 1972.08.26 ஆந் திகதியில் 18 வயதை கடந்துள்ள அவரின் பிள்ளைகள் அல்லது பெற்றோர்கள் ஆகியோரில் ஒருவருக்கு 50 ஏக்கர் என்ற வரையறைக்கு அமைவாக காணி சீர்திருத்த சட்டத்தில் பிரிவு 14 இன் கீழ் காணிகளை வழங்குதல்.

iv. வெளிப்படுத்துநர் 1972.08.26 ஆந் திகதியில் 18 வயதுக்கு குறைவாக இருப்பினும், காணிகளின் உரித்து இருந்த பிள்ளைகளுக்கு வெளிப்படுத்துநரின் கோரிக்கை படி ஒருவருக்கு 50 ஏக்கர் என்ற உச்ச எல்லைக்கு அமைவாக சட்டத்தில் பிரிவு 22 ஈ இன் கீழ் காணித்துண்டுகளை வழங்குதல்.

v. மேற்படி சட்டத்துடனான பிணைப்புகளின் பொருட்டு காணிகளை வழங்கியதன் பின்னர், ஆணைக்குழுவிடம் கையளிக்கப்படும் காணிகளின் அளவு தொடர்பான தகவல்களை நட்டஈடு செலுத்துவதற்கு மதிப்பீட்டு மற்றும் நட்டஈட்டு பிரிவிடம் அனுப்பி வைத்தல்

01. 2014 ஆம் ஆண்டில் 2014.01.01 ஆந் திகதி தொடக்கம் 2014.12.31 ஆந் திகதி வரை முன்னேற்றம்

| | | | |
|---|---|---|---|
| i. | தலைவர்கள், நிறைவேற்றுப்பணிப்பாளர், பணிப்பாளர் நாயகம் ஆகியோரிடம் அறிக்கைகள் சமர்ப்பித்தல் | - | 207 |
| ii. | மாவட்ட அலுவலகத்தில் அறிக்கைகளை கோருதல்/கிடைக்கப்பெறுதல் | - | 196 |
| iii. | கிளைகள்/மாவட்ட அலுவலகங்களுக்கு பதில் மற்றும் விபரங்கள் என்பவற்றை வழங்குதல் | - | 364 |
| iv. | அமைச்சுக்கள்/நிறுவனங்கள்/நபர்கள் ஆகியோருக்கு கடிதங்கள் அனுப்புதல் | - | 321 |
| v. | மதிப்பீட்டு அறிக்கைகளை கோருதல்/கிடைக்கப்பெறுதல் | - | 43 |
| vi. | சனாதிபதி உசாவுதல்கள்களுக்கான பதில்கள் | - | 22 |
| vii. | கோவையிடல் | - | 190 |
| viii. | ஆணைக்குழு பத்திரிக்கைகளை தயாரித்தல் | - | 81 |
| ix. | வழக்குகளில் பங்குபற்றுதல் | - | 128 |
| x. | வழக்கு கலந்துரையாடல்களில் பங்குபற்றுதல் | - | 41 |
| xi | பணிகள் முடிவுறுத்தப்பட்ட கடமைகள் | - | 39 |

2. வர்த்தமானி அறிவிப்புகளை தயாரித்தல்

- கா/30 இரத்துச்செய்தல் (லேல்வலை வத்தை)
- கொ/3365 22 (1) ஈ வர்த்தமானி திருத்தம் (ரைகம வத்தை)
- மாத் /85 இரத்துச் செய்தல்

**22(1) அ பிரிவின் கீழ் பாராதீனப்படுத்தல்**

- கொ/3440 22(1)அ (நியதிச்சட்ட தீர்ப்பு) 01
- கா/125 22(1)அ (நியதிச்சட்ட தீர்ப்பு மாற்று ) உறுதிகள் 01
- கண்டி/41 22(1)அ (நியதிச்சட்ட தீர்ப்பு மாற்று ) உறுதிகள் 01
- கொ/3260 22(1)அ (நியதிச்சட்ட தீர்ப்பு மாற்று ) உறுதிகள் 01
- கொ/3417 22(1)அ (நியதிச்சட்ட தீர்ப்பு மாற்று ) உறுதிகள் 01
- கே/28 22(1) அ (நியதிச்சட்ட தீர்ப்பு மாற்று) உறுதிகள் 01
- புத்/205 22(1)அ (நியதிச்சட்ட தீர்ப்பு மாற்று ) உறுதிகள் 01
- மா/35 22 (1)அ (நியதிச்சட்ட தீர்ப்பு மாற்று) 01
- இர/131 22(1) அ (குடும்பத்திற்குள் பராதீனப்படுத்தல ) உறுதிகள் 01
- கே/15 22(1) அ (குடும்பத்திற்குள் பராதீனப்படுத்தல்)உறுதிகள் 01
- குரு/33 22(1) அ (குடும்பத்திற்குள் பராதீனப்படுத்தல) உறுதிகள் 01

**422(1) ஈ பிரிவின் கீழ் பாராதீனப்படுத்தல்**

- குரு/33 22(1)ஈ (குடும்பத்திற்குள் பராதினப்படுத்தல்) உறுதிகள் 02
- கே/32 22(1) ஈ (குடும்பத்திற்குள் பராதினப்படுத்தல்) உறுதிகள் 02
- கொ/2073 22(1) ஈ (குடும்பத்திற்குள் பராதினப்படுத்தல்) உறுதிகள் 01
- கொ/2237 22(1) ஈ (குடும்பத்திற்குள் பராதினப்படுத்தல் மாற்று) உறுதிகள் 01
- கா/159 22(1) ஈ (குடும்பத்திற்குள் பராதினப்படுத்தல்) உறுதிகள் 03
- கொ/1370 22(1) ஈ (குடும்பத்திற்குள் மாற்றுதல்கள்) உறுதிகள் 01

**522(1)இ பிரிவு**

- அம்/04 22(1)ஈ பிரிவு உறுதிகள் 01

614 ஆவது பிரிவு

- கொ/2971 14 ஆவது பிரிவு (குடும்பத்திற்குள் பராதீனப்படுத்தல்) உறுதிகள் 02

- கே/21 14 ஆவது பிரிவு (குடும்பத்திற்குள் பராதினப்படுத்தல்) உறுதிகள் 02
- கே/76 14 ஆவது பிரிவு (குடும்பத்திற்குள் பராதினப்படுத்தல்) உறுதிகள் 01
- கெ/2770 14 ஆவது பிரிவு (குடும்பத்திற்குள் பராதினப்படுத்தல்) உறுதிகள் 01
- கே/18 14 ஆவது பிரிவு (குடும்பத்திற்குள் பராதினப்படுத்தல்) உறுதிகள் 01
- பது/105 14 ஆவது பிரிவு (குடும்பத்திற்குள் பராதினப்படுத்தல்) உறுதிகள் 01
- இர/104 14 ஆவது பிரிவு (குடும்பத்திற்குள் பராதினப்படுத்தல்) உறுதிகள் 02
- கொ/1551 14 ஆவது பிரிவு (குடும்பத்திற்குள் பராதினப்படுத்தல்) உறுதிகள் 02
- கே/73 14 ஆவது பிரிவு (குடும்பத்திற்குள் பராதினப்படுத்தல்) உறுதிகள் 01
- பது/73 14 ஆவது பிரிவு (குடும்பத்திற்குள் பராதினப்படுத்தல்) உறுதிகள் 01

**03. ஏனைய**

காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பாகவும், ஆணைக்குழுவினால் விடுவிக்கப்பட்டுள்ள காணிகள் தொடர்பாகவும் ஆணைக்குழுவிடம் தற்போது பதிவேடுகள் இருந்த போதிலும் , இறுதியான செவ்வையான பதிவேடு இல்லாமை நிறுவனம் நீண்டகாலமாக எதிர் நோக்கியுள்ள பிரச்சினையாகும்.

குறித்த நீண்ட கால பிரச்சினையை தீர்க்கும் பொருட்டு நியதிச்சட்ட வெளியீடுகளின் மூலம் இது வரை நியதிச்சட்ட பிணைப்புகளுக்காக வழங்குவதற்கு முடியாத போன காணிகளின் அளவுகளை குறித்துரைத்து கணக்கிடுவதற்கும், ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்ட சகல காணிகளின் பயன்கொள்ளல் மற்றும் உரித்து ஆகியன ஆணைக்குழுவிற்கு உரித்தாகியுள்ளது என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கும், ஆணைக்குழுவிற்கு உரியதாக இருந்த காணிகளில் அப்புறப்படுத்தல்கள் என்பன உள்ளடக்கப்பட்டு பிரிதொரு ஒதுக்கத்தின் மூலம் காணி பதிவேடின் கடமைகளை நிறைவேற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், குறித்த பணிகளில் 90% அளவிலான முன்னேற்றத்தை தற்போது அண்மித்துக்கொள்வதற்கு முடிந்துள்ளது.

## 5. மதிப்பீட்டு மற்றும் நட்டஈட்டுப்பிரிவு

### அறிமுகமும் பணிகளும்

i. நட்டஈடு தொடர்பான காணிகளது உரித்துகளின் செவ்வைத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்ளுதல்

ii. உரிமைகள், நட்டஈடு பகிர்ந்து செல்லுதல் மற்றும் மரணச்சொத்து வழக்கு தொடர்பான (நட்டஈடுகளுக்கு ஏற்புடையதாக) விசாரணைகளை மேற்கொள்ளுதல்

iii. வெளிப்படுத்துநர்களிடமிருந்து இறுதியாக ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ள காணிகளின் பொருட்டு நட்டஈடு செலுத்தல்

iv. காணி கையளிப்புகள், விற்பனைகள் ஆகியவற்றுக்காக அரசாங்கத்தின் மதிப்பீட்டு அறிக்கைகளை கோருதல்

பிரிவின் கடமைப்பொறுப்புகள்

இப்பிரிவின் கடமைப்பொறுப்புகள் இரண்டு பகுதிகளை கொண்டமைந்துள்ளது

01. ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ள காணிகளின் பொருட்டு நட்டஈடு செலுத்தல். (நட்டஈட்டுப்பிரிவு)
02. ஆணைக்குழுவிற்குரிய காணிகளை விற்பனை செய்தல், குத்தகைக்குவிடுதல் என்பவற்றுக்காக பிரதான மதிப்பீட்டாளரிடமிருந்து அறிக்கைகளை கோருதல்.

கடமைப்பொறுப்பு 01

1. i. வெளியிடப்பட்டுள்ள காணிகளிலிருந்து ஆணைக்குழுவிற்குரிய காணிகள் தொடர்பாக நட்டஈடு செலுத்துவதற்கு பணியாற்றுதல்

இதற்காக 1972 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க காணிச்சீர்திருத்த ஆணைக்குழு சட்டத்தில் 29 ஆவது பிரிவு தொடக்கம் சட்டத்தில் காட்டப்பட்டுள்ள 42 ஆவது பிரிவு மூலம் அளிக்கப்பட்டுள்ள சட்டத்துடனான ஒதுக்கீடுகள் மற்றும் திருத்தச்சட்டம் மூலம் காட்டப்பட்டுள்ள வழிகாட்டல்களை பயன்படுத்தப்படுகிறது.

கடமைப்பொறுப்பகள் 02

2. i. காணிச்சீர்திருத்த ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் காணிகளை விற்பனை செய்தல், குத்தகைக்குவிடுதல் என்பவற்றுக்காக அரசாங்கத்தின் பிரதான மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கைகளை கோருதல், குறித்த மதிப்பீட்டு பெறுமதிகளை எதிர்கால நடவடிக்கைகளின் பொருட்டு காணி கையளிப்பு, காணிகளின் உச்ச எல்லை மற்றும் கருத்திட்டப்பிரிவிடம் அறிக்கையிடுதல்.

ii. மேற்படி 02 ஆவது நடைமுறைக்கு மேலதிகமாக குத்தகை திருத்தம் செய்வதற்கு சனாதிபதி செயலாளரின் SEI/A/4/34 இலக்கம் கொண்ட சுற்றுநிருபத்தின் கீழ் காட்டப்பட்டுள்ள வாறு குத்தகையை திருத்தம் செய்வதற்காக பணியாற்றுதல். (பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீடுகளை கோருவதற்கு அமைவாக)

iii. மரங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் மொத்த மதிப்பீட்டு அறிக்கைகளை தயாரித்தல்

## 2014 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

| தொடர் இலக்கம் | செயற்பாடுகள் | பௌதீக | | | | நிதிசார் காணி விற்பனை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | காணி குத்தகைக்கு விடுதல் | விற்பனைகள் | குடும்பத் திற்குள் பராதீனப்படுத்தல் | நட்டஈடு மற்றும் வட்டி செலுத்தல் | குத்தகைக்கு வழங்குதல் ரூபா | மாற்றங்களின் பேரில் விற்பனை ரூபா | விற்பனைகள் ரூபா. | ஏனைய உழைப்புகள் ரூபா | செலுத்தல்கள் ரூபா |
| 01 | மதிப்பீடுகள் கோருதல் | 70 | 335 | 36 | | | | | | |
| 02' | வெளியிடப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகள் | 66 | 419 | 14 | | 27.832.085<br>குத்தகை முன்னேற்றம் 4% மற்றும் 6% | 32.723.549.47 | 569.139.069.30 | | |
| 03 | குத்தகை திருத்தங்கள் | | | | | | | | 3.488.345.00 | |
| 04 | மரங்களின் மதிப்பீடு | | 194 | | | | | | 1.390.636.73 | |
| 05 | கருங்கற்கள் மற்றும் ஏனைய | - | - | - | | | இல்லை | | 8.480.000.00 | |
| 06 | செவை கட்டணங்களின் உழைப்பு | - | - | - | | | | | 3.499.360 | |
| 07 | வெளிப்படுத்துநர்களின் பொருட்டு நட்டஈடு செலுத்தல் | - | - | - | 20 | | | | | 4.667.689.47 |

## 06.காணி கையளிப்பு பிரிவு

## கடமைப்பொறுப்புகள்

i. வீடமைப்பு நோக்கங்களின் பொருட்டு நபர்களிடம் காணிகளை கையளித்தல்

ii. அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளுக்கு காணிகளை விற்பனை செய்தல் / குத்தகைக்குவிடுதல்

iii. விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு காணித்துண்டுகளை விற்பனை செய்தல்

iv. காணி கச்சேரிகளை நடாத்துதல் மற்றும் அனுமதியற்ற ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை கூட்டிணைத்தல்

v. அளவை கட்டளைகள் தொடர்பான நடவடிக்கைகள்

vi. அளவை தொடர்பான பிரச்சினைகளுக்கு ஆலோசனை வழங்குதல்

vii. மாவட்ட அலுவலகங்களுக்கு கள அறிக்கைகளை பெற்றுக்கொள்ளுதல்

viii. அளவை திட்டங்களுக்கு ஏற்புடையதான நடவடிக்கைகளை கூட்டிணைத்தல்

ix. அத்துமீறல் குடியிருப்பாளர்கள் தொடர்பான பதிவேடுகளை இற்றைப்படுத்தல் மற்றும் பின்னாய்வுகளை மேற்கொள்ளுதல்

x. அத்துமீறல் குடியிருப்பவர்களை அகற்றுதல், அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் மற்றும் விசாரணைகளை நடாத்துதல்.

xi. கா. ஒழுங்குப்படுத்தல் படிவங்களை பெற்றுக்கொள்ளுதல், கண்காணித்தல் மற்றும் பின்னாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

xii. பின்னுரித்தாளிகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

xiii. காணி விற்பனை விண்ணப்பங்கள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

xiv. மாவட்ட அலுவலகங்களின் இணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

**2014.01.01 ஆந் திகதி தொடக்கம் 2014.12.31 ஆந் திகதி வரை நிறைவேற்றியுள்ள பணிகள்**

**i. விற்பனை**

| | ஆட்களின் எண்ணிக்கை | அளவு | | |
|---|---|---|---|---|
| | | ஏக். | ரூட். | பேச் |
| i. வீடமைப்பு நோக்கங்களின் பொருட்டு நபர்களிடம் கையளிப்பதற்காக உறுதிகளை தயாரிப்பதற்கு அனுப்பி வைத்தல். | 2400 | 688 | 1 | 29.9 |
| ii. அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளுக்கு காணி விற்பனைக்காக உறுதிகளை தயாரிப்பதற்கு அனுப்பி வைத்தல். | 34 | 172 | 3 | 38.04 |
| iii. நபர்களிடம் விற்பனைக்காக (வயல் காணிகள்) உறுதிகளை தயாரிப்பதற்கு அனுப்பி வைத்தல். | 25 | 27 | 2 | 06.08 |

## 7. கருத்திட்டப்பிரிவு

### அறிமுகமும் கடமைப்பொறுப்புகள்

i. காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குரிய காணிகளை குத்தகைக்கு விடும் போது (கருத்திட்டங்களின் பொருட்டு) கடைபிடிக்கப்படும் உரிய முறைமைக்கு அமைவாக காணிகளை குத்தகைக்குவிடுதல்.

ii. கருத்திட்டங்களின் பொருட்டு காணிகளை குத்தகைக்கு விடுவதற்கு முதல் கருத்திட்ட குழுவிடம் சமர்ப்பித்தல்

iii. பணிப்பாளர் சபையின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்காக உரிய அறிக்கைகளை தயாரித்தல்

iv. விடயபொறுப்பு அமைச்சரின் அனுமதிக்கு சமர்ப்பித்தல்

v. மதிப்பீட்டு அறிக்கைகளை கோருதல்

vi. குத்தகை பணத்தை அறவீட்டு முறையான வாடகை உடன்படிக்கையை வழங்குதல்

| | 2014 ஆம் ஆண்டின் இலக்குகள் | 2014 ஆம் ஆண்டின் முன்னேற்றம் |
|---|---|---|
| புதிய குத்தகைக்கு விடுதல்கள் | 33 | 66 |
| உடன்படிக்கையற்ற குத்தகைகாரர்களை உடன்படிக்கைகளில் உட்படுத்திக்கொள்ளுதல் | 15 | 09 |
| அங்கீகரிக்கப்பட்ட முதலீட்டு சபைகள்/கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சுக்க காணிகள் வழங்குதல் | 20 | 06 |
| கருத்திட்ட குழுக்களிடம் சமர்ப்பித்தல் | 30 | 22 |
| கனிம வளங்கள் சார்ந்த பொருளாதார கருத்திட்டங்கள்(மணல், கருங்கற்கள், சிலிகா,டொலமயிட் மற்றும் இரத்தினக்கல்) | 44 | 12 |

1. அளவை கட்டளை விடுத்தல்

    I. கைத்தொழில் நடவடிக்கைகளின் பொருட்டு - 26

    II. விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு - 49

    III. கனிம வளங்கள் - 10

    IV. ஏனைய அலுவல்கள் - 20

2. ஆணைக்குழுவின் அனுமதியின் பொருட்டு சமர்ப்பித்தல்

    I. கைத்தொழில் நடவடிக்கைகளின் பொருட்டு - 36

    II. விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு - 28

    III. கனிம வளங்கள் - 12

    IV. ஏனைய விடயங்கள் - 18

    V. பிரதான மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீட்டு அறிக்கைகளை கோருதல் - 12

    VI. மதிப்பீடுகளை அறிவித்தனுப்பிய கடிதங்களின் எண்ணிக்கை - 38

    VII. மதிப்பீட்டுத் தொகை - ரூபா.122,936.473.07

VIII. குத்தகை உடன்படிக்கை தயாரிப்பதற்கு அனுப்பிவைத்தல்கள் - 26

IX. கருத்திட்ட குழுக்களின் பொருட்டு சமர்ப்பித்த எண்ணிக்கை - 22

## 08. உறுதிப்பிரிவு

### அறிமுகமும் பணிகளும்

**நோக்கங்கள்:-**

விவசாய நடவடிக்கைகள், வீடமைப்பு நோக்கங்கள் மற்றும் விவசாயமல்லாத நடவடிக்கைகளின் பொருட்டு குத்தகை அடிப்படையிலும் விற்பனை அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்ட நபர்கள், நிறுவனங்கள் என்பவற்றுக்காக காணிகளை அகற்றப்படுவதுடன், அவ்வாறு மேற்கொள்கின்ற அகற்றப்படுதல்கள் உறுதிகள் தயாரிப்பதன் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

**கடமைப்பொறுப்புகள்:-**

நாட்டில் எல்லா மாவட்டங்களும் உள்ளடங்கும் வண்ணம் 2014 ஆம் ஆண்டில் 3500 இற்கு அண்மித்த பயனுகரிகளுக்கு உறுதி வழங்கப்பட்டுள்ளது. மொத்தமாக இதன் படி இப்பிரிவால் ஏறத்தாழ 55000 இற்கு அண்மித்த பயனுகரி குடும்பங்களுக்கு காணிகளின் உரித்து வழங்கப்பட்டுள்ளது.

2. **2014 ஆம் ஆண்டில் வழங்கிய உறுதிகளின் எண்ணிக்கை**

| மாவட்டம் | உறுதிகளின் எண்ணிக்கை |
|---|---|
| கொழும்பு | 122 |
| கம்பகா | 341 |
| கேகாலை | 365 |
| களுத்துறை | 185 |
| மாத்தளை | 85 |
| பதுளை | 251 |
| குருணாகல் | 220 |
| புத்தளம் | 385 |
| கண்டி | 385 |
| நுவரெலியா | 218 |
| அநுராதபுரம் | 60 |
| மட்டக்களப்பு | 103 |
| அம்பாறை | 102 |

| | |
|---|---|
| திருகோணமலை | 15 |
| மாத்தறை | 110 |
| அம்பாந்தோட்டை | 45 |
| காலி | 218 |
| இரத்தினபுரி | 111 |
| மொணராகலை | 98 |
| எம்பிலிபிட்டிய | 81 |
| மொத்தம் | **3500** |

ii. 2014 ஆம் ஆண்டில் உறுதிகளை வழங்கியதன் பின்னர் வங்கி கடிதங்கள் மற்றும் கையளிப்பு கடிதங்கள் வழங்கியதன் மூலம் கிடைக்கப்பெற்ற வருமானம்

| மாதம் | வருமானம் |
|---|---|
| சனவரி | 1,24,000.00 |
| பெப்ரவரி | 1,12,000.00 |
| மார்ச் | 1,18,500.00 |
| ஏப்பிரல் | 1,03500,00 |
| மே | 2,22,500.00 |
| யூன் | 1,28,500.00 |
| யூலை | 1,19,500.00 |
| ஆகஸ்ட் | 1,26,000.00 |
| செப்தெம்பர் | 1,20,000.00 |
| ஒக்டோபர் | 1,29,500.00 |
| நவம்பர் | 2,16,500.00 |
| திசெம்பர் | 2,14,500.00 |
| மொத்தம் | 1,835,000.00 |

## 09. அளவைகள் மற்றும் ஒதுக்கீட்டுப்பிரிவு

### கடமைகள்

வீடமைப்பு நோக்கங்களின் பொருட்டு காணிகளை வழங்குதல், வர்த்தக, விவசாய நடவடிக்கைகளின் பொருட்டு காணிகளை குத்தகைக்கு விடுதல், நியதிச்சட்ட முறையிலான தீர்ப்புகளுக்கு வழங்க வேண்டிய காணிகளை அளவிடுதல் மற்றும் அதனைச்சார்ந்த நடவடிக்கைகளை கூட்டிணைத்தல் என்பன இப்பிரிவின் கடமைப்பொறுப்புகளாகும். மாவட்ட ரீதியாக தெரிவு செய்யப்பட்ட நிள அளவையாளர்களின் பட்டியலை வருடாந்தம் நாளதுவரைப்படுத்தி அவர்களின் சேவையை பெற்றுக்கொள்கின்றனர். இதனைத்தவிர்ந்த அரசாங்கத்தின் நிள அளவையாளர் திணைக்களம் மற்றும் பிம்சவிய உள்ளிட்ட ஏனைய அரசாங்க துறையின் காணிகளை அளவிடும் நடவடிக்கைகளை கண்காணித்தல் இப் பிரிவு மூலம் மேற்கொள்ளப்படுகிறது. அதே போன்று இப்பிரிவு மூலம் 2014 ஆம் ஆண்டில் ஏறத்தாழ மொத்தமாக 3384 ஏக்கர் காணிகளை விற்பனை மூலம் அகற்றப்பட்டுள்ளது.

i. அனைத்து மாவட்டங்களிலும் அளவை நடவடிக்கைகளின் பொருட்டு ஆலோசனை வழங்கி கண்காணித்தல் மற்றும் ஒவ்வொரு காணிகளின் பொருட்டும் அளவைப்படங்களை பரிசீலனை செய்து அங்கீகரித்தல்

ii குத்தகைக்குவிடுதல், நியதிச்சட்ட தீர்ப்பு மற்றும் குடும்பத்தில் கையளிப்புகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட வரைப்படங்களை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு வழங்குதல்

iii. தேவைக்கேற்ப களத்தின் அளவை நடவடிக்கைகள், காணிகளை இனம்காணுதல் என்பவற்றுக்காக கள அலுவல்களில் ஈடுபடுதல்.

iv. காணி உச்ச எல்லையின் கீழ் உறுதிகளை தயாரித்தல்

## 2014 ஆம் ஆண்டில் அளவைகள் மற்றும் ஒதுக்கீட்டுப்பிரிவின் முன்னேற்றம்

| ாதம் | அங்கீகரிக்கப்பட்ட அளவைகள் | துண்டுகள் | அளவு | | | | திருத்தங்கள் | வழங்கிய பிரதிகளின் எண்ணிக்கை | அதற்காக அறவிடப்பட்ட தொகை (ரூபா) | 10% கண்காணிப்பு கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ஏக்கர் | ரூட் | பேர்ச் | ஹெக்டெயார் | | | | |
| னவரி | 44 | 2025 | 1003 | 1 | 25 | 406,0581 | 12 | 31 | 41,000.00 | |
| பெப்பரவரி | 28 | 523 | 205 | 3 | 12 | 83.2933 | 09 | 33 | 36,000.00 | |
| ார்ச் | 50 | 412 | 491 | 2 | 36 | 198.9930 | | 45 | 49,000.00 | 139,100.00 |
| ரப்பிரல் | 41 | 1135 | 1741 | 1 | 36 | 705.1398 | - | 18 | 26,000.00 | 414,324.00 |
| மே | 23 | 167 | 143 | 1 | 30 | 58.0467 | 02 | 18 | 21,000.00 | 22,800.00 |
| ூன் | 27 | 483 | 330 | 3 | 33 | 133.9309 | 02 | 25 | 25,000.00 | 62,750.00 |
| ூலை | 40 | 756 | 743 | 0 | 31 | 300.7532 | 02 | 25 | 26,000.00 | 115,350.00 |
| ஆகஸ்ட் | 29 | 1165 | 993 | 1 | 36 | 402.0395 | 04 | 29 | 35,000.00 | 253,100.00 |
| செப்தெம்பர் | 35 | 352 | 342 | 3 | 15 | 138.7420 | 08 | 82 | 93,000.00 | 130,517.00 |
| ஒக்டோபர் | 37 | 854 | 526 | 3 | 37 | 213.2587 | 06 | 91 | 101,000.00 | 130,517.00 |
| நவம்பர் | 26 | 333 | 296 | 4 | 25 | 1202542 | 02 | 45 | 50,000.00 | 84,350.00 |
| திசெம்பர் | 43 | 1256 | 958 | 1 | 06 | 387.7986 | | 16 | 22,000.00 | 330,680.00 |
| **மொத்தம்** | **423** | **9461** | **7778** | **3** | **2** | **31483080** | **95** | **494** | **525,000.00** | **1.593,821.00** |

## 11. சட்டப்பிரிவு

### I. அறிமுகம்

உயர் நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம், நீதிவான் நீதிமன்றம், சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம், தொழில் நியாய சபை, தொழிலாளர் பிணக்குகள், மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் ஓம்புட்ஸ்மன் ஆகிய நிறுவனங்கள் மூலம் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு எதிராகவும், காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் நபர்கள், நிறுவனங்கள் ஆகியவற்றுக்கு எதிராகவும் என்ற வகையில் சட்டத்துடனான 448 தொழிற்பாடுகளின் பொருட்டு கடிதக்கோவைகளை தயாரித்தல், அறிக்கைகளை சமர்ப்பித்தல், பதிலாள் தொடர்பான நடவடிக்கைகள், வழக்குகளில் தோற்றுதல், சட்ட ஆலோசனைகளை பல்வேறு கையளிப்புகளின் பொருட்டு வழங்குதல் ஆகிய நடவடிக்கைகள், ஆணைக்குழுவிற்கெதிராக உள்ள வழக்குகள் தொடர்பில் செயற்படுதல் மற்றும் ஆணைக்குழுவால் வழக்குகள் தொடருதல் தொடர்பில் செயற்படுதல் சட்டப்பிரிவின் பிரதான கடமைகளாகும்.

### ii. கடமைகள்

- ❋ வழக்குகளின் பொருட்டு நீதிமன்றத்தில் தோற்றுதல்
- ❋ மாவட்ட அலுவலகங்களுக்கு ஏற்புடையதான வழக்குகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட சட்டத்தரணிகளை கூட்டிணைத்தல்
- ❋ நிறுவனத்தின் சட்டங்கள் தொடர்பாக ஆலோசனை சேவைகளை வழங்குதல்

### iii. வழக்குகளை குறைத்துக்கொள்வதற்கு மேற்கொண்ட செயற்பாடுகள்

- ❋ அளவைகளை வரைப்படமாக்கும் போது சரியான முறைமையியலை கடைபிடித்தல்
- ❋ கள அலுவலர்களை பயிற்றுவித்தல்
- ❋ சட்டத்துடனான அனுபவங்களை பிரிவுகளுக்கிடையில் பரிமாற்றிக்கொள்ளுதல்
- ❋ மாவட்ட அலுவலகங்களுடன் வழக்கு தொடர்பாக கலந்துரையாடல்

iv தற்போதுள்ள வழக்குகளின் எண்ணிக்கை

| | **2014 ஆம் ஆண்டிற்குள் முடிவுற்ற வழக்குகள் மற்றும் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ள வழக்குகள்** | **2014 ஆம் ஆண்டிற்குள் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள்** | **2014.12.31 திகதி உள்ளவாறான வழக்குகள்** |
|---|---|---|---|
| உயர் நீதிமன்றம் | 07 | - | 24 |
| மேம்முறையீட்டு நீதிமன்றம் | 09 | 10 | 35 |
| மேல் நீதிமன்றம் | 01 | 03 | 10 |
| மாவட்ட நீதிமன்றம் | 12 | 55 | 341 |
| நீதிவான் நீதிமன்றம் | 02 | 02 | 16 |
| சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம் | 14 | 12 | 18 |
| ஆரம்ப நீதிமன்றம் | - | 01 | - |
| தொழில் நியாய சபை | 01 | 01 | 02 |
| மனித உரிமைகள் ஆணைக்குள் | 01 | - | - |
| தொழில் திணைக்களம் | - | - | 02 |
| **மொத்தம்** | **46** | **84** | **448** |

## 12. புலனாய்வுப்பிரிவு

### 1. கடமைகள்

i. நபர்கள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து கிடைக்கப்பெறும் காணி முறைப்பாடுகள் தொடர்பாக கள விசாரணைகளை மேற்கொள்ளுதல்.

ii. அதற்கான தரப்புகளை வரவழைத்து விசாரணைகளை மேற்கொள்ளுதல் மற்றும் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தேவையான நடைமுறைகளை பிரேரணை செய்தல்

iii. பிரச்சினைகள் தொடர்பான கள விசாரணைகள், இட விசாரணைகள் மற்றும் புலனாய்வு நடவடிக்கைகள் ஆகியவற்றை மேற்கொள்ளுதல்

### 2. 2014 ஆண்டில் நிறைவேற்றியுள்ள பணிகள்

i. மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனைகளின் எண்ணிக்கை - 53

ii. எதிர் வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மாவட்ட அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள எண்ணிக்கை - 13

iii. வாகன விபத்துகள் தொடர்பாக மேற்கொண்டுள்ள ஆரம்ப விசாரணைகளின் எண்ணிக்கை - 03

## 13. நிதிப்பிரிவு

**கடமைகள்**

i. காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் சகல அலுவலர்களின் மாதாந்த சம்பளங்கள் மற்றும் படிகள் ஆகியவற்றை செலுத்தல்

ii. உத்தியோகத்தர்களுக்கு உரிய ஊழியர் சேம நல நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதி ஆகியவற்றை உரிய திகதிகளில் வைப்புச்செய்தல்

iii. மாதாந்த கணக்கு அறிக்கைகளை தயாரித்து ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்தல்

iv. மாதாந்த வங்கி கணக்கிணக்கு கூற்றுகளை உரிய திகதியில் தயாரித்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களிடம் சமர்ப்பித்தல்

v. மாதாந்த மற்றும் வருடாந்த கணக்கு கூற்றுகளை கணக்காய்வாளர் அதிபதி மற்றும் அமைச்சிடம் அனுப்பி வைத்தல்

vi. காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிடம் கிடைக்கப்பெறும் வருமானங்களை தேவையானவைகளுக்கு மட்டும் செலவிட்டு மீதியை பயனுள்ள முதலீடுகளில் ஈடுபடுத்தல். 20 மாவட்ட அலுவலகங்களில் நிதி நிர்வாகம், கண்காணிப்பு, ஆலோசனை வழங்குதல் மற்றும் இருப்பு புத்தகங்களை பேணிச்செல்லுதல்

vii. இறுதி கணக்கு அறிக்கைகளை தயாரித்தல்

viii. இலங்கை வங்கி, பொதுதிறைசேரி, மக்கள்வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, போன்ற நிதி நிறுவனங்களுடன் கூட்டிணைப்பு

ix. கொள்வனவு நடவடிக்கைகள்

## 14. வருமானம் பிரிவு

1.

i. காணிகளை குத்தகைக்குவிடுதல், விற்பனைகள் மூலம் கிடைக்கப்பெறும் வருமானங்களை திரட்டுதல், நிலுவை குத்தகையை அறவிடுவதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்

ii. கனியவளங்கள் மற்றும் வேறு வருமான வழிகளிலிருந்து கிடைக்கப்பெறும் வருமானத்தை திரட்டுதல்

iii. காணி கையேற்பு விசாரணைகளில் பங்குபற்றுதல் மற்றும் அதில் கிடைக்கப்பெறும் வருமானத்தை திரட்டுதல்

iv. கண்டறியாதுள்ள காணிகளை கண்டறிந்ததன் பின்னர் அதில் கிடைக்கப்பெறும் வருமானங்களை திரட்டுதல்

**2014 ஆம் ஆண்டில் நிதி முன்னேற்றம்**

| **2014.12.31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக வருமான செலவின கூற்று** | | | |
|---|---|---|---|
| | விபரம் | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
| **வருமானம்** | | | |
| உழைப்பு | 1 | 223,565,721.41 | 217,548,015.75 |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 2 | 102,339,485.53 | 98,694,306.08 |
| **மொத்த வருமானம்** | | **325,905,206.94** | **316,242,321.83** |
| | | | |
| **செலவினம்** | | | |
| நிர்வாக செலவுகள் | 3 | 223,355,075.14 | 192,400,813.52 |
| வழங்கல் மற்றும் தேவையான பொருட்கள் | 4 | 11,211,248.39 | 11,798,272.18 |
| ஏனைய செயற்பாட்டு செலவுகள் | 5 | 12,170,565.51 | 9,633,455.50 |
| நிதிசார் செலவுகள் | 6 | 5,193,735.10 | 5,313,742.73 |
| **மொத்த செலவு** | | **251,930,624.14** | **219,146 ,283.93** |
| | | | |
| **மேலதிகம்** | | 73,974,582.80 | **97,096,037.90** |
| | | | |
| **காலப்பகுதிக்கு ஏற்புடையதான தேறிய மேலதிகம்** | | 73,974,582.80 | **97,096,037.90** |
| | | | |
| 2014.01.01 ஆந் திகதியில் ஆரம்ப தேறிய மேலதிகம் | | 745,925,846.17 | 645,693,429.99 |
| | | | |
| **2014.12.31 ஆந் திகதியில் ஒதுக்கத்தின் மேலதிகம்** | | **819,900,428.97** | **742.789,467.89** |
| | | | |

# 2014.12.31 ஆந் திகதியில் ஐந்தொகை

| | விபரம் | 2014<br>ரூபா | 2013<br>ரூபா |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | – | - | - |
| ***நடைமுறை சொத்துக்கள்*** | – | | |
| பணம் மற்றும் பணத்திற்கு சமமானவை | 7 | 91,409,002.82 | 76,304,934.92 |
| கிடைக்கப்பெற வேண்டிய வட்டி | 8 | 20,727,959.34 | 20,333,273.68 |
| கிடைக்கப்பெற வேண்டிய வருமானம் | | 29,731,610.00 | 29,731,610.01 |
| வர்த்தகம் மற்றும் ஏனைய கிடைக்கப்பெற வேண்டியவைகள் | 9 | 2,218,345,567.95 | 2,218,646,521.95 |
| வைப்புகளும் முற்பணங்களும் | 10 | 59,677,971.85 | 53,778,155.89 |
| இருப்புகள்-எழுதுகருவிப்பொருட்கள் | 11 | 2,174,603.00 | 1,439,845.04 |
| | | | |
| ***நடைமுறையல்லாத சொத்துக்கள்*** | - | | |
| முதலீடுகள் | 12 | 1,036,957,466.29 | 882,558,889.63 |
| சொத்துக்கள் மற்றும் இயந்திரங்கள் | 13 | 45,546,228.97 | 57,369,066.66 |
| காணிகள் | | 676,169,345.33 | 676,169,345.33 |
| | | | |
| **மொத்த சொத்துக்கள்** | | **4,180,739,755.56** | **4,016,331,643.11** |
| **பொறுப்புகள்** | - | | |
| | | | |
| ***நடைமுறை பொறுப்புகள்*** | - | - | - |
| வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகள் | 14 | 100,578,369.37 | |

| | | | |
|---|---|---|---|
| | | | 95,381,109.55 |
| குத்தகை கடன்தருநர்கள் | 15 | 7,157,999.23 | 9,051,847.79 |
| | | | |
| ***நடைமுறையல்லாத பொறுப்புகள்*** | - | | |
| பணிக்கொடை ஒதுக்குதல் | 16 | 58,131,775.50 | 37,749,580.00 |
| குத்தகை கடன்தருநர்கள் | 17 | 3,508,486.68 | 10,095,929.37 |
| நட்டஈட்டு எதிர்பாரா கணக்கு கட்டம் 01 | | 113,276,122.66 | 119,139,914.66 |
| (நட்டஈட்டு எதிர்பாரா கணக்கு கட்டம் 11) | | 109,959,492.95 | 109,959,492.95 |
| | | | |
| **தேறிய பெறுமதி** | | | |
| அரச பங்களிப்பு மற்றும் திறைசேரி அளிப்புகள் | 18 | 1,964,075,000.00 | 1,964,075,000.00 |
| ஒதுக்கங்கள் | 19 | 1,004,152,080.20 | 928,089,300.90 |
| மொத்த மேலதிகம் | | 819,900,428.97 | 742,789,467.89 |
| | | | |
| **தேறிய சொத்துக்கள் மற்றும் தேறிய பெறுமதி** | | **4,180,739,755.56** | **4,016,331,643.11** |

……………………………..  …………………………………  ……………………………

பணிப்பாளர் /நிதி — காணி சீர்திருத்த ஆணைக்குழு

தலைவர் — காணி சீர்திருத்த ஆணைக்குழு

நிறைவேற்றுப் பணிப்பாளர் — காணி சீர்திருத்த ஆணைக்குழு

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல.
My No. எல்பீ/எப்/எல்ஆர்சீ/1/எப்ஏ/14/14

මබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date 2015 யூலை 30

தலைவர்,

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு

**காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1972 இன் 1 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் 56 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று ஆணைக்குழுவின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமை பொறுப்பாக உள்ளது.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வினை அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக்கூற்று மற்றும் நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை நிர்ணயிக்க என்னால் முடியாதுள்ளேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் காணி விற்பனையின் போது பெறப்படும் பணத்தில் 40 சதவீதம் ஒதுக்கமாகவும் 60 சதவீதம் வருமானமாகவும் கணக்கு வைக்கும் கொள்கை ஆணைக்குழுவால் தொடர்ந்தும் பின்பற்றப்பட்டிருந்ததுடன் விற்பனை செய்யப்பட்ட காணியின் கிரயம் இனங்காணப்பட்டு அதற்கான சீராக்கம் செய்யப்படாமையால் நிதி நிலைமை மற்றும் நிதி விளைவுகள் என்பன சரியான நிலைமையை காண்பிக்கவில்லை. 2006 ஆம் ஆண்டிலிருந்து 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 1,052,746,966

தொகையும் மீளாய்வாண்டில் ரூபா 131,194,166 தொகையும் விற்பனையால் பெறப்பட்ட வருமானமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் போது ரூபா 1,226,950 தொகைக்கு விற்பனை செய்யப்பட்ட மோட்டார் வாகனம் தொடர்பாகவும் கிரயத்தை இனங்கண்டு இலாபத்தைக் கணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. காணிப் பதிவேடொன்று இல்லாதிருந்தமை மற்றும் பழைய சொத்துக்கள் தொடர்பான தகவல்கள் ஆணைக்குழுவிடம் காணப்படாமையே அவ்வாறு செயற்படுவதற்கு காரணமாக அமைந்ததாக ஆணைக்குழுவின் தலைவரினால் கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

(ஆ) அட்டுறு அடிப்படை பின்பற்றப்பட்டு நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதாக கணக்கு குறிப்புக்கள் மூலம் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கணக்குகள் தயாரிக்கும் போது பெறவேண்டிய மற்றும் முற்பணப் பெறுவனவுகள் முறையே ரூபா 49,845,316 மற்றும் ரூபா 19,738,726 தொகைகளும் செலுத்தவேண்டிய பணம் ரூபா 28,567,470 தொகையும் கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் காசு உட்பாய்ச்சல்கள் மற்றும் காசு வெளிப்பாய்ச்சல்கள் வெளிப்படுத்தப்படும் வகையில் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மோட்டார் வாகன விற்பனையால் கிடைத்த ரூபா 3,488,850 தொகை காசுப் பெறுவனவாக உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆணைக்குழுவால் கையேற்கப்பட்ட காணிகளுக்காக செலுத்தவேண்டிய இழப்பீட்டிற்காக இழப்பீட்டு நிச்சயமற்ற நிதியமொன்று ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் அந்த இழப்பிற்குரிய செலுத்த வேண்டிய வட்டிக்காக ஒதுக்கமொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், இழப்பீடு செலுத்தும் போது செலுத்தப்படும் வட்டி ஆண்டின் செலவினமாக கணக்கு வைப்பதற்குப் பதிலாக மீளாய்வாண்டின் போது ரூபா 42,483 தொகை நிதியத்திலிருந்து கழித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் எதிர்காலத்தில் செலுத்தவேண்டிய வட்டி மதிப்பீடு செய்யப்பட்டு அதற்காக நிதி ஏற்பாட்டை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நிகழத்தக்க பொறுப்புக்கள்

காணி உரித்தைப் பெற்றுக்கொள்வதற்காக ஆணைக்குழுவிற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கொன்றின் முறைப்பாட்டாளர்களுக்கு ரூபா 148,715,363 தொகை செலுத்துவதற்கு 2009 ஆம் ஆண்டின் போது மேன்முறையீட்டு நீதிமன்ற தீர்ப்பொன்று வழங்கப்பட்டிருந்தது. குறித்த வட்டியுடன் செலுத்த வேண்டிய தொகை 2015 யூன் 08 ஆம் திகதி வரையில் ரூபா 200 மில்லியனை மிகைத்திருந்த போதிலும், இப் பொறுப்பிற்காக கணக்குகளில் ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

### 2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் இழப்பீட்டு தொங்கல் I ஆம் கட்டம் மற்றும் II ஆம் கட்டத்தின் கீழ் செலுத்த வேண்டிய இழப்பீட்டுத் தொகை ரூபா 223,235,616 ஆக இருந்த போதிலும், மதிப்பீடு மற்றும் இழப்பீட்டுப் பிரிவின் அறிக்கைகளின் பிரகாரம் ஆணைக்குழுவினால் இழப்பீட்டாளர்களுக்கு செலுத்த வேண்டியிருந்த இழப்பீட்டுத் தொகை வட்டியுடன் ரூபா 555,000,000 ஆகும். இதன் பிரகாரம் ரூபா 331,764,384 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டமையால் இதன் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வின் போது முடியாதிருந்தது.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் படி 108 வாடகையாளர்களுக்குரிய பெறவேண்டிய வாடகை வருமானம் ரூபா 61,154,808 ஆக இருந்த போதிலும் வருமானப் பிரிவின் அறிக்கைகளின் படி அது ரூபா 70,317,254 ஆனமையால் ரூபா 9,162,446 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) பெறவேண்டிய வாடகைக் கணக்கில் குறிப்பிடப்பட்ட 43 வாடகையாளர்களுக்குரிய ரூபா 26,760,244 தொகையான வருமானம் வருமானப் பிரிவின் அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கீழே காட்டப்பட்டுள்ள ஒவ்வொரு விடயத்திற்கு முன்னால் காட்டப்பட்டுள்ள எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமையால் அக்கொடுக்கல் வாங்கல்களின் சரியானதன்மையை சான்றுறுதிப்படுத்த அல்லது ஏற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

| கணக்கு விடயங்கள் | மீதி (ரூபா) | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| <u>நிலையான சொத்துக்கள்</u> | | |
| காணி | 676,169,345 | கையேற்கப்பட்ட காணிகள் தொடர்பான விபரங்களை உள்ளடக்கிய பட்டோலை |
| கட்டிடங்கள் | 4,586,223 | சொத்துக்கள் பதிவேடு மற்றும் மெய்மையாய்வு அறிக்கை |
| கணனி மற்றும் உபபாகங்கள் | 7,185,162 | |
| தளபாடங்களும் பொருத்திகளும் | 857,543 | |
| மோட்டார் வாகனங்கள் | 68,673,071 | |
| அலுவலக உபகரணங்கள் | 20,310,316 | |
| நலன்புரி உபகரணங்கள் | 984,896 | |
| <u>கடன் மற்றும் முற்பணங்கள்</u> | | |
| அச்சிடல் மற்றும் காகிதாதிகள் | 10,000 | மீதி உறுதிப்படுத்தல்கள் |
| எரிபொருள் முற்பணம் | 185,000 | |
| அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு | 8,270,356 | ஏற்பாடு செய்வதற்கான அடிப்படை |
| பெறவேண்டிய வருமானம் | 29,731,610 | மீதி உறுதிப்படுத்தல் மற்றும் விரிவான பட்டோலை |
| மரம் விற்பனை | 1,987,706 | மரங்களின் மதிப்பீட்டிற்குரிய ஆவணங்கள் |
| இழப்பீட்டு தொங்கல் கணக்கு | 223,235,616 | விரிவான பட்டோலை |
| காணி கையேற்றல் | 58,090,886 | |
| வயல் காணி விற்பனை | 271,896 | |
| வாடகைக்கு வழங்கப்பட்ட | | |

| | | |
|---|---|---|
| காணிகளுக்காக கிடைக்கவேண்டிய கட்டணம் | 9,689,132 தாமதக் | விரிவான பட்டோலை |

**2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் 12 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 2,135,747,805 கூட்டுத்தொகையான வியாபார கடன்பட்டோர் மீதிகளுக்கும் 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 2,921,575 கூட்டுத்தொகையான நானாவித கடன்பட்டோர் மீதிகளுக்கும் ரூபா 8,270,356 அறவிடமுடியாக்கடன் ஏற்பாடாக மேற்கொள்ளப்பட்டிருந்த போதும், அக்கடனை அறவிடுவதற்காக மீளாய்வாண்டின் போதும் ஆணைக்குழு போதியளவில் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்களில் ரூபா 2,135,625,366 தொகை 09 அரச நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டியுள்ளதாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அந்நிறுவனங்களின் நிதிக்கூற்றுக்களில் ஆணைக்குழுவிற்கு தீர்வு செய்ய வேண்டிய மீதிகள் இல்லாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) ஆணைக்குழுவின் 46 ஊழியர்களிடமிருந்து 2010 ஆண்டிலிருந்து அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 718,656 கூட்டுத்தொகையான கடன் மீதிகளிலிருந்து எவ்வித தொகையும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் காணி வாடகை முற்பணக் கணக்கில் ரூபா 13,840,850 தொகையான மீதியொன்று காணப்பட்டதுடன் அதில் ரூபா 11,215,850 தொகை 09 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகவும் ரூபா 2,625,000 தொகை 03 வருடங்கள் முதல் 08 வருடங்கள் வரை பழமையானதாகவும் இருந்தன. இந்த மீதிகளை தீர்த்து வைப்பதற்கு ஆணைக்குழு எவ்வித நடவடிக்கைகளையும் எடுத்திருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
| --- | --- |
| (அ) 1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டம் | |
| 45 (i) (அ) (iii) ஆம் பிரிவு | ஆணைக்குழுவின் கட்டுப்பாட்டுச் சபைக்காக வரிசை அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அங்கத்தவரொருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | |
| 11 ஆம் பிரிவு | நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 160,000,000 தொகை தொடர்பாக உரிய அமைச்சரினதும் நிதி விடயப் பொறுப்பு அமைச்சரினதும் இணக்கப்பாடு பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை. |
| (இ) 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டம் | ஆணைக்குழு பெறுமதிசேர் வரி அதிகாரச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படாமையின் காரணமாக அதன் அடிப்படையில் மீளாய்வாண்டில் அறவிடவேண்டிய வரி வருமானமான ரூபா 26,827,886 தொகை அரசாங்கத்திற்கு இழக்கப்பட்டிருந்தது. |

(ஈ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை

| | |
|---|---|
| II ஆம் அத்தியாயத்தின் 13.3 ஆம் பிரிவு | பணிப்பாளர் நிதி பதவி 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டதுடன் 2015 யூன் 15 ஆந் திகதி வரையிலும் அந்தப் பதவியை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(உ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்

| | |
|---|---|
| (i) நிதிப் பிரமாணம் 134(3) | உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பபட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 371(2) | * உப கட்டுநிதி வழங்கப்பட்ட செயற்பாடு நிறைவு பெற்றதும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 34 சந்தர்ப்பங்களின் போது கருத்திற் கொள்ளக்கூடிய கால தாமதத்தின் பின்னர் முற்பணம் தீர்க்கப்பட்டிருந்தது.<br><br>* ஒரு சந்தர்ப்பத்தின் போது உத்தியோகத்தரொருவருக்கு வழங்க முடியுமான ஆகக்கூடிய முற்பணத் தொகை ரூபா 20,000 ஆக இருந்த போதிலும் 3 சந்தர்ப்பங்களின் போது அந்த எல்லையினை விஞ்சி முற்பணம் வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) நிதிப்பிரமாணம் 371(4) | 19 சந்தர்ப்பங்களின் போது ஏற்படுகின்ற செலவினம் தொடர்பாக உரிய எதிர்வுகூறலின்றி முற்பணம் வழங்கப்பட்டிருந்ததுடன் வழங்கப்பட்ட முற்பணத் தொகையில் சேமிப்பு 27 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது |

| | | |
|---|---|---|
| (iv) | நிதிப்பிரமாணம் 757 | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிலையான சொத்துப்பதிவேடு முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் ஆணைக்குழுவின் நிதி விளைவுகள் ரூபா 87,130,484 மிகையாக இருந்ததுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 97,096,038 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 9,965,554 ஆன வீழ்ச்சியொன்று காணப்பட்டது. மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டினை ஒப்பிடும் போது காணி கையேற்றல் இழப்பீட்டு வட்டி வருமானம் ரூபா 15,784,616 ஆல் வீழ்ச்சியடைந்தமையும் பதவியணியினர் கிரயம் ரூபா 23,509,742 ஆல் அதிகரித்தமையும் இந்த வீழ்ச்சிக்கு பிரதான காரணங்களாக இருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் நடைமுறை விகிதம் 22:1 ஆக இருந்தது. மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள நடைமுறைச் சொத்துக்களில் 24 விடயங்களுக்குரிய ரூபா 2,158,312,885 தொகை அதாவது 90 சதவீதம் 12 வருடங்களை விஞ்சிய மற்றும் அறவிடுவதில் நிச்சயமற்ற நிலையில் காணப்படுகின்ற கிடைக்கவேண்டிய கடன் மீதிகளைக் கொண்டிருந்ததுடன் அது மொத்த சொத்துக்களில் 54 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம், ஆணைக்குழுவின் நிதி நிலைமைக்கூற்றுக்கள் நிறுவனத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களும் மற்றும் நிதி நிலைமை தொடர்பான உள்ளபடியான நிலைமையினைப் பிரதிபலிப்பதாக நிச்சயிக்க முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் பெறுமதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது ரூபா 15,104,068 இனால் உயர்வடைந்திருந்ததுடன் அதனை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 20 சதவீத அதிகரிப்பாகும்.

### 3.3 ஆணைக்குழுவிற்கு எதிராக அல்லது ஆணைக்குழுவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவிற்கு எதிராகவும் ஆணைக்குழுவினாலும் தொடரப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 448 ஆக இருந்ததுடன் அதற்காக ஆணைக்குழுவால் செலவிடப்பட்டிருந்த சட்டச் செலவினம் ரூபா 4,061,224 ஆகும்.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியின் போது இழப்பீட்டுப் பணத்தின் உரிமை தொடர்பாக ஆணைக்குழுவிற்கு எதிராக நீதிமன்றத்தில் 14 வழக்குகளும் காணி கைப்பற்றல் மீளாய்வுச் சபைக்குச் செய்யப்பட்ட 07 முறையீடுகளும் விசாரணையில் காணப்பட்டன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 10 செயற்பாடுகள் செயற்படுத்தப்படாதிருந்ததுடன் 19 செயற்பாடுகளின் செயல்முன்னேற்றம் 1 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையான குறைந்த வீச்சினைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

ஆணைக்குழுவினால் இழப்பீட்டாளர்களுக்காக செலுத்தவேண்டிய இழப்பீடு தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் 29 ஆவது பிரிவின் கீழ் இழப்பீடு செலுத்துவதற்குரிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட உரித்தாளர்கள் உறுதிப்படுத்தப்படாத 110 கோவைகளில் 106 இற்கு உரித்து உறுதிப்படுத்தப்படவில்லை. மேலும் உரித்தை

கையேற்பதிலுள்ள குறைபாடுகளினால் நடவடிக்கை எடுக்காது காணப்பட்ட கோவைகளின் எண்ணிக்கை 35 ஆகும்.

(ஆ) சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள காணிகளின் உரித்து தொடர்பாக மேலும் 575 கோவைகளுக்கு அண்மிய அளவில் தகவல்கள் பெறப்பட வேண்டியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) 1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் 33 ஆம் பிரிவின் பிரகாரம் உரித்து உறுதிப்படுத்தப்படாத அல்லது இழப்பீடு செலுத்துவதற்கு முடியாத சந்தர்ப்பமொன்றில் அந்த இழப்பீட்டிற்குரிய நபர் அல்லது நபர்களுக்கு செலுத்துவதற்காக சிவில் நீதிமன்ற அதிகாரம் உள்ள குறிப்பிட்ட நீதிமன்றமொன்றில் உரிய இழப்பீட்டுப் பணம் வைப்புச் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுப்பதற்கிருந்த கோவைக்கிடையே ஏறத்தாள 60 கோவைகளுக்கான பணத்தினை நீதிமன்றத்தில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கடந்த 5 வருடங்களின் போது தொங்கல் கணக்கு I இலிருந்து இழப்பீடு செலுத்தப்பட்டுள்ள முறை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| ஆண்டு | இழப்பீட்டு தொங்கல் கணக்கின் ஆரம்ப மீதி<br>ரூபா | இழப்பீட்டு தொங்கல் கணக்கின் இறுதி மீதி<br>ரூபா | செலுத்தப்பட்டுள்ள தொகை<br>ரூபா | சதவீதமாக |
|---|---|---|---|---|
| 2010 | 140,769,719 | 138,136,888 | 2,632,831 | 1.87 |
| 2011 | 138,136,888 | 131,287,683 | 6,849,205 | 4.96 |
| 2012 | 131,287,683 | 126,561,891 | 4,725,793 | 3.6 |
| 2013 | 126,561,891 | 119,139,915 | 7,421,976 | 5.86 |
| 2014 | 119,139,915 | 113,276,123 | 5,863,792 | 4.92 |

1972 இன் 01 ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு அதிகாரச்சட்டத்தின் 28 ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்குக் கையளிக்கப்பட்ட காணிகளுக்காக ஆணைக்குழுவினால் இழப்பீடு செலுத்த வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவின் கடந்த 5 வருடங்களின் செயலாற்றலை கருத்தில் கொள்ளும் போது இழப்பீடு மற்றும் தொங்கல் கணக்கு I இல் 05 வருடங்களில் இழப்பீட்டுப் பணம் தீர்த்தல் 1.87 சதவீதத்திலிருந்து 5.86 சதவீதம் வரையான குறைந்த வீச்சில்

இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் இழப்பீட்டு தொங்கல் கணக்கு II இலிருந்து இழப்பீடு தீர்வு செய்யப்படாமல் இருந்ததுடன் ரூபா 109,959,493 தொகையான அதன் மீதி வருடக் கணக்காக மாற்றமுறாது காணப்பட்டது.

## 4.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவின் காணி விற்பனை வருமானத்தில் 60 சதவீதம் செயற்பாட்டுச் செலவினமாகவும் 40 சதவீதம் ஒதுக்கங்களாகவும் ஏற்பாடு செய்வதற்கான ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கொழும்பு, குருணாகல், புத்தளம் ஆகிய மாவட்டங்களில் ஆணைக்குழுவின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் காணப்படுகின்ற 150,000 ஏக்கர் அளவிலான தென்னைக் காணியிலிருந்து மீளாய்வாண்டில் தென்னை வருமானமாக ரூபா 300,653 தொகை கிடைத்திருந்தது. அந்த தென்னை வருமானம் ஒட்டு மொத்த வருமானத்தில் 0.09 சதவீதத்தை விட குறைவான பெறுமதியைக் கொண்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் மதிப்பீட்டுக் கட்டண முற்பணக் கணக்கின் மீதி ரூபா 23,361,248 ஆக இருந்த போதிலும் மதிப்பீட்டுக் கட்டணமாகச் செலுத்தப்பட்ட தொகை ரூபா 3,302,303 மாத்திரமேயாகும்.

(ஈ) மீளாய்வாண்டிற்கான மாதாந்த வருமானம் ரூபா 60,000 எல்லையினை விஞ்சாத 04 மாவட்டங்கள் அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் மேலும் 04 மாவட்டங்களில் சில மாதங்களுக்காக எவ்வித வருமானமும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. மேலும் திருகோணமலை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களில் முறையே ரூபா 300,000 தொகையான காணி உரித்து வருமானம் மற்றும் ரூபா 19,300 வரி வருமானமும் ஆக குறைந்த வருமானம் கிடைத்திருந்ததுடன் அந்த அலுவலகத்தை நடாத்திச் செல்வது தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஆணைக்குழு கவனம் செலுத்தியிருக்கவில்லை.

## 4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

வெளித்தரப்பிரனர் மற்றும் ஆணைக்குழுவின் பதவியணியினர்களில் 402 அங்கத்தவர்களினால் 01 வருடம் முதல் 7 வருட காலம் வரை ரூபா 4,888,492 தொகையும் 08 வருடங்களை விஞ்சிய ரூபா 6,899,500 தொகையும் காணிகளைப்

பெற்றுக்கொள்வதற்காக முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்ததுடன் இலங்கை சுதந்திர ஊழியர் சங்கத்தின் மூலம் ஆணைக்குழுவின் ஊழியர்களுக்கு மதிப்பீட்டுப் பெறுமதியில் காணிகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கையொன்றிற்கு கிடைத்த அங்கீகாரத்தின் அடிப்படையில் அவ்வாறு காணிகளை வழங்குவதற்கு முற்பணங்களைப் பெற்றுக்கொள்வது சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்களொன்றாக இருந்தது. மேலும், சில காணிக் கோரிக்கையாளர்களிடமிருந்து 01 இற்கு மேற்பட்ட காணிக்கூறுகளை வழங்குவதற்கு முற்பணம் பெறப்பட்ட 54 சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

## 4.5 ஒப்பந்த நிருவாகத்திலான குறைபாடுகள்

ஆணைக்குழுவினால் புத்தளம் மாவட்டத்தின் காணி மறுசீரமைப்பு அதிகாரசபை அலுவலகத்திற்காக ரூபா 5,282,197 தொகையான மதிப்பீட்டில் கட்டிடமொன்றை நிர்மாணிக்கும் பணிகள் மீளாய்வாண்டின் நவம்பர் மாதத்தின் போது புத்தளம் மாவட்டச் செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இந்த நிர்மாணங்கள் தொடர்பாக மீளாய்வாண்டில் பாதீட்டு மதிப்பீட்டில் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிராததுடன் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் இந்த நிர்மாணம் தொடர்பாக உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய செலவினம் எதிர்வு கூறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வரிசை அமைச்சின் அங்கீகாரமின்றி ஆணைக்குழு தீர்மானத்தின் அடிப்படையில் மாத்திரம் இந்த நிர்மாணங்கள் புத்தளம் மாவட்டச் செயலாளருக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் நவம்பர் மாதத்தின் போது ரூபா 2,112,879 தொகை முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதன் நிர்மாண நடவடிக்கைகள் கணக்காய்வுத் திகதியான 2015 ஏப்ரல் 23 ஆந் திகதி வரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.6 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2012 ஒக்தோபர் 03 ஆந் திகதிய DMS/E2/01/7/008/2 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 307 ஆக இருந்ததுடன் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு

அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 393 ஆக இருந்தமை நிருவாகப் பிரிவிலிருந்து கணக்காய்விற்குக் கிடைத்த தகவல்களின் பிரகாரம் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குரிய அங்கீகாரம் 2015 மார்ச் 18 ஆந் திகதியே கிடைத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் இந்த ஊழியர் எண்ணிக்கையையும் மிகைத்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சேவையில் நியமிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 19 ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் வெற்றிடமாகக் காணப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை 13 ஆக இருந்ததுடன் அதில் 04 பதவிகள் பதவிநிலை உத்தியோகத்தர் வெற்றிடங்களாகும். மேலும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில்லாத பதவியொன்றிற்காக உத்தியோகத்தரொருவர் சேவையில் நியமிக்கப்பட்டிருந்தார்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 06 செயற்பாடுகளுக்காக செலவின மதிப்பீடு சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் 04 செயற்பாடுகளின் பௌதீக செயல்முன்னேற்றம் 100 சதவீதமாக இல்லாதிருந்த போதிலும் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் முழுமையான நிதியேற்பாடும் செலவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) ஆணைக்குழுவின் செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 04 செயற்பாடுகளுக்காக வருமான சேகரித்தலின் செயல்முன்னேற்றத்திற்கும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அந்த செயற்பாடுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானத்திற்கும் இடையே வேறுபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டமையால் செயல்முன்னேற்ற அறிக்கையில் காண்பிக்கப்பட்ட தகவல்களின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வின் போது திருப்திகொள்ள முடியாதிருந்தது.

(இ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் புதிதாக 03 வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக (குத்தகை முறைமையில்) ரூபா 2,500,000 தொகையான செலவினமொன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன்

மீளாய்வாண்டின் போது வாகனக் கொள்வனவொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி காணி விற்பனை மற்றும் வாடகைக்கு வழங்கல்களின் மூலமாக மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 113,350,000 ஆக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் உள்ளபடியான வருமானம் ரூபா 192,294,300 ஆக இருந்ததுடன் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் 70 சதவீதத்தை விஞ்சி வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. மேலும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் களப் பரிசோதனை மேற்கொண்டு காணி வரைபடங்களைத் தயாரிப்பதற்காக வருமான மதிப்பீடொன்று காண்பிக்கப்படாதிருந்த போதிலும் செயல்முன்னேற்றத்தில் காண்பிக்கப்படுகின்ற அறிக்கையின் பிரகாரம் வருமானம் ரூபா 60,000,000 எனக் காண்பிக்கப்பட்டமையினால் உரிய எதிர்வுகூறலின்றி வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(உ) மீளாய்வாண்டின்போது ஆணைக்குழு இழப்பீடு மற்றும் வட்டி செலுத்துவதற்காக ரூபா 1,000,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 5,863,792 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் 486 சதவீதத்தால் மதிப்பீட்டை மிகைத்து செலவு செய்யப்பட்டிருந்தது.

## 5.2 உள்ளகக் கணக்காய்வு

2014 ஆம் ஆண்டின் உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தின் படி நிதிப் பிரிவு, காணி கையளித்தல் பிரிவு மற்றும் சகல மாவட்ட அலுவலகங்களிலும் வருமான செலவின அறிக்கைகள் மற்றும் மாதாந்த கணக்கு விபரங்கள் தொடர்பான பரிசோதனையொன்று மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அத்துறைகள் மேவுகை செய்யப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பாதீட்டுக் காட்டுப்பாடு

2014 ஆம் ஆண்டின் பாதிடப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் மற்றும் உள்ளபடியான வருமானத்தையும் செலவினத்தையும் பரிசோதனை செய்தபோது வருமானத்தில் 13 சதவீதம் முதல் 129 சதவீதம் வரையிலான முரண்களும் செலவினங்களில் 1 சதவீதம் முதல் 2,950 சதவீதம் வரையிலான கவனத்தில் கொள்ளக்கூடிய முரண்களும் வெளிப்படுத்தப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக்கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்படாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 5.4 தீர்க்கப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

கணனி மென்பொருள் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்வதற்கு தனியார் நிறுவனமொன்றிற்கு 2002 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட ரூபா 17,000,000 தொகை மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் முற்பணமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும் இது தொடர்பாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பரிசோதனையொன்று நடாத்தப்படுகின்றமையும் இவ்வாறானதொரு நிறுவனமொன்று இல்லாதிருந்தமையும் கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்டதுடன் அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் எவ்வித வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுத் துறைகள் தொடர்பாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது ஆணைக்குழுவின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன், பின்வரும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சட்ட நடவடிக்கைகள்
(ஆ) கடன்பட்டோர் கட்டுப்பாடு
(இ) முதலீட்டு ஆதனங்கள்
(ஈ) காணிகளை குத்தகைக்கு வழங்குதல்
(உ) களச் செயற்பாட்டு நடவடிக்கைகள்
(ஊ) வாகனக் கட்டுப்பாடு
(எ) காசுப் பெறுவனவு

ஒப்பம்:- டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

ஐயு.ٜபு.ٜ406.ٜ2015 டு.ٜகு.ٜடுசுஊ.ٜஐ.ٜகுயு.ٜ14.ٜ14 2016.06.

கணக்காய்வாளர் தலைமை அதிபதி,

கணக்காய்வுத் திணைக்களம்,

பத்தரமுல்லை.

**காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் 2014 டிசம்பர் 31ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்திற்கான நிதிக் கூற்று தொடர்பாக 1971ஆம் ஆண்டு 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2)சீ பந்திக்கமைய கணக்காய்வு அறிக்கை**

**2.2 நிதிக் கூற்று தொடர்பாக கருத்துக்களைத் தெரிவித்தல்.**

**2.2.1 கணக்கீட்டு கொள்கைகள்**

(அ) ஆணைக்குழுவை ஆரம்பித்த சந்தர்ப்பத்தில் எமக்கு வழங்கப்பட்ட காணிக்குரிய செலவானது எவ்வளவு என்பதைக் குறிப்பிட்டு காணி ஆவணமொன்று எம்மிடம் இல்லாத காரணத்தினால் இப்பிரச்சினை எழுந்துள்ளது. தற்போது இது தொடர்பான அடிப்படை நடவடிக்கையாக காணி ஆவணமொன்று தயாரிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதனடிப்படையில் எமக்கு அளிக்கப்பட்ட காணியினது அளவானது தற்போது சரியாக உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அது பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர், எடுத்துக்கொள்ளப்பட்ட காணிக்குரியதாக கொடுப்பனவு செய்யப்பட்ட அல்லது கொடுப்பனவு செய்யப்படவேண்டிய நட்டஈட்டினை செலவாகக் கருதி, காணி சரியாக்கல்களைச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இதனடிப்படையில் காணி ஆவணத்தை இற்றைவரைப்படுத்தி நிறைவு செய்யும் வரை இது தொடர்பாக எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்கமுடியாதென அறிவிக்கின்றேன்.

அவ்வாண்டில் விற்கப்பட்ட சொத்துக்கள் மிகப் பழையதாகையால் அது தொடர்பான செலவுகள் தொடர்பான தகவல்கள் எம்மிடம் இல்லை. 2014ஆம் ஆண்டில் விற்கப்பட்ட வாகனங்களுக்கான விற்பனைப் பெறுமதி ரூ.1226950.ٜ- ஆகும்.

இதன் செலவு அல்லது மொத்தத் தேய்வு எவ்வளவு என்பது தொடர்பான தகவல்கள் இல்லாத காரணத்தினால், அதன் இலாபம் அல்லது நட்டத்தினை கணக்கிட முடியாதுள்ளது. இவ்வாகனங்கள் 1990ஆம் ஆண்டுகளில் எமக்குக் கிடைக்கவேண்டிய நிதிக்குப் பதிலாக பட்டு நூல் நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்டு எமக்குக் கிடைத்த பழைய வாகனங்களாகும். அதனடிப்படையில் இம்மோட்டார் வாகனத்தை விற்றதன் மூலம் பெற்றுக் கொண்ட முழுப் பணமும் வருமானமாக கணக்கிலிடப்பட்டுள்ளது. அவ்வருடத்தில் விற்கப்பட்ட முர் 9751 வாகனம் தொடர்பாக சரியாகக் கணக்கு வைக்கப்பட்டுள்ளதென்பதை குறிப்பிடுகின்றேன்.

(ஆ) (i) வருமானப் பிரிவின் பணிப்பாளர், இரத்தினபுரி அலுவலகம் மற்றும் பிரதான அலுவலகம் ஆகிய இரண்டிலும் வருமானப் பிரிவில் கடமையாற்றுவதால் 2014.12.31ஆந் திகதி

பெறப்படவேண்டிய வருமானம் தொடர்பான அறிக்கை நிதிப் பிரிவிற்கு உரிய காலத்தில் வழங்கமுடியாமற் போயுள்ளது. அதனடிப்படையில் நிதி அறிக்கைகளுக்குத் தேவையான சரிப்படுத்தல்களை செய்யமுடியாமற் போனது. தற்போது அவ்வறிக்கை தயாரித்து முடிக்கப்பட்டுள்ளதுடன் திருத்தங்களடங்கிய அறிக்கையைத் தயாரிக்கும்போது அது சரிசெய்யப்படுமென்பதை அறிவிக்கின்றேன்.

(ை) நிதி அறிக்கைகளைத் திருத்தஞ்செய்யும்போது இந்த கூடுதலான கட்டணமும் பெறப்படவேண்டிய வருமானமாக கணக்கிடுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

**<u>2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்</u>**

(அ) 1972 தொடக்கம் எம்மால் பல்வேறு நிருமாணிப்புக்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பயன்படுத்தப்பட்டுவந்த இக்கட்டிடத்திற்கு, ஆரம்பத்தில் செலுத்தப்படவேண்டிய குத்தகையானது ரூ.1400.∵-,ரூ.14000.∵ஸ்ரீ போன்ற மிகக் குறைந்த சதவீதத்திலிருந்து திடீரென ரூ.280000.∵ஸ்ரீ, 330,000.∵ஸ்ரீ என்ற தொகைவரை அதிகரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே ஆணைக்குழுவினால் ஏறத்தாழ 10 மில்லியனுக்கும் மேலதிகமாக செலவிடப்பட்டு கட்டிடங்களும் நிருமாணிக்கப்பட்டுள்ளன. எனவே திடீரென அதிகளவில் குத்தகைத் தொகையை அதிகரித்தமை, எமது நிறுவனத்தினால் தாங்கிக்கொள்ளக் கடினமாகையால் மேலே குறிப்பிடப்பட்ட காரணங்களின் அடிப்படையில் அத்தொகையை நியாயமானவகையில் குறைப்பதற்கும், கொடுப்பனவு செய்யப்படவேண்டிய நிலுவைப் பணத்தை தவணைக் கட்டணமாக சலுகைக் காலத்தில் கொடுப்பனவு செய்வதற்கும் இயலுமான வகையில் அரசாங்க நிருவாக அமைச்சுடன் இற்றைவரை பல கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன், இதுவரை அது கலந்துரையாடல் மட்டத்திலேயே காணப்படுகின்றது. அதனடிப்படையில் 2012ற்கு முன்னர் அதிகரிக்கப்பட்ட தொகையானது கணக்குகளில் சரிசெய்யப்படாததுடன் 2012இன் பின்னர் உரிய வாடகையானது உரிய வேளையில் நிலுவைகளற்ற விதத்தில் இன்றுவரை கொடுப்பனவு செய்யப்படுகின்றது. இனிவரும் காலங்களில் இது தொடர்பாக தீர்மானமொன்றை எடுத்ததன் பின்னர் கணக்குகளில் சரிப்படுத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

(ஆ) சம்வின் நச்சுரல் சிலோன் தனியார் கம்பனியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ரூ.21750.∵. தொகையானது பதிவுகளில் உள்ளடக்கப்படாமை இவ்வேறுபாட்டிற்குக் காரணமாகும். இது கணக்கு அறிக்கைகளில் இப்போது சரிசெய்யப்பட்டுள்ளதென அறிவிக்கின்றேன். இது கணக்கினை திருத்தஞ்செய்யும் போது சரிசெய்யப்படுமென குறித்துக் கொள்கின்றேன்.

(இ) திருத்தஞ்செய்யப்பட்ட கணக்கு அறிக்கைகளைத் தயாரிக்கும் போது கணக்கு வைக்கப்படுமென குறித்துக் கொள்கின்றேன்.

**(ஈ) <u>நிலையான வைப்பு</u>**

(i) மற்றும் (ை) டீ.'.கு.'.டுசுஊ.'.02.'.2014.'.03 கணக்காய்வு விசாரணைக்கு வழங்கப்பட்டுள்ள பதிலின் அடிப்படையில் சரிசெய்வதாக அறிவிக்கின்றேன்.

**(உ) திறைசேரி உண்டியல்கள்**

இவ்வைப்புக்களுக்குரியதாக கிடைக்கவேண்டிய முதலீட்டு வட்டியை கணக்கிடும்போது 01 நாள் வேறுபாடு ஏற்பட்டதன் காரணமாக இவ்வட்டியானது வேறுபட்டுள்ளது.

**(ஊ) நிலையான சொத்துக்கள்**

(ை) இவ்வருடத்தில் விற்கப்பட்ட சொத்துக்கள் மிகப் பழமையானதாகையால் அதற்குரிய செலவுகள் தொடர்பான விபரங்கள் எம்மிடம் இல்லையாதலால் அதன் செலவு மற்றும் மொத்த தேய்வினை இணக்கம் செய்து இலாபம் அல்லது நட்டத்தினைக் கணக்கிட முடியாமற் போயுள்ளது. 2014ஆம் ஆண்டில் விற்கப்பட்ட வாகனங்கள் 1990ஆம் ஆண்டுகளில் எமக்குக் கிடைக்கவேண்டிய தொகைக்காக பட்டுநூல் நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்டு எமக்குக் கிடைத்த வாகனங்களாகும். அதன் கொள்வனவு விலை எவ்வளவென குறிப்பிடப்படாததுடன் அதனை தேடியறிந்து கொள்ளளும் சாத்தியமும் இல்லை. அதனடிப்படையில் மோட்டார் வாகனத்தை விற்றதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்தப் பணமும் வருமானமாக கணக்கிலிடப்பட்டுள்ளது.

(ை)கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்களை தேய்விடும்போது குறைந்து செல்லும் தேய்வு முறையில் தேய்வு கணிப்பிடப்படவேண்டுமெனினும், செலவின் மீது தேய்வு கணக்கிடப்பட்டதன் காரணமாக தேய்மானம் அதிகரித்துள்ளது. அதனைத் திருத்துவதற்கு குறித்துக் கொண்டுள்ளதுடன் அலுவலக உபகரணங்களது தேய்மானம் சரியென குறிப்பிடுகின்றேன்.

(iii) இரத்தினபுரி மாவட்ட அலுவலகம் நடாத்திச் செல்லப்படும் கட்டிடம் மற்றும் லிந்துலை சுற்றுலா விடுதி என்பனவற்றை மதிப்பீடு செய்து உரிய சொத்துக்களது செலவினங்களை கணக்குகளில் இணக்கம் செய்தல் வேண்டும். இதன்போது தற்போதைய பெறுமதி மற்றும் கடந்த கால செலிவினத்தின் அடிப்படையில் தரவுகளை கணக்கில் வைக்க முடியாதாகையால் அது தொடர்பாக வெளியார் கணக்காய்வு பிரிவினதும் ஆலோசனைகள் பெறப்பட்டன. அதனடிப்படையில் அச்சொத்துக்கள் கணக்கிலிடப்படாததுடன், உரிய செலவினமும் மூலதனமாக்கப்படவில்லை. ஐந்தொகையில் இச்செலவினத்தை மட்டும் உரிய கருத்திட்டத்தின் கீழ் காட்ட முடியுமாகையால் அதனை அவ்வாறு சரிசெய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

(iv) இதனை கணக்கு அறிக்கைகளில் சரிசெய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

(எ)காலி மாவட்டக் காரியாலத்தினது டிசம்பர் மாதத்திற்குரிய வாடகையானது டிசம்பர் மாதமே கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. இதனை சரிசெய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

(ஏ) <u>**கொடுப்பனவு செய்யப்படவேண்டிய நீண்டகாலக் குத்தகை**</u>

(ி) கணக்கு அறிக்கைகள் மற்றும் வங்கி உறுதிப்படுத்தல் கடிதத்தின் அடிப்படையில் இது சரியானதாகும். ஏம்மால் முன்னைய வேலைக்காக தயாரிக்கப்பட்டுள்ள ஆவணத்தை அடிப்படையாகக் கொண்டு இது பிழையென கணக்காய்வு பிரிவினால் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. இது சரியானதன்று.

(ைை) இவ்வேறுபாட்டை மூலதன சதவீதத்திலிருந்து குறைத்து கணக்கு அறிக்கைகளை திருத்தஞ் செய்வதாக அறிவிக்கின்றேன்.

(ைைை)இவ்வேறுபாட்டிற்கு வரி வீதம் குறைவடைந்தமையானது தாக்கம் செலுத்தியதுள்ளதுடன் அதனை கணக்குகளில் இணக்கம் செய்து சரிசெய்வதாக குறிப்பிடுகின்றேன்.

(ஐ)அவசர சந்தர்ப்பங்களுக்கான செலவீனங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள உபசரணைச் செலவுகள் மற்றும் போக்குவரத்துச் செலவுகள் அவசர உறுதிப்பத்திர விழாக்களுக்காக செலவிடப்பட்ட செலவுகளாகும். பொதுவாக நிறுவனத்தில் மாதாந்தம் செய்யப்படுகின்ற செலவுகள் உபசரிப்புச் செலவினங்களுக்குக் கீழே காட்டப்பட்டாலும் இவ்வுபசரிப்புச் செலவுகள் அடிக்கடி ஏற்படாததால் இது அவசர சந்தர்ப்பக் கணக்கில் கணக்கு வைக்கப்பட்டது. இதனடிப்படையில் அவசர சந்தர்ப்பங்கள் செலவுக் கணக்கில் காட்டப்பட்டுள்ள உபசரிப்புச் செலவுகள், போக்குவரத்துச் செலவுகள், கட்டிட பராமரிப்பு மற்றும் அலுவலக உபகரண பராமரிப்புச் செலவுகள் உரிய கணக்குகளில் உள்ளடக்கி திருத்தஞ் செய்வதாக அறிவிக்கின்றேன்.

(ஒ) 11 ஊழியர்கள் எனக் குறிப்பிடப்பட்டமை திருத்தப்பட்டு 10 ஊழியர்கள் என குறிக்கப்படவேண்டியதுடன் அவை சரியாக கணக்குகளில் இணக்கம் செய்யப்பட்டுள்ளன.

<u>**(ஓ) காணி விலைமதிப்பீட்டு கட்டணம்**</u>

(ி) இத்தொகையானது லெஜரில் பதியும் போது பிழையாகப் பதியப்பட்டுள்ளது. இதனை லெஜரில் மட்டும் திருத்துவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. (இது மாதாந்தம் எடுக்கப்படுகின்ற இருப்புநிலை சோதனை மற்றும் இறுதி இருப்புநிலை சோதனை என்பவற்றின் மீதிகளை சரியாக உள்ளடக்கி இறுதிக் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.) அதனடிப்படையில் இறுதிக் கணக்குகள் சரியாக உள்ளன.

(ைை) இது சட்டச் செலவினமாகக் கணக்கு வைக்கப்பட்டுள்ளது. சரிசெய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

(ஔ) கணக்கினை திருத்தியமைத்து மீண்டும் சமர்ப்பிக்கும் போது இதனை சரிசெய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

(க) இது அமைய அடிப்படையில் ஆட்சேர்த்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்படவேண்டிய சம்பளமாகும். இப்போது இத்தொகையானது கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் திருத்தப்பட்ட கணக்கு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும்போது சரிசெய்வதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டது.

(ங) சம்பளமற்ற விடுமுறைக்காக நிறுவனத்திற்கு அறவிடப்படவேண்டிய ரூ.48312.56 ஊழியர் சேமலாபநிதியினை, சம்பளம் மற்றும் படிகள் கணக்கிலிருந்து நீக்குவதற்கு இடப்படவேண்டிய ஜர்னல் குறிப்பினை மாற்றி இட்டமையால் இத்தொகையானது இரட்டிப்பாகியுள்ளது. இதனை சரிசெய்வதற்குக் குறித்துக் கொள்ளப்பட்டது.

(ச)**காலி -நவம்பர் ரூ.186000.்.ஶ்ரீ**

இந்த சட்டச் செலவினமானது பிழையாக மதிப்பீட்டுக் கட்டணக் கணக்கில் பதிவிடப்பட்டுள்ளது. அதனை திருத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

**கம்பஹா -நவம்பர் ரூ.105000.்.ஶ்ரீ**

இச்சட்டச் செலவினமானது அளவைக் கட்டணமாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. அதனை திருத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

**மாத்தறை - டிசம்பர்**

குத்தகை வருமானக் கணக்கில் பதிவிடப்பட்டுள்ளது. அதனை திருத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

(ஞ) இதனை லெஜர் அறிக்கை மற்றும் கணக்கு அறிக்கைகளை விபரமாகப் பரிசீலித்து சரிசெய்வதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

2.2.3 **எதிர்பாரா பொறுப்புக்கள்**

ஆணைக்குழுவிடம் காணப்படுகின்ற வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் அவற்றிற்கு எதிர்காலத்தில் செலுத்தப்படவேண்டிய நட்டஈட்டுத் தொகை தொடர்பாக எதிர்பாரா பொறுப்பொன்று குழுவிடம் காணப்பட்டாலும் அவ்வழக்கானது எச்சந்தர்ப்பத்தில் முடிவடையும்? அதற்கு எவ்வளவு தொகை நட்ட ஈடாகச் செலுத்தப்படவேண்டும்? என்பது தொடர்பாக மதிப்பிட முடியாதாகையால் ஆணைக்குழுவிடம் காணப்பட்ட வழக்குகளது எண்ணிக்கை மட்டும் நிதிக் கூற்றுக்களில் ஒரு குறிப்பாகக் காட்டப்பட்டது. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விசேட வழக்குத் தொடர்பில் கொடுப்பனவுகளுக்குரிய மாற்றீடு தொடர்பாக கலந்துரையாடல்கள் இடம்பெறுவதுடன் அது தொடர்பாக அமைச்சரவையின்

ஆலோசனைக்கமைய மாற்று முறைப்பாடொன்று மீயுயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

**2.2.1 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

(அ) ஏறத்தாழ முழு நட்டஈட்டுத் தொகை மற்றும் வட்டித் தொகையுடன் கூடிய ரூபா 555 மில்லியன் காணப்பட்டாலும் இது சரியான தொகை அல்லவென தெரிகின்றது. பல்வேறு காலகட்டங்களில் செய்யப்பட்டுள்ள விலைமதிப்பீடுகளுக்கமைய இது பிறிதொரு சதவீதத்தைத் காட்டுவதோடு, இது தொடர்ச்சியாக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களது கலந்துரையாடல்களுக்கு உட்படுத்தப்படுகின்றது. அதனடிப்படையில் நட்ட ஈட்டுத்தொகை செலுத்தப்படவேண்டிய சரியான கோவைகளை இனங்கண்டு கொடுப்பனவு செய்யப்படவேண்டிய நட்ட ஈட்டுத் தொகை யாவை என்பதை இன்னமும் சரியாக அறிந்து கொள்ள முடியாதுள்ளதுடன், அது தொடர்பாக இன்னமும் நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

(ஆ) டிசம்பர் மாத காணி விற்பனை வருமானம் ரூ.99856.'.ஸ்ரீ என்ற தொகை குத்தகை வருமானமாக கணக்கு வைக்கப்பட்டுள்ளது. அதனை திருத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

(இ)டூ.'.கு.'.டுசுஊ.'.02.'.2014.'.10 இல் 0061 மற்றும் 0071இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கணக்குகளை திருத்தஞ் செய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

(ஈ) மற்றும் (இ) 2014.12.31ஆந் திகதியில் கிடைக்க வேண்டிய குத்தகை வருமானம் இறுதிக் கணக்குகளில் இணக்கம் செய்யப்படாததன் காரணமாக இவ்வேறுபாடு ஏற்பட்டுள்ளது. அதனை கணக்குகளைத் திருத்தஞ்செய்யும்போது இணக்கம் செய்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

**<u>2.2.5 கணக்காய்வுக்கு ஆதாரங்கள் இல்லாமை</u>**

**<u>நிலையான சொத்துக்கள்</u>**

காணி – காணிப் பதிவேட்டை இற்றைவரைப்படுத்தியதன் பின்னர் உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது.

கட்டிடங்கள் - மொணறாகலை மாவட்ட அலுவலகத்தின் கட்டிடத்தின் பெறுமதி, லிந்துலை விடுதி, இரத்தினபுரி பாம்கார்டன் தோட்டம் என்பனவற்றிற்காகச் செய்யப்பட்ட சில முதலீட்டுச் செலவினங்கள் உள்ளடங்களாக கணக்குகளில் உள்ளடக்கப்பட்டது.

| | |
|---|---|
| கணனி மற்றும் உதிரிப்பாகங்கள், பொருத்துக்கள், மோட்டார் வாகனங்கள், அலுவலக உபகரணங்கள், நலன்புரி உபகரணங்கள | 2014.12.31 ஆந் திகதியில் உரிய இருப்புச் சுற்றாய்வு நடவடிக்கைகள் 90% பூரணப்படுத்தப்பட்டு தற்போது கணனிப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கினறது. ஆளனியி குறைபாடு காரணமாக அதனை முடிக்கமுடியாது போயுள்ளதுடன் அடுத்த இருண்டு வாரங்களுள் உரிய கோவைகளை கணக்காய்வு பிரிவிற்கு |

**கடன்களும் முற்பணங்களும்**

| | |
|---|---|
| அச்சிடலும் காகிதாதிகளும்<br>லோகோர் சீமாட்டி நிதியம்<br>எரிபொருள் முற்பணம்<br>மோட்டார் வாகன திருத்தத்திற்கான முற்பணம் | மீதிகளை உறுதிப்படுத்தி பதில்களை நேரடியாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கிடைக்குமாறு கடிதத்தின் மூலம் உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| அறவிடமுடியாக் கடன் ஏற்பாடுகள் | 10 வருடத்திற்கு மேற்பட்ட காலமாக இவை கணக்குகளில் இருந்து வருவதுடன் எவ்வாறு கணக்கிடப்பட்டுள்ளது என்பது தொடர்பான விபரங்களை அறிய முடியாதுள்ளது. |
| பெறப்படவேண்டிய வருமானம் | இவ்வருமானமானது உறுதிப்படுத்தப்பட்டுள்ள விதம் தொடர்பாக இன்னமும் தகவல்களை அறியமுடியாதுள்ளதன் காரணமாக அது தொடர்பான தகவல்களை பின்னர் சமர்ப்பிக்கின்றேன். |
| மரங்களது விற்பனை | உரிய கோவைகளது விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| நட்டஈடு எதிர்பாரா கணக்குகள்<br>காணிகளை எடுத்தல்<br>வயற்காணிகளை விற்றல் | இது தொடர்பான விபரங்கள் வெவ்வேறாக அதிளவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. |

2.3 பெறப்படவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யப்படவேண்டிய கணக்குகள்

(அ) மற்றும் (ஆ) – நீண்ட காலந்தொடக்கம் குழுவினது நடைமுறைச் சொத்துக்களில் காட்டப்படுகின்ற விற்பனை மற்றும் பெறப்படவேண்டிய தொகை ரூ.2135 மில்லியனாகும். இத்தொகையானது அரச மற்றும் பகுதி அரச நிறுவனங்களிலிருந்து கிடைக்கப்பெறவேண்டியதாகும். இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், மக்கள் தோட்ட

அபிவிருத்தி சபை, இலங்கை ஹதபிம் அதிகாரசபை ஆகிய அரச நிறுவனங்களுக்கு இத்தொகையைச் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டக் சுட்டுத்தாபனத்தினை, மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணியை மீளவும் தேசிய கால்நடை வள அபிவிருத்திச் சபை, தெங்கு அபிவிருத்திச் சபை, மரமுந்திரிகை கூட்டுத்தாபனம் ஆகிய நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கியுள்ளதுடன் அது தொடர்பாக அந்நிறுவனங்களது தலைவர்களை அழைத்து கலந்துரையாடப்பட்டது. அதன்போது அந்நிறுவனங்களுக்கு போதுமான ஏற்பாடுகள் இல்லாமை மற்றும் சரியான புள்ளிவிபரங்கள் இல்லாமை போன்ற காரணங்கள் முன்வைக்கப்பட்டன.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்காக சனாதிபதி செயலாளரது தலைமையில், திறைசேரி உத்தியோகத்தர்களையும் அழைத்து கலந்துரையாடுமாறு கோரப்பட்டதுடன், செயலாளரினால், ஒவ்வொரு நிறுவனங்களிடமிருந்தும் கிடைக்கப்பெறவேண்டிய நிதி தொடர்பான விபரங்களும் கோரப்பட்டிருந்ததுடன், உரிய கோவைகளின் அடிப்படையில் அவ்விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில் இவ்வாறு கிடைக்கப்பெறவேண்டிய தொகையைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் முயற்சிகள் எடுக்கப்பட்டதுடன் தனியாக எடுத்துக் கொண்டால் எமது ஆணைக்குழு மட்டும் தனித்து இப்பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முடியாதென்பதுடன் இது பொதுவான, கொள்கைரீதியானதொரு தீர்மானத்தின் அடிப்படையிலும் திறைசேரியினது தலையீட்டுடனும் தீர்த்துக் கொள்ளப்படவேண்டிய ஒரு பிரச்சினையாகக் காணப்படுகின்றது.

தேர்தல்கள் காணி மறுசீரமைப்பு கூட்டுறவு சங்கம் மற்றும் பலநோக்குக் கூட்டுறவு சங்கம் என்பன தற்போது கலைக்கப்பட்டுள்ளது என காலத்திற்குக் காலம் எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

காணி அமைச்சில் இறுக்கப்படவேண்டிய பணம் தொடர்பில் இலஞ்ச மற்றும் ஊழல்கள் விசாரணை ஆணைக்குழுவில் வழக்கொன்று காணப்படுவதால், அது முடிவுறும்வரை அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு முடியாதுள்ளது.

தேசிய கடதாசிக் கூட்டுத்தாபனத்தில் மக்கிப்போய் நீக்கப்பட்ட கடதாசிகளுக்காக அந்நிறுவனத்தினால் பெறப்படவேண்டிய தொகையாகும்.

பொதுவாக நோக்கினால் அனைத்து நிறுவனங்களிடமிருந்தம் இத்தொகையை அறவிடுவதற்கு பாரிய முயற்சி எடுக்கப்பட்டாலும், அவ்வாறு அறவிட முடியாத காரணத்தினால் இத்தொகையானது அறவிடப்படவேண்டியது என கணக்கு அறிக்கைகளில் காட்டப்பட வேண்டியேற்பட்டது.

(இ) கட்டிடத்தை நிருமாணிப்பதற்கென தீர்மானம் எடுக்கப்பட்ட காலகட்டம் தொடக்கம் கட்டிடத்தை நிருமாணிக்கும் பணியை மாவட்டச் செயலாளரூடாக செய்து கெள்வதன் மூலமாக

அதன் பொறுப்புக்கள் மாவட்டச் செயலாளருக்கு ஒப்படைக்கப்படுவதுடன், அவரது நேரடி மேற்பார்வையின் கீழ் இடம்பெறுவதனாலும் மாவட்டச் செயலாளர் ஊடாக கட்டிடத்தை நிருமாணித்தல், மிகப் பொருத்தமென பல்வேறு சந்தர்ப்பங்களிலும் இடம்பெற்ற கூட்டங்களின்போது கலந்துரையாடப்பட்டது.

ஆணைக்குழுவில் அது தொடர்பாக கலந்துரையாடப்பட்டதாக முன்னைய தலைவரால் கூறப்பட்டது. ஆணைக்குழுத் தீர்மானங்களை தட்டச்சு செய்யும்போது தவறுதலாக மாவட்டச் செயலார் என்பதற்குப் பதிலாக பிரதேச செயலாளர் என உள்ளடக்கப்பட்டுள்ளதாக பின்னர் அறிந்து கொள்ளப்பட்டதன் காரணமாக, கட்டிடங்களை நிருமாணிப்பதற்கு மாவட்டச் செயலகத்தினது இணக்கப்பாட்டைப் பெற்றுக் கொண்டதன் பின்னர், மீண்டும் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு முன்னர் பெற்றுக் கொள்ளப்பட்ட தீர்மானத்தினை திருத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஈ) காணி குத்தகை முற்பணம் என்பது 2002-2004 ஆம் ஆண்டுகளில் பெற்றுக் கொண்ட முற்பணமாகும். இக்காணிக் கொடுக்கல் வாங்கலானது அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் தடைசெய்யப்பட்டுள்ளது. இதனுடன் தொடர்புடைய நிறுவனம் அல்லது நபர்களால் மீண்டும் ஒப்படைக்குமாறு செய்யப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் ஆணைக்குழுவினால் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டது. அதன்போது, அமைச்சரவையினால் தடைசெய்யப்பட்ட இக்காணிக் கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய காணியை மீண்டும் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின், அதற்காக திருத்தஞ்செய்யப்பட்ட சலுகை அமைச்சரவைப் பத்திரமொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படவேண்டுமென சனாதிபதி செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் உரிய அமைச்சரவை பத்திரம் சமரப்பிக்கப்பட்டாலும் அது தொடர்பாக இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இதன் கீழ் அபிவிருத்தி செய்யப்படவேண்டிய காணிகளை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கும், அபிவிருத்தி செய்யப்படாத காணிகளை மீண்டும் எடுத்துக் கொள்ளுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இதற்குப் புறம்பாக முற்பணத்தினை மீளவும் பெற்றுத் தருமாறு கோரிக்கைகளை முன்வைக்கின்ற நபர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு அத்தொகையானது, ஆணைக்குழுவினது அனுமதியைப் பெற்றுக் கொண்டு விடுவிக்கப்படும். அமைச்சரவையினது உரிய தீர்மானம் கிடைக்கும் வரை இதனை தீர்ப்பதற்கான எந்த வழிமுறைகளும் காணப்படவில்லை.

(இ)(ை) மற்றும் (ை) – 2014.12.31ஆந் திகதி வரை உள்ள காணி முற்பண பதிவேட்டில் உள்ள நபர்களுள் பலர் 2002-2004 வரையான காலப்பகுதியைச் சேர்ந்தவர்களாவர். இக்காலப்பகுதிக்கான கொடுக்கல் வாங்கல்கள் அமைச்சரவையினால் தடைசெய்யப்பட்டுள்ளன. எனவே அம்முற்பணமானது உரிய நபர்களால் கோரப்படாவிட்டால் அதற்கான அடுத்த கட்ட

நடவடிக்கைகள் அமைச்சரவைப் பத்திரத்தின் அடிப்படையில் செய்ய முடியாதுள்ளது. இத்தீர்மானத்தினை மாற்றுவதற்கு புதிய அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அது அங்கீகரிக்கப்பட்டால் இம்முற்பணத்தினை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கக்கூடிய சாத்தியம் இருப்பதுடன், அதுவரை ஆணைக்குழுவினால் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கை எதுவும் இல்லை.

(ஶை)காணி சீர்திருத்த ஆணைக்குழுவில் கடமைபுரியும் ஊழியர்களுக்கு வீடொன்றைக் கட்டுவதற்காக காணித்துண்டொன்றை வழங்கும் நடவடிக்கையானது 1982ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்நடவடிக்கையின் கீழ் 1982ஆம் ஆண்டு தொடக்கம் ஆணைக்குழுவில் கடமைபுரிகின்ற 351 உத்தியோகத்தர்களுக்கு சில மாவட்டங்களில் வெறுமையாகக் காணப்பட்ட காணித்துண்டுகள் வழங்கப்பட்டன.

ஊழியர்களுக்கு காணி வழங்கும் நடவடிக்கையின் இரண்டாம் கட்டத்திற்கு, 2005ஆம் ஆண்டு காணி சீர்திருத்த ஆணைக்குழுவானது பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினது விடயப்பரப்பின் கீழ் காணப்பட்டபோது, விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் இலங்கை சுதந்திர ஊழியர்கள் சங்கத்தின் எழுத்துமூலமான கோரிக்கைக்கு அமைய அனுமதி வழங்கப்பட்டது.

அவ்வனுமதியை அடிப்படையாகக் கொண்டு ஆணைக்குழுவானது 2005ஆம் ஆண்டு தொடக்கம் பல சந்தர்ப்பங்களில் விடயங்களை ஆணைக்குழுவிற்கு முன்வைத்து கா.ம.சட்டத்தின் 22(1) (இ) பந்தியின் அடிப்படையில் ஊழியர்களுக்கு வீடுகளை அமைக்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு காணித்துண்டுகளை வழங்குவதற்காக அனுமதி பெற்றுக் கொண்டுள்ளதுடன் அவ்வாணைக்குழுப் பத்திரம் மற்றும் தீர்மானங்களை எச்சந்தர்ப்பத்திலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு இயலும் எனவும் குறிப்பிடுகின்றேன்.

மேலும் 2005ஆம் ஆண்டு கா.ம.ஆணைக்குழுவிற்குச் சொந்தமாக இருந்த பெருந்தொட்ட கைத்தொழில் அமைச்சிற்குப் பொறுப்பாகவிருந்த கௌரவ அமைச்சரது அனுமதியைக் கொண்ட குறிப்பினது மூலப் பிரதியானது ஆணைக்குழுவிடம் காணப்படுவதுடன் மீண்டும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அனுமதியைப் பெற்றுக் கொள்வதற்காக கோரிக்கை முன்வைக்கப்படவில்லை என்பதையும் குறிப்பிடுகின்றேன்.

(ஸை)முற்பணத்தினை கொடுப்பனவு செய்யுமாறு நிறுவனங்கள் அல்லது நபர்களை அறிவுறுத்தி அதனடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்போது ஒரே தடவையில் பணம் செலுத்த இயலாமல் இருந்த நிறுவனங்கள் அல்லது நபர்கள் முதலாவது முற்பணம் செலுத்திய அண்மித்த தினமொன்றில் அதன் நிலுவைப் பணத்தை செலுத்தியுள்ளார்கள் என அவதானிக்கப்படுகின்றது.

**<u>2.4 சட்டதிட்டங்கள், விதிமுறைகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு அமையாமை</u>**

(அ) 1972ஆம் ஆண்டு 01ஆம் இலக்க காணி மறுசீரமைப்புச் சட்டம்

45(ல)(அ)(ஐஐ)ஆம் பந்தி காணி சீர்திருத்தச் சட்டத்தில் அப்பந்தியானது, பிரதமரிடம் விசாரித்து ஒரு அங்கத்தவரை நியமித்தல் வேண்டும் எனவும் அல்லது உரிய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் ஒருவர் நியமிக்கப்படுதல் வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் தற்போது பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் விதத்தில் அங்கத்தவரொருவர் பங்குபற்றுகின்றார்.

(ஆ) 1971ஆம் ஆண்டு 38ஆம் இலக்க நிதிச் சட்டம் ஐஐஆம் பந்தி

முதலீடு தொடர்பாக நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொது தீர்மானத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) 2002ஆம் ஆண்டு 14ஆம் இலக்க பெறுமதி சேர் வரி

இச்சட்டங்கள் இரண்டும் தொடர்பில் எமது நிறுவனம் பதிவுசெய்யப்பட வேண்டும் என இறைவரித்திணைக்கள ஆணையாளர் நாயகத்தினால் எமக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக 2015.06.11ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டத்தில் ஆணைக்குழுவையும் அறிவுறுத்தியுள்ளதுடன், ஜுன் மாதத்திற்குள் பதிவு செய்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என குறிப்பிடுகின்றேன்.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக்கோவை

ஐஐஆம் அத்தியாயம் 13.3ஆம் பந்தி – காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவில் நீண்ட காலந்தொடக்கம் வெற்றிடமாக உள்ள பணிப்பாளர்∴நிதி பதவிக்காக தகைமைபெற்ற விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு பத்திரிகைகளில் அறிவித்தல் விடுக்கப்பட்டதன் பின்னர் நேர்முகப் பரீட்சையொன்றும் நடாத்தப்பட்டது.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவில் முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு 2007.03.16 மற்றும் 2009.03.30 ஆகிய தினங்களில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவில் நடைமுறையிலுள்ள புதிய ஆட்சேர்ப்புத் திட்டத்தின் அடிப்படையில் 2012.12.11, 2013.05.20 மற்றும் 2013.12.02 ஆகிய தினங்களில் பத்திரிகை விளம்பரங்கள்

செய்யப்பட்டு விண்ணப்பங்கள் கோரப்பட்டு, விண்ணப்பப்பத்திரங்களுக்குரிய விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டார்கள்.

எனினும் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்யாததன் காரணமாகவும், அவ்விண்ணப்பதாரர்கள் ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட சம்பளத்திற்கு இணக்கம் தெரிவிக்காததன் காரணமாகவும் உரிய பதவிக்கு ஆட்சேர்த்துக் கொள்வதற்கு முடியாமற் போனது.

எவ்வாறாயினும் இது தொடர்பாக இனிவரும் காலங்களில் நடாத்தப்படவுள்ள ஆணைக்குழுக் கூட்டத்தில் கலந்துரையாடலுக்கு உட்படுத்தி பொருத்தமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு ஆவண செய்யப்படுமென அறிவிக்கின்றேன்.

(உ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்

(ை) நிதிப்பிரமாணம் 502(2) காணி தவிர்ந்த ஏனைய நிலையான சொத்துக்கள் தொடர்பான பதிவேடொன்று நிதிப் பிரிவில் பேணப்படுகின்றது. அதன் செலவினம், எடுத்துக் கொள்ளப்பட்ட திகதி, வருடாந்த தேய்வினது சதவீதம் என்பனவற்றைக் குறிப்பிட்டு 2009ஆம் ஆண்டு தொடக்கம் இப்பதிவேடுகள் இற்றைவரைப்படுத்தப்பட்டு பேணப்படுகின்றது.

(ை) நிதிப்பிரமாணம் 134 (3) – உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளது பிரதிகள் கடந்த காலங்களில் தங்களுக்குச் சமர்ப்பிக்கப்படாததுடன் இவ்வருடம் தொடக்கம் அனைத்து உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளதும் பிரதியொன்றை தங்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ைை)நிதிப்பிரமாணம் 371(2) (அ) – முற்பணம் பெற்றுக் கொண்டதன் பின்னர் அது உரியவாறு செலுத்தப்படவில்லை என அவதானிக்கப்பட்டுள்ளதுடன் அது தொடர்பாக அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணிப்பாளர்.்.நிதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ை)நிதிப்பிரமாணம் 371(2) (ஆ)- உப அட்டவணை 02ற்கு அமைய 3 சந்தர்ப்பங்களில் மட்டும் எல்லையைத் விஞ்சி முற்பணம் பெற்றுக் கொள்ளப்பட்ட சந்தர்ப்பம் காணப்படுகின்றது. திரு.என்.முரகே பதிவிநிலை உதவியாளர் என்பதுடன், அவர் வழங்கல் உத்தியோகத்தருமாவார். அவர் முற்பண எல்லைக்குள் முற்பணத்தினைப் பெற்றுள்ளார்.

வழக்கு முடிவின் மூலம் அவசர வழக்கு நடவடிக்கைகளுக்காக பணம் செலுத்துதல், அவசர உறுதிகள் வழங்கும் வைபவ நடவடிக்கைகள், மாவட்ட அலுவலகத்தை திறப்பதற்காக என பல்வேறு அவசரச் செலவுகளை செய்வதற்காக,

எனது அனுமதியின் பேரில் வரையறைக்கும் மேலாக முற்பணம் வழங்கவேண்டிய சந்தரப்பங்கள் ஏற்பட்டன. இம்முற்பணமானது அவசர கடமை நிலைமைகளின் அடிப்படையில் வேறு நடவடிக்கைகளை எடுப்பதற்கு போதுமான அவகாசம் இல்லாத காரணத்தினால் வழங்கவேண்டிய தேவை எழுந்தது.

(v) நிதிப்பிரமாணம் 371(4) – செய்யவேண்டிய நடவடிக்கைகளது முக்கியத்துவத்தின் அடிப்படையில் அதற்கென ஏற்படுகின்ற செலவு மதிப்பீட்டுக்கமைய உரிய முற்பணத்தினை பெற்றுக் கொள்ளுமாறு அலுவலர்களை அறிவுறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும், இனிவரும் காலங்களில் இவ்வாறான தவறுகளைக் குறைத்துக் கொள்ளுமாறும் சரியான விதத்தில் கணக்குகளைப் பேணுமாறும் பணிப்பாளர்.்.நிதிக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

(vi) நிதிப்பிரமாணம் 756 – 2014 டிசம்பர் 31ஆந் திகதியில் இருப்புச் சுற்றாய்வு நடவடிக்கைகள் தற்போது 90மூ நிறைவு செய்யப்பட்டுள்ளன. ஆளனி குறைபாடு மற்றும் போக்குவரத்து வசதிகள் குறைவு காரணமாக இது தாமதமடைந்துள்ளது. 2015 ஜீன் 30ஆந் திகதிக்கு முன்னர் இதனை நிறைவு செய்து உரிய கோவையை கணக்காய்வு பிரிவிற்கு சமர்ப்பிக்க முடியும் என அறிவிக்கின்றேன்.

(ஊ) <u>**2003 ஜுன் 02ஆந் திகதிய இலக்கம் பீஈடி.்.12 ஆம் இலக்க அரச வியாபார சுற்றறிக்கை**</u>

(ஐ) 4.2.6ஆம் பந்தி வருடாந்த செயற்றிறன் அறிக்கையானது உரிய அமைச்சிற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், 2014ஆம் ஆண்டு தொடக்கம் காலாண்டு நிதி அறிக்கை அரச வியாபார திணைக்களத்திற்கு உரிய திகதியில் அனுப்பப்பட்டுள்ளது. 2015ஆம் ஆண்டில் முதலாவது காலாண்டு அறிக்கையானது ஏப்ரல் 30ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட்டுள்ளது.

(ஐை) 6.5.1ஆம் பந்தி 2014ஆம் ஆண்டிற்காக வருடாந்த அறிக்கையினது வரைபானது 2015.03.02ஆந் திகதிய கடிதத்தின் மூலம் உரிய நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

## <u>3. நிதி மீளாய்வு</u>

3.1 நிதி முன்னேற்றங்கள்

2014.12.31ஆந் திகதியில் கிடைக்கவேண்டிய வருமானமானது கிடைக்கப்பெறாமை இவ்வேறுபாட்டிற்குக் காரணமாகும். அதனை திருத்தியதன் பின்னர் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது 50 மில்லியனுக்கு அதிகமான வருமானத்தைக் காட்டுவதால் அது குறைவினை அல்ல மாறாக அதிகரிப்பையே காட்டுகின்றது.

### <u>3.2 பகுப்பாய்வு செய்யப்பட்ட நிதி மீளாய்வு</u>

(ை) வியாபார மற்றும் ஏனைய கடன்பட்டோரது பெறுமதி ரூ.2158 மில்லியன் காணப்பட்டதால் இச்சதவீதம் அதிகரித்துள்ளது. நடைமுறைச் சொத்துக்களில் காணப்படுகின்ற அனைத்து சொத்துக்களும் திரவச் சொத்துக்களாக இருக்கின்றமையும் இதற்குக் காரணமாகும்.

(ை) மேலதிக நிதி முதலீடு செய்வது தொடர்பாக 2014 டிசம்பர் மாதத்தில் விலைமனு கோரப்பட்டிருந்ததுடன், அதற்கு அனுமதியைப் பெற்றுக் கொண்டு முதலீடு செய்வதற்கு தாமதமடைந்ததன் காரணமாக நிதி மற்றும் நிதியுடன் உள்ள பெறுமதியானது முன்னைய வருடங்களுடன் ஒப்பிடும்போது அதிகரித்துள்ளது. இந்நிதியானது 2015ஆம் ஆண்டு முதல் வாரத்தில் முதலீடு செய்யப்பட்டது.

<u>**3.3 நிறுவனத்திற்கு எதிராக அல்லது நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டரீதியான சம்பவங்கள்**</u>

இது தொடர்பாக தங்களுக்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் பிரதியொன்றை மீளவும் தங்களுக்கு வழங்குவதற்கு அறிவிக்கப்பட்டது.

<u>**4. நடவடிக்கைகள் மீளாய்வு**</u>

<u>**4.1 செயற்றிறன்**</u>

(அ) 2014ஆம் ஆண்டிற்கு காணி விற்பனை செய்வதற்கு மற்றும் குத்தகைக்கு வழங்குவதற்காக மதிப்பிடப்பட்ட வருமானம் ரூ.144194520.்.-ஆகும். நிதிக்கூற்றின் அடிப்படையில் தேறிய வருமானம் ரூ.175,194,301.்.- ஆகும். இதனடிப்படையில் 70மூமான வேறுபாடன்று மாறாக 21மூ மான வேறுபாடே காணப்படுகின்றது. இந்த வேறுபாடானது குறைவுபடுமாறு வரவுசெலவு மதிப்பீட்டைத் தயாரிக்குமாறு பணிப்பாளர்.்.நிதிக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

(ஆ) வரவுசெலவுத்திட்ட மதிப்பீடு தயாரிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில், நட்டஈடு கொடுப்பனவு செய்தல் தொடர்பாக நீதிமன்றத்தில் வைப்புச் செய்வதற்குரிய கட்டளை தொடர்பான இறுதித் தீர்மானத்திற்கு வராத காரணத்தினால் அதற்கென ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை. அது இவ்வேறுபாட்டிற்குக் காரணமாகியுள்ளது. இனிவரும் காலங்களில் இத்தகைய நிலைமைகளைக் குறைத்துக் கொள்வதாகக் குறிப்பிடுகின்றேன்.

(இ) வருட ஆரம்பத்தின்போது செயற்றிட்டத்திற்காக உள்ளடக்கப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டாலும், பின்னர் அது தொடர்பாக கவனம் செலுத்தப்படாமையும் அந்தந்தச் சந்தர்ப்பங்களில் ஏற்படுகின்ற வேறு அவசர கடமைகள் காரணங்களால் செயற்றிட்டத்தின் ஒருசில நடவடிக்கைகளை செயற்படுத்தும்போது அவை விட்டுவிடப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது.

பல சந்தர்ப்பங்களில் செயற்றிட்டங்களின் அடிப்படையில் சென்று சிற்சில விடயங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டாலும், ஏனைய பல அவசர மற்றும் அத்தயாவசியமான கடமைகளில் ஈடுபடுவதன் காரணமாக சிற்சில வசதியீனங்களுடன் ஆரம்பிக்கப்பட்ட செயற்றிட்டத்தினது கடமைகளை முடிப்பதற்கு போதிய அவகாசம் கிடைக்கவில்லை என்பதை எடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

எவ்வாறாயினும் செயற்றிட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள வேறு அத்தியாவசியமான பல கடமைகள், விடுபட்டுள்ளதென்பதை ஏற்றுக் கொள்ளுவதுடன், இனிவரும் காலங்களில் இது தொடர்பாக கவனம் செலுத்துமாறு உரிய அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள்.

(ஈ) இனிவரும் காலங்களில் செயற்றிட்டத்தைத் தயாரிக்கும் போது இலக்குகள் தொடர்பாக மீண்டும் கலந்துரையாடி கருத்துக்களையும், பிரேரணைகளையும் பெற்றுக் கொண்டு நிச்சயமாகச் செய்து முடிக்கக்கூடிய விடயங்களை மட்டும் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அலுவலர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள்.

(உ) இனிவரும் காலங்களில் இத்தகைய குறைபாடுகள் ஏற்படாவண்ணம் இயலுமானவரை கவனம் செலுத்துமாறு உரிய அலுவலர்கள் அறிவுத்தப்பட்டதுடன், செயற்றிட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களுக்கும் வருமானம் மற்றும் செலவினங்களை சரியாகக் குறிப்பிடுமாறும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

<u>1.2 முகாமைத்துவ வினைத்திறனின்மை</u>

(அ) (ஹ) இவ்வாணைக்குழுவானது ஆரம்பம் தொடக்கம் எடுத்துக் கொண்ட காணிகளுக்கு கணிப்பிடப்பட்ட நட்டஈடு மற்றும் நட்டஈட்டு வட்டிக்குரிய தொகையொன்று இதுவரை கணக்கு அறிக்கைகளில் நட்டஈட்டு ஐயக் கணக்கு ஐ மற்றும் ஐஐ என காட்டப்பட்டுள்ளது. நட்டஈடு மற்றும் நட்டஈட்டு வட்டியாக நிச்சயிக்கப்பட்ட தொகையொன்றை இதுவரை சரியாகக் குறிப்பிட முடியாதுள்ளதுடன் இது தொடர்பாக கணக்குகளிலும் இணக்கம் செய்யப்படவில்லை.

(ஹை) ஐ மற்றும் ஐஐஆம் கட்டங்களின் கீழ் செயற்றிறன் அறிக்கையில் ஒதுக்கப்பட்ட தொகையானது நட்டஈடு மற்றும் வட்டி ஆகிய இரண்டிற்குமாகையால் அது சரியானதாகும்.

(ii) உரிமை உறுதிப்படுத்தப்படாத 110 கோவைகளுள் 106 கோவைகள் இன்னமும் நட்டஈட்டைச் செலுத்தமுடியாத நிலையிலுள்ளன. உரிமையை உறுதிப்படுத்தக்கூடிய அத்தியாவசியமான ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடியாமையும், உரிமையாளர்கள் இது தொடர்பாக ஆர்வமில்லாமையும் இதற்குக் காரணமாகும்.

(iii) இது தொடர்பாக 2014ஆம் ஆண்டில் மாவட்ட அலுவலகத்திலிருந்து விசாரிக்கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும், ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. அதற்குக் காரணம் பலர் இறந்துள்ளமையும், உரிமையாளர்கள் வெளிநாடுகளில் வசிக்கின்றமையும் பெற்றுக் கொள்ளக்கூடிய நட்டஈட்டுத் தொகையானது ஒரு சிறிய தொகையாகக் காணப்படுவதாலும் இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டதாக கூறப்படுகின்றது. மேலும், இந்த 106 கோவைகள் தொடர்பாக உரிமையாளர்களுக்கு இறுதி அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதென குறிப்பிடுகின்றேன்.

ஆட்சியை பொறுப்பேற்கும் சான்றிதழ் இல்லாத கோவைகள் தொடர்பாக மாவட்ட அலுவலகங்களை அறிவுறுத்தியுள்ளதுடன், உரிமை இல்லாது நட்டஈடு கொடுப்பனவு செய்யப்பட முடியாததால் அக்கோவைகளது நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன.

(iv) இன்னமும் 575 கோவைகளினது தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், சட்டரீதியான உரிமை வழங்கப்படாத கோவைகளும் வேறாக உள்ளடக்கப்பட்டுள்ளன. சட்டரீதியான உரிமை வழங்குவதற்கு காணி இல்லாமை, அளவை நடவடிக்கைகள் தாமதமடைதல், வெளிப்படுத்துநர்களது ஆர்வம் இன்மை போன்ற காரணங்களினால் இந்நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ளன.

(v) நீதிமன்றத்தில் பணம் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. 60 கடிதக் கோவைகளது பட்டியல் இத்துடன் இணைப்பு 01 என இணைக்கப்பட்டுள்ளது.

(vi) ஆணைக்குழுவினால் நட்டஈடு வழங்கும் செய்றபாடானது துரிதப்படுத்தப்பட்டிருந்தாலும் நட்டஈட்டைப் பெற்றுக் கொள்வதற்கு வெளிப்படுத்துனர்கள் வராமை, அதற்குப் பதிலாக மாற்றுக் காணிகளைப் பெற்றுத் தருமாறு கோருதல், வெளிப்படுத்துனர்களது உரிமையை உறுதிப்படுத்தும் சட்டரீதியான ஆவணங்கள் தொடர்பாக எழுந்துள்ள சிக்கலான நிலைமைகள் காரணமாக நட்டஈடு வழங்கும் செயற்பாடானது தாமதமடைந்துள்ளது. தற்போது இவ்வாறேனும் அல்லது சிறிய அளவிலேனும் கொடுப்பனவுகள் செய்யப்படுவதற்குக் காரணம் வெளிப்படுத்தல் உரிமை உறுதிப்படுத்தும் விதத்தில் நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் நீதிமன்றத்தில் வைப்புச் செய்வதற்கேயாகும்.

(vii) 2014ஆம் ஆண்டு இறுதியில் நட்டஈடு உரிமை தொடர்பில் ஆணைக்குழுவிற்கு எதிராக நீதிமன்றத்தில் காணப்படுகின்ற 14 வழக்குகளும், காணி எடுத்தல் மீளாய்வு சபையில் விசாரணை செய்யப்பட்டு வருகின்ற 07 மேன்முறையீடுகளும் இன்னமும் விசாரிக்கப்பட்டு வருகின்றன. அவ்வழக்குகள் இதுவரை முடிவடையவில்லை.

**<u>4.3 வழிகாட்டலில் வினைத்திறனின்மை</u>**

(அ) இது தொடர்பாக திறைசேரியிலிருந்து பெற்றுக் கொண்ட பொது தீர்மானமொன்றின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தினது பிரதியொன்றை தேடிக்கொள்ள முடியாதுள்ளதுடன் மீண்டும் தீர்மானத்தை புதுப்பிப்பதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு ஆணைக்குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்போது மீண்டும் திறைசேரிக்கு எழுத்துமூலம் கோரிக்கையொன்றைச் செய்து அத்தீர்மானத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு தீர்மானிக்கப்பட்டது. அதனடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன்.

(ஆ) தெங்கு பயிர்ச்செய்கை தொடர்பாக கம்பஹா மற்றும் புத்தளம் மாவட்டங்களில் எமக்கு அளிக்கப்பட்ட 60-80 ஏக்கர் காணியொன்று உள்ளது. இக்காணிகளை வழங்கும் சந்தர்ப்பத்தில் அது அபிவிருத்தியடையாத நிலையில் காணப்பட்டதால் அதில் தெங்கு மூலம் கிடைத்த வருமானம் மிகக் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. இக்காணியை அபிவிருத்தி செய்வதற்காக பாரிய தொகையை செலவிடவேண்டியுள்ளதால் அதனை கட்டம் கட்டமாக அபிவிருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் இதனை எமது கருத்திட்டமாக பேணிச்செல்லவேண்டுமா அல்லது குத்தகை அடிப்படையில் வழங்குவது இலாபமா என்பதையும் கருத்திற் கொண்டு எதிர்காலத்தில் தீர்மானமொன்றை எடுக்கவிருப்பதாகவும் அறிவிக்கின்றேன்.

(இ) 2002-2004 காலப்பகுதியில் பெற்றுக் கொள்ளப்பட்ட காணி விற்பனை மற்றும் குத்தகை முற்பணத்திற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட மதிப்பீட்டு முற்பணம் உள்ளடங்கலாக 2014.12.31ஆந் திகதி வரை கிடைக்கப்பெற்ற முற்பணம் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இது 14 வருட காசுப் புத்தகம் மற்றும் சிட்டைகள் பரிசோதிக்கப்பட்டு தயாரித்துக் கொள்ளப்படவேண்டிய ஆவணமாகையால் நீண்ட காலம் ஆய்வு செய்யப்பட்டு கணக்கு அறிக்கைகளுக்கு ஆவணமொன்றை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஈ) அநுராதபுரம், யாழ்ப்பாணம் மற்றும் அம்பாறை ஆகிய மூன்று மாவட்டக் காரியாலயங்களினதும் வருமானம் இவ்வெல்லையை விஞ்சாததுடன் ஏனைய 17 மாவட்ட காரியாலயங்களிலும் 2014 ஆம் ஆண்டில் உயர்ந்தபட்ச வருமானம் அறிக்கையிடப்பட்டுள்ளது.

இந்த மூன்று மாவட்டக் காரியாலயங்களுக்கும் பாரியளவிலான காணிகள் இல்லாத காரணத்தினாலும் தற்போது இருக்கின்ற காணிகளது பெறுமதி முடிவடைகின்ற நிலையில் காணப்படுவதாலும் இவ்வலுகலகங்களினது வருமானம் குறைவடைந்து வருகின்றது.

(உ) (ை) புத்தளம் மாவட்ட காணி சீர்திருத்த அதிகாரசபை அலுவலகத்தினது நிருமாணப்பணிகள் 2014ஆம் ஆண்டின் செயற்றிட்டத்தினது 16.1இன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

(ை) 1972ஆம் ஆண்டு 01ஆம் இலக்க காணி சீர்திருத்த சட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்காக கிளைக் காரியாலயங்களைத் தாபித்து பேணிச் செல்லுதல் தொடர்பாகவும் கட்டளை பெறப்பட்டிருப்பதால் மாவட்ட அலுவலக கட்டிடத்தை நிருமாணிப்பதற்காக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டதற்கு மட்டும் தகவல்களை அளித்தல் போதுமானதென அப்போது காணி சீர்திருத்த ஆணைக்குழுவினது உரிமையளிக்கபட்டிருந்த சனாதிபதி செயலகத்திலிருந்து அறிவுறுத்தல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதாக முன்னைய தலைவர் அறிவித்திருந்தமையால் 2014.11.05 ஆந் திகதிய கடிதத்தில் உரிய தகவல்களை சனாதிபதி செயலகத்திற்கு அறிவித்தமை மட்டுமே இடம்பெற்றுள்ளது. சனாதிபதி செயலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 2014.11.13ஆந் திகதிய கடிதத்தில் அத்தகவல்கள் கவனத்திற் கொள்ளப்பட்டதென காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு பெறப்பட்டதன் பின்னர் கட்டிடத்தை நிருமாணிப்பதற்கென ஒப்பந்தக்காரரொருவரை தெரிவு செய்தல் தொடக்கம் பெறுகை நடவடிக்கை மற்றும் நிருமாண மேற்பார்வை நடவடிக்கைகள் மாவட்டக் காரியாலயங்களில் செய்து தருவதாக மாவட்டக் காரியாலயங்கள் இணக்கம் தெரிவித்தால் உரிய நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த செலவு மதிப்பீட்டில் 40சூ மான நிதியை மாவட்டச் செயலாளருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மாவட்டக் காரியாலங்களுக்கு கட்டிடமொன்றை நிருமாணித்துக் கொடுக்கும் திட்டத்தை ஆரம்பித்த காலகட்டத்தில் இருந்த மாவட்டச் செயலாளர் தற்போது இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளதால், புதிய மாவட்டச் செயலாளருடன் தற்போது பல கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளதுடன் கட்டிட நிருமாணிப்புப் பணியை உடனடியாக விரைவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதென அறிவிக்கின்றேன்.

(ஊ) திருகோணமலை மாவட்டத்திற்கென பிறிதாக காரியாலயமொன்று தாபிக்கப்படவில்லை என்பதுடன் குருணாகல் பணிப்பாளரால் அம்மாவட்டத்திலும் பதிற்கடமை மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வருமானம் மற்றும் செலவுகள் வெவ்வேறாக

குறித்துக் கொள்ளப்படாததுடன், வருமானம் காணப்பட்டால் அது குருணாகல் காரியாலய கணக்குகளில் உள்ளடக்கப்படும்.

(எ) இம்மாவட்டங்களில் குத்தகைக் காணிகள் இல்லாமையும், இருக்கின்ற காணிகளுக்கும் குத்தகை ஒப்பந்தங்களை வழங்கி முறைமைப்படுத்தாதன் காரணமாக பயன்படுத்தற் கட்டணமொன்றை அறவிடும் நடவடிக்கை இயல்பாக இடம்பெறுகின்றது. அதனடிப்படையில் குறைந்தளவான குத்தகை வருமானமொன்றைப் பெற்றுக் கொள்வதும் சிலவேளைகளில் குத்தகை வருமானம் இல்லாத சந்தர்ப்பங்களையும் காணக்கூடியதாவுள்ளது.

**<u>4.4 இனங்காணப்பட்ட குறைபாடுகள்</u>**

இது தொடர்பாக தீர்மானமொன்றை எடுப்பதற்காக 2015.05.18ஆந் திகதி நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஆணைக்குழுவிற்கு அதனைச் சமர்ப்பித்து அதனடிப்படையில் மேலதிக நடவடிக்கைகளை எடுக்குமாறு அக்குழுவினால் தீர்மானம் எடுக்கப்பட்டது. அதனடிப்படையில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் உரிய இணக்கங்கள் செய்யப்படுமெனவும் அறிவிக்கின்றேன்.

**<u>4.5 ஆளனி நிருவாகம்</u>**

(அ) காணி சீர்திருத்த ஆணைக்குழுவினது முழு ஆளனி எண்ணிக்கை 393 என முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் னுஆளு∴1770∴ஏழுடுடு மற்றும் 2015.03.18ஆந் திகதிய கடிதத்தில் அனுமதி பெறப்பட்டுள்ளது.

அவ்வாறு அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்ட கடிதத்தின் பிரதியொன்று தங்களது நிறுவனத்திற்கு முகாமைத்துவ சேவைகள் நிறுவனத்தினாலேயே அனுப்பப்பட்டுள்ளதால் அக்கடிதத்தின் பிரதியானது காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் தங்களுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

2∴1∴113(1) கோவையில் உரிய அனுமதியுடன் கூடிய கடிதம் கோவைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், தேவைப்படின் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் கணக்காய்விற்கு வழங்க முடியும் என்பதையும் அறிவிக்கின்றேன்.

(ஆ) அனுமதிக்கப்பட்ட ஆளனி எண்ணிக்கையில் 17 சாரதிகள் பதவிக்கு அனுமதி பெறப்பட்டுள்ளதுடன் ஒப்பந்த அடிப்படையில் ஒரு சாரதியை சேவையில் ஈடுபடுத்தியுள்ளதன் காரணமாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள முழு சாரதிகளின் எண்ணிக்கை 18 என உள்ளடக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் காலத்தில் சாரதி பதவிகளின் பொருட்டு அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்வதில்லை என்பதுடன், தற்காலிக சேவையில் ஈடுபடுத்தியுள்ள சாரதிகளின் சேவை காலம் மிக விரைவில் முடிவடைய உள்ளது என்பதையும் அறியத் தருகின்றேன்.

மேலும், அங்கீகரிக்கப்பட்டுள்ள பதவியினரில் வெற்றிடமாகவுள்ள எல்லா பதவிகளுக்கும் பல கட்டங்களின் கீழ் உரிய முறைகளுக்கமைவாக பொருத்தமானவர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிடுகின்றென்.

5. கணக்கீட்டு நடவடிக்கைகளும் நல்லாட்சியும்

5.1 செயற்றிட்டம்

(அ) காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கருமங்களை நிறைவேற்றுவதற்காக தயாரிக்கப்படும் செயற்றிட்டத்தில் சில கருமங்களை நிறைவேற்றும்போது ஆணைக்குழுவால் அதற்கான செலவுகளை மேற்கொள்ளாத சந்தர்ப்பங்களும் உள்ளன.

ஆகையால் இனி வருங் காலங்களில் செயற்றிட்டத்தை தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் குறித்த செலவுகளை மேற்கொள்ளாத கருமங்களின் முன்னே சிறுகுறிப்பு இடுவதற்குகான நடவடிக்கை மேற்கொள்ளும் படி உரிய அலுவலர்களை அறிவுறுத்தப்பட்டது.

(ஆ) கணக்காய்வில் சுட்டிக்காட்டப்பட்ட குறைப்பாடுகள் தொடர்பாக கவனம் செலுத்தி செயற்றிட்டம் தொடர்பாக முன்னரிலும் பாரக்க கவனம் செலுத்தும் படி உரிய பிரிவையும் அலுவலர்களையும் அறிவுறுத்தப்பட்டது.

(இ) முன்னேற்றத்தை குறிப்பிடும் அறிக்கையில் செயற்பாடுகளுக்கான வருமானம் அண்ணளவாக உள்ளடக்கப்பட்டுள்ளதால் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கின்றேன்.

எவ்வாறாயினும், விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை கவனத்தில் கொண்டு உரிய பணிகளை நிறைவேற்றும்போது பிரிவுகளுக்கிடையில் கலந்துரையாடி சரியான தகவல்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி சம்பந்தப்பட்ட அலுவலர்களை அறிவுறுத்தப்பட்டது.

(ஈ) 2014 ஆம் ஆண்டுக்காக குத்தகை அடிப்படையில் 03 வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு பிரேரணை செய்யப்பட்டிருப்பினும், ஆண்டு இறுதியில் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இருந்தாலும், அதன் இறுதி பயனை பெற்றுக்கொள்ளப்படவில்லை.

நிலவிய அரசியல் முறையும் அதற்கு காரணமாகியது என கருதலாம் என்பதுடன், 2014 ஆம் ஆண்டுக்காக ஆணைக்குழுவிற்கு புதிய வாகனங்களை கொள்வனவு செய்யாத படியால் அதற்கான செலவுகளை மேற்கொள்ளவில்லை. ஆகையால் முன்னேற்றம் குறிப்பிடப்படும் அறிக்கையில்

இதற்கான செலவு உள்ளடக்கப்பட்டிருத்தல் அச்சீட்டு பிழையென அவதானிக்கின்றேன்.

5.2 உள்ளக கணக்காய்வு

2014 ஆம் ஆண்டுக்கான உள்ளக கணக்காய்வு திட்டத்தின் படி நிதிப் பிரிவில் பணம் கிடைக்கப்பெறுதல் மற்றும் செலவினம் தொடர்பான பரிசீலனைகள் பெரும்பாலும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் கையளிப்பு பிரிவில் கடிதக்கோவைகளை பரிசீலனை உறுதி வழங்கும் நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்ட அலுவலகங்களை கணக்காய்வு செய்கின்ற போது அந்த அலுவலகங்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள வருமான செலவீன அறிக்கைகளை பரிசீலனை செய்து, வருமானம் குறைந்த மாவட்ட அலுவலகங்களின் பொருட்டு வருமானம் குறைவதற்கான காரணங்களை கண்டறிந்து, அது தொடர்பாக அலுவலர்களுடன் கலந்துரையாடி இலக்காகக் கொண்டுள்ள வருமானத்தை அடைவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

வருமானப் பிரிவு மற்றும் நிதிப் பிரிவு ஆகியன இணைந்து மாதாந்த கணக்கு அறிக்கைகளை தயாரித்து அதன் வளர்ச்சியை என்னிடம் அறிவிக்கும் படி ஆலோசனை வழங்கப்பட்டது.

5.3 வரவு செலவு திட்டத்தின் கட்டுப்பாடு

2011 ஆம் ஆண்டில் செப்தெம்பர் மாத வரவு செலவு அறிக்கை திருத்தம் செய்யப்பட்டதுடன், அதன் பிரதியினை கணக்காய்வு பிரிவிடம் வழங்குவதற்கு இயலவில்லை. அதன் படி ஏற்றத் தாழ்வுகளை குறைத்துக்கொள்ளப்பட்டுள்ளதுடன், இனி வருங் காலங்களில் ஏற்றத் தாழ்வுகளை குறைத்துக்கொண்டு நல்ல வரவு செலவு கட்டுப்பாட்டினை ஏற்படுத்திக்கொள்வேன் எனவும் அறியத் தருகின்றேன்.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| | | |
|---|---|---|
| (அ) | வழக்கு பதிவேடு | 2014.12.31 ஆந் திகதியில் வழக்கு பதிவேடு தயாரிக்கப்பட்டுள்ளது. |

| | | |
|---|---|---|
| (ஆ) | மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்களை பெற்றுக்கொள்ளுதல் | கணக்காய்வாளர் அதிபதியிடம் நேரடியாக பதில் கிடைக்கும் வண்ணம் மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| (இ) | காணி பதிவேடு | காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ள குறித்துரைத்த காணிகளின் அளவு - அதிலிருந்து அப்புறப்படுத்தல் மற்றும் தற்போது களத்தில் பயன்படுத்தப்படாத காணிகள் போன்ற தகவல்களை மாவட்டங்களின் படி வெவ்வேறாக உள்ளடக்கி காணி பதிவேட்டின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், மாவட்ட அலுவலகங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படும் தகவல்களை அடிப்படையாகக்கொண்டு நடைமுறைப்படுவதால் சிற் சில தகவல்களின் செவ்வைத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதில் தாமதம் ஏற்படுவதால் காணி பதிவேட்டின் கடமைகளை முடிவுறுத்துவதற்கு இயலாதுள்ளது. |
| (ஈ) | குத்தகை பதிவேடு | குத்தகை பதிவேடு தயாரிக்கப்பட்டு அதன் பின்னாய்வு நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்படுகிறது. |
| (உ) | எதிர்கால நடவடிக்கைகள் | மாவட்ட பணிப்பாளர்களதும் கள அலுவலர்களதும் எதிர் கால வேலை திட்டங்கள் முன்வரும் மாதத்தில் 25 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பித்து அங்கீகரித்துக்கொள்ள வேண்டுமெனவும், சமர்ப்பிக்கப்படும் மாதாந்த வேலை திட்டம், திருத்தம் செய்த வேலை திட்டம், முடிவுறுத்திய வேலை திட்டம் போன்றவற்றின் விபரமொன்றை முறையாகவும் முறைசாராகவும் சமர்ப்பிப்பதற்கு தேவையான அறிவுறுத்தல்கள் மேற்கொள்ள வேண்டிய முறை தொடர்பாக பின்னாய்வு செய்வதற்கு கணக்காய்வுப் பிரிவிடம் ஆலோசனை வழங்கப்பட்டது. |
| (ஊ) | நாளாந்த ஓட்ட குறிப்புகள் | நாளாந்த ஓட்ட குறிப்புகளை பேணிச் செல்லுதல் தொடர்பாக பணிப்பாளர்கள், சாரதிகள் மற்றும் ஓட்டக் குறிப்புகளை பரிசீலனை செய்கின்ற அலுவலர்கள் ஆகியோரிடம் அதனை செவ்வையாக பேணிச் செல்லப்படுகின்றதா என்பதை தேடிப் பார்க்கும் படி ஆலோசனை வழங்கப்பட்டது. |

| | | |
|---|---|---|
| (எ) | வாகனங்களின் பயன்பாடு | காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் வாகன ஒதுக்கத்தில் உள்ள வாகனங்கள் தொடர்பில் எல்லா அலுவலக கடமைகளையும் உள்ளக கணக்காய்வுப் பிரிவுடன் இணைந்து, ஏற்படும் பிரச்சினைகளை குறைத்துக்கொள்வதற்கு எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளும் படி சம்பந்தப்பட்ட அலுவலர்களை அறிவுறுத்தப்பட்டது. |
| (ஏ) | பணம் கிடைக்கப்பெறுதல் தொடர்பாக உள்ளக கட்டுப்பாடுகள் | 18 மாவட்ட அலுவலகங்களுக்கு ஏற்புடையதாக வருமானம் திரட்டும் கணக்குகளை திறந்து குறித்த மாதத்திற்கு ஏற்புடையதான வருமானத்தை குறித்த கணக்குகளில் வரவு வைக்க வேண்டுமென்பதுடன், மாத இறுதியில் அதாவது அடுத்த மாதம் 10 ஆந் திகதி அந்த பணத்தை பிரதான அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்படும். கணக்கு வைக்கும்போது அந்த வருமானப் பணம் செவ்வையாக கணக்குகளில் மாற்றப்பட்டுள்ளதா என்பதை கவனத்தில் கொள்வதுடன், பிரதான அலுவலகத்திற்கு பணம் கிடைக்கப்பெறுதல் ீஐஏ ஊடாக நாளாந்தம் பணப் பேரேடில் உள்ளடக்கப்படும். அதன் படி பணம் கிடைக்கப்பெறுதல் தொடர்பாக உள்ளக கட்டுப்பாடு திருப்திகரமான நிலையில் உள்ளது என்பதை அறியத் தருகின்றேன். |

பீ.ஜீ.சுமனதிஸ்ஸ காம்புகல

தலைவர்

காணி சீர்திருத்த ஆணைக்குழு

**<u>2014.06.02 ஆந் திகதி பி.ப 2.30 மணிக்கு காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பிரதான அலுவலகத்தில் நடைபெற்ற 2014 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக 01 ஆவது கணக்காய்வு குழுவின் கூட்ட அறிக்கை</u>**

வரவு

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு.டபிள்யூ.சேனாரத்ன | - | தலைவர் |
| 02. | திரு.ஏ.எஸ்.வீரசிங்க | - | உறுப்பினர் |
| 03. | திருமதி.எம்.அனோமா நந்தனி | - | உறுப்பினர் |
| 04. | திருமதி.எம்.ஆர்.ஆர்.மல்லவ | - | அவதானிப்பாளர் |
| 06. | கலாநிதி.எச்.எம்.எஸ்.ஜயதுங்க | - | |
| 07. | திரு.ரீ.நரேந்திரன் | - | |
| 08. | திரு.செனரத் வனிகதுங்க | - | செயலாளர் |
| 09. | திருமதி. ஷியாமலி இரத்நாயக்க | | |
| 09. | திரு.ஜே.டபிள்யூ.ஹப்புஆராச்சி | | |
| 10. | திருமதி.குசும் ஹேரத் | | |

முதலாவதாக கடந்த முகாமைத்துவ குழுவில் கலந்துரையாடலுக்கு உட்படுத்திய விடயங்கள் தொடர்பான முன்னேற்றத்தை குழுத் தலைவரால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

<u>2013.06.11 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் முன்னேற்றம்</u>

01.

i. **காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு காணி வெளிப்படுத்துநர்களின் உரித்துகளை உறுதிப்படுத்தப்படாமையால் நட்டஈடு செலுத்தவதற்கு முடியாமை.**

முதலாவது பரிந்துரை நடைமுறைப்படுத்தியுள்ளதுடன், சிறந்த பலன்கள் கிடைக்கப்பெறவில்லை. ஆகையால் சட்ட ஆலோசகரின் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

i.ii நட்டஈட்டுக்குப் பதிலாக மாற்று காணிகளை கோருதல்

இவ்விடயத்திற்கு ஏற்புடையதாக ஆணைக்குழு பத்திரமொன்றை சமர்ப்பிக்க முடியுமென பணிப்பாளர் (மதிப்பீடு மற்றும் நட்டஈடு) கூறினார்.

**iii பயன்கொள்ளலை பொறுப்பேற்கும் சான்றிதழ்கள் இல்லாமை**

2014.02.25 ஆந் திகதி 8773 இலக்கத்தின் கீழ் ஆணைக்குழுவின் தீர்மானம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதன் படி செயற்படும் படி பணிப்பாளிடம்(மதிப்பீடு மற்றும் நட்டஈடு) அறிவிக்கப்பட்டது. தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கும் இவ்விடயத்தை தலைவர் அவர்களிடம் முன்வைத்து மாவட்ட பணிப்பாளர்களை அழைத்து தீர்மானம் மேற்கொள்ளப்படவுமுள்ளது.

iv. -

v. ஏனைய காரணங்கள் - 26 கடிதக்கோவைகள்

ஏனைய காரணங்களின் கீழ் காட்டப்பட்டுள்ள 26 கோவைகளுக்கு ஏற்புடையதாக உரிய காரணத்தை ஆராய்ந்து அதன் படி தற்போது வகைப்படுத்தியுள்ள 1 - 7 வரையிலான கோவைகளில் உள்ளடக்கும் படி பணிப்பளாரிடம் (மதிப்பீடு மற்றும் நட்டஈடு) அறிவிக்கப்பட்டது.

vi. -

vii. நட்டஈடு செலுத்துவதற்கு ஏற்புடையதாக சட்டத்தில் 29 ஆவது பிரிவின் கீழ் வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடுவதற்குள்ள கடிதக்கோவைகளின் எண்ணிக்கை 670 ஆகும்.

ஆகக் குறைந்தது 20 கோவைகளின் முன்னேற்றத்தை அறிக்கையிடுவதற்கு செயலாளர் தீர்மானித்தார்

02. -

**03. மாவட்ட செயலகங்கள் மூலம் கிடைக்கப்பெறும் பல்வேறு வருமானங்களை விருத்தி செய்தல் தொடர்பாக கலந்துரையாடுதல்.**

இது தொடர்பாக பணிப்பாளரால் (நிதி) உள்ளக சுற்றுநிருபம் மூலமும், உள்ளக கணக்காய்வாளரால் வரி பதிவேட்டின் மூலமும் தற்கால நிலைமை தொடர்பாக முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

**04. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைமை அலுவலக கட்டிடத்திற்காக மாதமொன்றுக்கு ரூபா 33000/= ம் வாடகை செலுத்த வேண்டியுள்ளதுடன் புதிய கட்டிடத்தை நிர்மாணித்தல் தொடர்பாக கலந்துரையாடுதல்**

தற்போது காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குரிய காணியினை கண்டறிந்துள்ளதுடன் கமநல சேவைகள் ஆணையாளரின் இணக்கம் கிடைக்கப்பெற்றுள்ளது. நகர அபிவிருத்தி அதிகார சபை உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களிடமிருந்து திட்டமிடல் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

05. காணிச் சீர்திருத்த ஆணைக்குழுவின் ஆட்சேர்ப்பு திட்டங்களுக்கமைவாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் மூலம் 307 பதவிகளை அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், மீதி

ஆளணியை அங்கீகரித்துக்கொள்ளுதல் தொடர்பாக கலந்துரையாட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. முகாமைத்துவ சேவைகள் இலக்கம் 30 இன் படி ஊழியர்கள் அனைவரையும் உள்ளீர்ப்புச் செய்யப்பட்டு சம்பளம் தயாரிப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது இது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

06. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பிரதான அலுவலகத்தின் ஒதுக்கத்தில் உள்ள வாகனங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு வருமானம் அதிகரிப்பதற்காக வழங்கிய வாகனங்கள் ஆகியவற்றின் பேணுதல் நடவடிக்கைகளுக்கு அதிக பணம் செலவாகின்றதெனவும், கடந்த காலகட்டத்தில் இடம்பெற்ற வாகன விபத்துகள் தொடர்பாகவும், வாகனங்களை நிறுத்தி வைத்தல், வாகனங்களின் தனிப்பட்ட பயன்பாடு தொடர்பாகவும் கலந்துரையாடுதல்.

இதற்கான ஆணைக்குழு பத்திரத்திற்கு அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

07. காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் கடனாளிகள் தொடர்பாக அரசாங்க நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நிறுவனங்கள் பற்றி மேற்கொள்ள வேண்டிய சட்டத்துடனான நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாடுதல்.

பணிப்பாளரால்(நிதி) உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதனை உறுப்பினர்களிடத்தில் பகிர்ந்தளித்த பின்னர் இது தொடர்பாக அடுத்த கலந்துரையாடலில் கலந்துரையாடுவதற்குள்ளது. இதற்காக பணிப்பளார்/நிதியால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தை அவதானிக்கப்பட்டது. குறித்த பதிவேட்டுக்கான பணத்தொகை நிலுவையாவதற்கு அல்லது எந்த வருடம் தொடக்கம் கிடைக்கப்பெறவுள்ளது என்பது தொடர்பாகவும், உரிய விடயம் மற்றும் இதுவரை மேற்கொண்டுள்ள நடைமுறைகள் தொடர்பாகவும் அறிக்கை தயாரித்து அடுத்த கணக்காய்வு கூட்டத்தில் சமர்ப்பிக்கும் படி பணிப்பாளர் நிதியிடம் ஆலோசனை வழங்கப்பட்டது.

## 2013.09.17 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் முன்னேற்றம்

01. i ஆணைக்குழு அலுவலர்களின் பணிக்கொடையை கணக்கிடுதல்

இது தொடர்பாக தொழில் திணைக்களத்திடம் ஆலோசனை கோரி கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

## 2013.11.06 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் முன்னேற்றம்

01. மாவட்ட அலுவலகங்களை கணக்காய்வு செய்தல்

தற்போது கணக்காய்வுகளை முடிவுறுத்தியுள்ள அறிக்கைகளை கணக்காய்வாளர் அதிபதியிடம் அனுப்பி வைப்பதற்கு உள்ளக கணக்காய்வாளரிடம் ஆலோசனை வழங்கப்பட்டது.

02. -

03. சட்ட செலவுகளை குறைத்தல்

சட்ட பணிப்பாளரை அழைத்து கலந்துரையாடும் படி செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

04. இணைந்த திட்டம் மற்றும் செயற்றிட்டம்

இணைந்த திட்டம் 2015, 2016, 2017 ஆகிய 03 ஆண்டுகளுக்கு தயாரிப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. அதற்கேற்ப 2015 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக செயற்றிட்டம் ஆகக்குறைந்தது நவம்பர் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் தயாரிக்கும் படி பணிப்பாளர்/முகாமைத்துவம் மற்றும் மனித வள அபிவிருத்தியிடம் ஆலோசனை வழங்கப்பட்டது.

**2014.06.02 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் முன்னேற்றம்**

01. காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குரிய பெறுமதியான மரங்களை கணக்கிடப்படாமையால் முறையின்றி மரங்களை வெட்டி அகற்றப்படுதல் தொடர்பாக கலந்துரையாடுதல்

ஆணைக்குழுவால் காணிகளில் மரங்கள் வெட்டுவதற்கு அனுமதிக்கப்படுவதால் இவ்வாறான நிலைமைகள் உருவாகின்றன. அவ்வாறு அனுமதி வழங்கும்போது முழு காணிக்கும் உரியதான மொத்த மரங்களின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டு வெட்டி அகற்றுவதற்கு அனுமதி வழங்கும் படி பணிப்பாளர்/காணி கையளிப்பிடம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதனால் கிடைக்கப்பெறும் வருமானம் ஆண்டின் வருமான கணக்கிற்கு உட்படுத்த வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

…………………………………… ………………………………..

தலைவர் செயலாளர்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| பெயர் | | பதவி | கையொப்பம் |
|---|---|---|---|
| திரு.ஏ.எஸ்.வீரசிங்க | - | உறுப்பினர் | |
| திருமதி.எம்.ஆர்.ஆர்.மல்லவ | - | அவதானிப்பாளர் | |
| திருமதி. எம்.அனோமா நந்தினி | - | உறுப்பினர் | |
| கலாநிதி.எச்.எம்.எஸ்.ஜயதுங்க | - | | |
| திரு.ரீ.நரேந்திரன். | - | | |
| திருமதி குசும் ஹேரத் | - | | |
| திருமதி ஷியாமளி இரத்நாயக்க | - | | |

**<u>2014.08.25 ஆந் திகதி மு.ப 12.30 மணிக்கு காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் பிரதான அலுவலகத்தில் நடைபெற்ற 2014 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக 02 ஆவது கணக்காய்வு குழுவின் கூட்ட அறிக்கை</u>**

வரவு

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு.பீ.டபிள்யூ.சேனாரத்ன | - | தலைவர் |
| 02. | திரு.ஏ.எஸ்.வீரசிங்க | - | உறுப்பினர் |
| 03. | திருமதி.எம்.அனோமா நந்தனி | - | உறுப்பினர் |
| 04. | திருமதி.எம்.ஆர்.ஆர்.மல்லவ | - | அவதானிப்பாளர் |
| 05. | திரு.செனரத் வனிகதுங்க | - | செயலாளர்/பணிப்பாளர் நிர்வாகம் |
| 06. | திருமதி.எச்.எம்.எஸ்.ஜயதுங்க | - | பணிப்பாளர் நாயகம் அவதானிப்பாளர் |
| 07. | திரு.ரீ.நரேந்திரநாதன் | - | உள்ளக கணக்காய்வாளர் |
| 09. | திருமதி. ஷியாமலி இரத்நாயக்க | - | பணிப்பாளர்/நிதி (அ.பா) அவதானிப்பாளர் |
| 10. | திரு.ஜே.டபிள்யூ.ஹப்புஆராச்சி | - | பணிப்பாளர்/காணி (அ.பா) அவதானிப்பாளர் |
| 11. | திருமதி புஷ்பா கருணாரத்ன | - | உதவிப் பணிப்பாளர் (கருத்திட்டம்) அவதானிப்பாளர் |

முதலாவதாக கடந்த முகாமைத்துவ குழுவில் கலந்துரையாடலுக்கு உட்படுத்திய விடயங்கள் தொடர்பான முன்னேற்றத்தை குழுத் தலைவரால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

<u>2014.06.02 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் முன்னேற்றம்</u>

(01) காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் சொத்துக்களின் பதிவேடு நிதி ஒழுங்கு விதி 128 (1) (இ) இன் பிரகாரம் தயாரித்தல், காணி கையேற்பு பதிவேடு மற்றும் அப்புறப்படுத்தும் பதிவேடு என்பவற்றில் முறையாக காணிகளை மதிப்பீடு செய்து பேணிச் செல்லுதல் என்பன தொடர்பாக கலந்துரையாடுதல். இதற்கு முன்னர் 17 மில்லியன் ரூபா செலவில் மென்பொருள்களை அறிமுகப்படுத்தியிருப்பினும் இன்று வரை முடிவடையவில்லை. இந்தப் பணத்தொகையை முற்பணமாக பதியப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகளை கலந்துரையாடுதல்.

கணினி மென்பொருள் தயாரித்தல் விடயம் தொடர்பாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் விசாரணை செய்யப்பட்டு வருவதால் அது தொடர்பாக தீர்மானம் எடுக்க இயலாது. எவ்வாறாயினும் 2014.06.02 அந் திகதி தொடக்கம் தகவல் தொழில்நுட்ப அலுவலரொருவரை ஆணைக்குழுவிற்கு நிரந்தரமாக நியமனம் செய்யப்பட்டுள்ளதால் அவரால் எல்லா மாவட்டங்களுக்கும் உரியதான தகவல்களை உள்ளடக்கப்படுவதுடன், தற்போது கையளிக்கப்பட்டுள்ள ரன்பவும் தோட்டங்களுக்கு ஏற்புடையதான பதிவேடு தயாரிக்கப்பட்டு

இறுதி கட்டத்தில் உள்ளது. முழுதான முன்னேற்றத்தை அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்கு செயலாளர் இணக்கம் தெரிவித்துள்ளார். தற்போது இந்த ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ள காணிகள் மற்றும் அப்புறப்படுத்திய காணிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதற்கு மேலதிகமாக அப்புறப்படுத்திய பின்னர் இரத்துச் செய்யப்படும் காணிகளும் இந்த பதிவேட்டில் உள்ளடக்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

02. காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்குரிய பெறுமதி வாய்ந்த மரங்களை கணக்கிடப்படாததால் முறையின்றி மரங்களை வெட்டி அகற்றுதல் தொடர்பாக கலந்துரையாடுதல்.

மரங்களை வெட்டி அகற்றுவதற்கு அனுமதி வழங்கும் சந்தர்ப்பத்தில் தலைமை அலுவலகத்தில் களப் பரிசோதனைகளை மேற்கொள்ளும்போது பணிப்பாளர் (மதிப்பீடு மற்றும் நட்டஈடு ) மற்றும் உள்ளக கணக்காய்வாளர் ஆகியோர் பங்குபற்றி அது தொடர்பான செவ்வைத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

2014.08.25 அந் திகதி நடைபெற்ற கணக்காய்வு குழுவின் தீர்மானங்கள்

01. சட்ட செலவுகளை குறைத்தல்

காணி சீர்திருத்த ஆணைக்குழுவில் சட்ட பிரிவில் தற்போதுள்ள வழக்குகளின் எண்ணிக்கை 438 ஆகுமென கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இவற்றுக்கிடையில் அதிகளவிலான வழக்குகள் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளாகும். மாதமொன்றுக்கு செலவாகும் சட்ட செலவுகள் மொத்தமாக ரூபா.300000.00 ஆகும். பணிப்பாளர்கள் வழக்குகளை முடிவுறுத்துவதற்கு பரிந்துரை வழங்கப்பட்டால் அவற்றை முடிவுறுத்தலாம் என சட்டப் பிரிவால் கூறப்படுகிறது. இது தொடர்பாக பொருத்தமான அலுவலரொருவரை நியமனம் செய்வதற்கும் வழக்குகளை தீர்ப்பதற்கு வாய்ப்புகள் உள்ளதாவெனவும் கலந்துரையாடுதல்.

புதிதாக ஆணைக்குழுவிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளவிடத்து, அழைப்பாணை கிடைக்கப்பெற்றதன் பின்னர் சட்டப் பிரிவால் சம்பந்தப்பட்ட மணுவை ஆராய்ந்து தேவையான ஆலோசனைகளை வழக்கில் தோற்றுபவர்களுக்கு வழங்க வேண்டுமென கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு அவதானிக்கின்றது. தற்போதுள்ள வழக்கு தொடர்பாக முழுமையாக ஆராய்ந்து குறித்த வழக்குகளை மேலும் பேணிச் செல்ல வேண்டுமா? இல்லாவிட்டால் முடிவுறுத்தப்பட வேண்டுமா என்பது தொடர்பாக விபரமான அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு சட்ட ஆலோசகரிடம் முன் வைக்கவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தின் கண்காணிப்பின் கீழ் செயலாளரால் கூட்டிணைப்புச் செய்வார்.

02. ஆணைக்குழுவிடம் கிடைக்கப்பெற வேண்டிய பணத்தை அறவிடுதல்

ஆணைக்குழுவிற்கு பல ஆண்டுகளாக கிடைக்கப்பெற வேண்டிய பணமாக 2013.12.31 ஆந் திகதியில் 2218 மில்லியன் ரூபாவை காட்டுகின்றது. இந்தப் பணத்தொகையை அறவிடுவதற்காக பல சந்தர்ப்பங்களில் முயற்சிகள் மேற்கொண்ட போதிலும், அதனை அறவிட முடியாதுள்ளது. அதன் பிரகாரம் இந்தப் பணத்தொகையை கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கோ அல்லது வேறு நடைமுறைகள் இருப்பின், அது தொடர்பாக தீர்மானமெடுப்பதற்கு தயவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

(i) ஆணைக்குழுவின் சிறாப்பராக கடமையாற்றும் அலுவலரிடமிருந்து காணமல் போயுள்ள ரூபா.111.538.90 ஆன தொகை.

இந்த விடயம் தொடர்பாக ஆராயும்போது அரச நிதி திணைக்களத்திடமிருந்து ஆலோசனை பெறப்பட்டுள்ளது. ஆயினும் காணி சீர்திருத்த ஆணைக்குழு அரச வியாபார திணைக்களத்திடமிருந்தே ஆலோசனை பெறப்படுதல் வேண்டும். அதன் படி மீண்டும் அரச வியாபார திணைக்களத்திடம் கடிதம் எழுதி ஆலோசனை பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.

(ii) திரு.ரீ.ஏ.எம்.பிரசன்ன - ரூபா. 9900.00

சம்பந்தப்பட்டவருக்கு பதிவு செய்யப்பட்ட கடிதம் மூலம் பணம் செலுத்தும் படி அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

(iii) திரு.எம்.எல்.எம்.சாரிப் அவர்களிடமிருந்து அறவிட வேண்டிய தொகை ரூபா.1000/=

அதிகமாக செலுத்தப்பட்டுள்ள அலுவலர் தொடர்பாக கண்டறிந்து கூறும்படி அறிக்கையிடுவதற்கு செயலாளரிடம் அறிவிக்கப்பட்டது. அத்துடன் பணப் பதிவேட்டிலிருந்து நீக்கிவிடுவதற்கு அரச வியாபார திணைக்களத்திடமிருந்து ஆலோசனை பெற்றுக்கொள்வதற்கு தீர்மானமாகியது.

(iv) விபரமான அறிக்கையொன்றை தயாரித்தல்

(பணிப்பளார்/நிதி) விபரமான பட்டியலொன்றை தயாரிப்பதற்கு பணிப்பளார் நிதியிடம் ஆலோசனை வழங்கப்பட்டது.

(03) ஆணைக்குழு பத்திரங்களை தயாரித்தல்- காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்படும் ஆணைக்குழு பத்திரங்களில் குறைப்பாடுகள் உள்ளதாக அறிக்கையிடப்பட்டது. அதனை முறையாக தயாரித்தல் தொடர்பாக விரிவாக கலந்துரையாடுதல்.

இவ்விடயங்கள் தொடர்பாக நீண்ட காலமாக கலந்துரையாடப்பட்டதுடன், இனி வருங் காலங்களில் ஆணைக்குழு பத்திரங்களை சமர்ப்பிக்கும்போது உரிய பிரிவை குறிப்பிடுகையில் தற்போது புதிய நிறுவனக் கட்டமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளை மட்டும் உரிய பிரிவுகளாக குறிப்பிட வேண்டுமெனவும்,

ஆணைக்குழு பத்திரங்களை சமர்ப்பிக்கின்றவர்களின் பதவிப் பெயர்கள் தற்போது உள்ளீர்க்கப்பட்டுள்ளவாறு உரிய பதவிப் பெயர்கள் ஆதல் வேண்டுமெனவும் செயலாளர் கூறினார்.

ஏனைய விடயங்கள்

பணிப்பாளர் (நிதி ) பதவி நீண்ட காலமாக வெற்றிடமாக உள்ளதுடன் தற்போது அப் பதவியில் பதில்கடமையாற்றும் அலுவலரால் நிறைவேற்றப்படுகிறது. இந்த நிலைமை நீண்ட காலம்

நிலவுதல் திருப்தியற்ற செயற்பாடாவதுடன், விண்ணப்பங்களை கோருவதன் மூலம் தேவையான தகைமைகளை பூர்த்தி செய்கின்ற விண்ணப்பத்தாரிகள் இல்லாவிட்டால், பதவிக்கு ஏற்புடையதான தகைமைகளை மீண்டும் கவனத்தில் கொள்வதற்கான கோரிக்கை முன்வைத்தல் பொருத்தமானதென கலந்துரையாடப்பட்டது. அதன் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் பணிப்பளார் நாயகத்திடமிருந்து உசாவி இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானமாகியது.

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் வரி அட்டவணை தொடர்பாக உள்ளக கணக்காய்வாளரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையை பரிசீலனை செய்யப்பட்டதுடன், விரிவான அறிக்கையினை அடுத்த குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கும் படி ஆலோசனை வழங்கப்பட்டது.

அடுத்த முகாமைத்துவ குழு கூட்டம் 2014.10.07 அந் திகதி பி.ப 2.30 மணிக்கு நடாத்துவதற்கு தீர்மாணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| ………………………………… | …………………………….. |
| தலைவர் | செயலாளர் |
| கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு |

| பெயர் | | பதவி | கையொப்பம் |
|---|---|---|---|
| திரு.ஏ.எஸ்.வீரசிங்க | - | உறுப்பினர் | |
| திருமதி.எம்.ஆர்.ஆர்.மல்லவ | - | அவதானிப்பாளர் | |
| திருமதி.எம்.அனோமா நந்தனி | - | உறுப்பினர் | |
| திருமதி.எச்.எம்.எஸ்.ஜயதுங்க | | | |
| திரு.ரீ.நரேந்திரநாதன் | | | |
| திருமதி. ஷியாமலி இரத்நாயக்க | | | |
| திரு.ஜே.டபிள்யூ.ஹப்புஆராச்சி | | | |

## 2014. ஆம் ஆண்டில் 03 ஆவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம்

இடம் :- காணி சீர்திருத்த ஆணைக்குழு

திகதி :- 2014.10.10

நேரம் :- மு.ப. 09.30 - பி.ப 1.00

குழு அலுவலர்களின் பங்களிப்பு

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு.பீ.டப்ளியூ சேனாரத்ன | - | தலைவர் |
| 02. | திரு.ஏ.எஸ்.வீரசிங்க | - | உறுப்பினர் |
| 03. | திருமதி.எம்.அனோமா நந்தனி | - | உறுப்பினர் |
| 04. | திருமதி.எம்.ஆர்.ஆர்.மல்லவ | - | அவதானிப்பாளர் |

கா.சீ.ஆணைக்குழுவின் அலுவலர்களது பங்களிப்பு

| | | | |
|---|---|---|---|
| 05. | திருமதி.எச்.எம்.எஸ்.ஜயதுங்க | - | பணிப்பாளர் நாயகம் |
| 06. | திரு.செனரத் வனிகதுங்க | - | குழுச் செயலாளர் (செயலாளர்/பணிப்பளார் நிர்வாகம்) |
| 07. | திரு.ரீ.நரேந்திரநாதன் | - | பிரதான உள்ளக கணக்காய்வாளர் |
| 08. | திருமதி. ஷியாமலி இரத்நாயக்க | - | பணிப்பாளர்/நிதி |
| 09. | திருமதி நந்தனி திஸ்ஸ | - | உதவிப் பணிப்பாளர்/நிதி |
| 10. | திரு.பிரதீப் கன்னங்கர | - | உதவிப் பணிப்பாளர் (வருமானம்) |

முதலாவதாக கடந்த முகாமைத்துவ குழுவில் கலந்துரையாடலுக்கு உட்படுத்திய விடயங்கள் தொடர்பான முன்னேற்றத்தை குழுத் தலைவரால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

- ஆணைக்குழுவிடம் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள காணி பதிவேடு தயாரிக்கப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளதுடன், அதன் செவ்வைத்தன்மையை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக உரிய பதிவேடுகள் மாவட்ட அலுவலகத்திடம் 2014.07.30 அந் திகதி அனுப்பி வைக்கப்பட்டுள்ளதெனவும், அதற்கு பதில் கிடைக்கப்பெற்ற பின்னர் குத்தகை பதிவேட்டை இற்றைப்படுத்த முடியுமெனவும், வருமானப் பிரிவின் பதவி நிலை அலுவலரால் குறிப்பிடப்பட்டது. அடுத்த கூட்ட அமர்வில் அதன் நிலை தொடர்பாக அறிக்கையிடுவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

- காணிகள் தொடர்பான பதிவேடை தாயரித்து முடிவுறுத்தப்பட்டுள்ளது.

- தற்போது வருடாந்த கணக்குகளில் கடனாளிகளாக ரூபா.2154 மில்லியன் ரூபாவாக ஒவ்வொரு வருடமும் முன்கொண்டு வரப்படுகிறது. இந்த நிலுவை பணம் செலுத்த வேண்டிய நிறுவனங்களாக மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை, அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம், கால் நடை வளங்கள் சபை, தேர்தல் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் ஹதபிம் அதிகார சபை என்பன குறிப்பிடலாம்.

- அறிய வரும் விடயங்களின் படி இக் காணிகளில் அதிகளவிலான காணிகள் பெருந்தோட்ட முகாமைத்துவ கம்பனிகளிடம் நீண்டகால குத்தகையாக வழங்கப்பட்டுள்ளதுடன், அந்த இடங்களின் பொருட்டு அறவிடப்படும் வருடாந்த குத்தகை பணம் பொது திறைசேரியால் அறவிடப்படுகிறது. இதில் உள்ளடங்கும் கருத்து யாதெனில், சம்பந்தப்பட்ட காணிகள் மேற்படி நிறுவனங்களிடம் வழங்கிய பின்னர் காணிகளின் முழு உரித்தும் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிடமிருந்து அகற்றப்பட்டுள்ளமையாகும். இது தொடர்பாக சனாதிபதி செயலாளரிடம் உசாவி தீர்மானமொன்று மேற்கொள்ள வேண்டுமென கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு பரிந்துரை செய்கின்றது.

  இது தொடர்பாக செயலாளர் மற்றும் பணிப்பாளர் நாயகம் எதிர்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

- பணிப்பளார் நிதி பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யும் திட்டத்தை மாற்றப்பட வேண்டுமா? மாற்றங்களை மேற்கொண்டு அனுமதி பெற வேண்டுமா? வேறு முறைசார் முறையில் வெற்றிடங்களை தயாரிக்க வேண்டுமா என்பது தொடர்பான பிரேரணைகளுடன் கூடிய ஆணைக்குழு பத்திரமொன்றை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதற்கு பணிப்பளார் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

- இவ்வறிக்கை குழு அலுவலர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

2014.10.10 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் முன்னேற்றம்

ஆணைக்குழு பத்திர இலக்கம் 01

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணி விற்பனை வருமானத்தில் 60% தொழிற்பாட்டு செலவுகளாகவும், 40% ஒதுக்கங்களாகவும் ஒதுக்குவதற்கான ஆணைக்குழு தீர்மானத்தை சமர்ப்பித்தல்

இது தொடர்பாக நீண்டதாக கலந்துரையாடப்பட்டதுடன், இந்த ஒதுக்கங்களுக்கு ஏற்புடையதான ஆணைக்குழுவின் தீர்மானத்தை கண்டறியமுடியாதென உள்ளக கணக்காய்வாளரால் குறிப்பிடப்பட்டது. அதன் படி கடந்த 05 ஆண்டு காலப்பகுதிக்குள் கிடைக்கப்பெற்ற முழு விற்பனை வருமானமும் அதில் 60% ஆன அளவு வெவ்வேறாக காட்டப்பட்டு அதற்கு சமவிகிதாசாரமாக அந்தந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட உண்மையான தொழிற்பாட்டு செலவுகளின் அளவையும் குறிப்பிடப்பட்டு விரிவான ஆணைக்குழு பத்திரமொன்றை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பதற்கு பணிப்பாளரிடம் (நிதியிடம்) ஆலோசனை வழங்கப்பட்டது.

<u>ஆணைக்குழு பத்திரம் 02</u>

மாவட்ட செயலகங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள வாகனங்களின் பொருட்டு வழங்கப்படும் எரிபொருள் அளவு மற்றும் வாகனத்தை பயன்படுத்தல் தொடர்பாக கலந்துரையாடுதல்

இது நிர்வாக தீர்மானமென்பது அவதானிக்கப்படுவதுடன், மாதாந்த முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டு அல்லது இல்லாவிட்டால் பணிப்பளார் நாயகத்தால் கண்காணிக்கப்பட்ட பின்னர் தீர்மானமொன்றை மேற்கொள்வதற்கும், தற்போதுள்ள முறையில் கணிசமானதொரு வகையை வெளியேற்றப்படுவதாயின் எல்லா தகவல்களையும் உள்ளடக்கி ஆணைக்குழு பத்திரமொன்றை சமர்ப்பிப்பதற்கும், முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு குழு சுட்டிக்காட்டியது.

<u>ஆணைக்குழு பத்திரம் 03</u>

காணி சீர்திருத்த ஆணைக்குழுவில் பணியாற்றிய அலுவலர்களுக்கு கடன் திட்டத்தின் படி கடன் வழங்கி கடன் செலுத்தாது தவறவிட்டுள்ள அலுவலர்களுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக கலந்துரையாடுதல்

உரிய ஆவணத்தை அடுத்த குழு அமர்வில் சமர்ப்பிக்கும் படி பணிப்பாளர்/நிதியிடம் அறிவிக்கப்பட்டது.

<u>ஆணைக்குழு பத்திரம் 06</u>

ஆணைக்குழு மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ குழுவிற்கு ஏற்புடையதான விடயபொறுப்பு அமைச்சான சனாதிபதி செயலகத்தின் பிரதிநிதி பங்குபற்றாமை தொடர்பாக கலந்துரையாடுதல்

இது தொடர்பாக கடிதம் மூலம் சனாதிபதி செயலகத்திற்கு அறிவிக்கும் படி செயலாளரிடம் கூறப்பட்டது.

இந்த அறிக்கை குழு அலுவலர்களால் அங்கீகரிக்கப்பட்டது.

<u>2014.12.30 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு குழுவின் முன்னேற்றம்</u>

பத்திரிக்கை இலக்கம் 01

1. அம்பாறை மாவட்ட அலுவலகம்

   அம்பாறை அலுவலகத்தில் 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை நிதி நடவடிக்கைகள் தொடர்பாக விசாரணை நடாத்தி அறிக்கை சமர்ப்பிக்கும் படி ஆலோசனை வழங்கப்பட்டது.

   இது நிதி மோசடியாக முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு குழு கூறுகின்றது. ஆகையால் சட்டரீதியாக செயற்படும் படி பணிப்பளார் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

   ஆணைக்குழு பத்திம் இலக்கம் 06

   ஆணைக்குழு மற்றும் கணக்காய்வு முகாமைத்துவ குழுவிற்கு ஏற்புடைய விடய பொறுப்பு அமைச்சரான சனாதிபதி செயலகத்தின் பிரதிநிதி பங்குகற்றுதல் தொடர்பாக கலந்துரையாடுதல்.

   எல்லா கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் தொடர்பாக சனாதிபதி செயலகத்தை அறிவுறுத்தப்படுதல் வேண்டும். அவதானிப்பாளர் ஒருவரை பங்குபற்றச் செய்வித்தலை

மெச்சப்படுவதாக அறிவிக்க வேண்டுமென்பதுடன், அது தொடர்பாக செயலாளர் பணியாற்றப்படுதல் வேண்டும்.

அடுத்த முகாமைத்துவ குழு கூட்டம் 2014.12.30 ஆந் திகதி மு.ப 2.00 மணிக்கு நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

………………………………… ……………………………..

தலைவர் செயலாளர்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| பெயர் | | பதவி | கையொப்பம் |
| --- | --- | --- | --- |
| திரு.ஏ.எஸ்.வீரசிங்க | - | உறுப்பினர் | |
| திருமதி.எம்.அனோமா நந்தனி | - | உறுப்பினர் | |
| திருமதி.எம்.ஆர்.ஆர்.மல்லவ | - | அவதானிப்பாளர் | |
| திருமதி.எச்.எம்.எஸ்.ஜயதுங்க | - | பணிப்பாளர் நாயகம் | |
| திரு.ரீ.நரேந்திரநாதன் | - | பிரதான உள்ளக கணக்காய்வாளர் | |
| திருமதி. ஷியாமலி இரத்நாயக்க | - | பணிப்பளார் நிதி | |

2014. ஆம் ஆண்டில் 04 ஆவது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம்

இடம் :- காணி சீர்திருத்த ஆணைக்குழு

திகதி :- 2014.12.30

நேரம் :- பி.ப. 02.30 - பி.ப 1.00

குழு அலுவலர்களின் பங்களிப்பு

| | | | |
|---|---|---|---|
| 01. | திரு.பீ.டப்ளியூ சேனாரத்ன | - | தலைவர் |
| 02. | திரு.ஏ.எஸ்.வீரசிங்க | - | உறுப்பினர் |
| 03. | திருமதி.எம்.அனோமா நந்தனி | - | உறுப்பினர் |
| 04. | திருமதி.எம்.ஆர்.ஆர்.மல்லவ | - | அவதானிப்பாளர் |

கா.சீ.ஆணைக்குழுவின் அலுவலர்களது பங்களிப்பு

| | | | |
|---|---|---|---|
| 05. | திரு.செனரத் வனிகதுங்க | - | குழுச் செயலாளர் (செயலாளர்/பணிப்பளார் நிர்வாகம்) |
| 06. | திரு.ரீ.நரேந்திரநாதன் | - | பிரதான உள்ளக கணக்காய்வாளர் |
| 07. | திருமதி. ஷியாமலி இரத்நாயக்க | - | பணிப்பாளர்/நிதி |

முதலாவதாக கடந்த முகாமைத்துவ குழுவில் கலந்துரையாடலுக்கு உட்படுத்திய விடயங்கள் தொடர்பான முன்னேற்றத்தை குழுத் தலைவரால் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

2014.08.25 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டத்தின் முன்னேற்றம்

- வரி பதிவேடு

  காணி வரி பதிவேட்டில் செவ்வைத்தன்மையை உறுதிப்படுத்திக்கொண்டு பூரண அறிக்கையொன்றை இனி வரும் குழு அமர்வில் வருமானப் பிரிவின் பதவிநிலை உதவியாளரிடம் கட்டாயம் சமர்ப்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. இது தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு செயலாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

- அப்புறப்படுத்தும் அட்டவணை

  இந்த விடயம் தொடர்பாக இது வரையிலான முன்னேற்றத்தை சமர்ப்பிக்கும் படி செயலாளர் மற்றும் பணிப்பாளரால் ஆலோசனை வழங்கப்பட்டது.

- இந்த விடயம் தொடர்பாக கடந்த ஆணைக்குழு அமர்வில் ஆணைக்குழு பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன்போது இதற்கு சமமான நிறுவனங்களில் பணிப்பளார்/நிதி பதவியில் தகைமைகளை பரிசீலனை செய்வதற்கு ஆணைக்குழுவின் திரு சத்குமார அவர்களிடம் கையளிக்கப்பட்டதுடன், அது தொடர்பான அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர் எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர் பார்க்கப்படுகிறது.

2014.10.10 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் முன்னேற்றம்

**<u>பத்திரிக்கை இலக்கம் 01</u>**

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் காணி விற்பனை வருமானத்தில் 60% தொழிற்பாட்டு செலவுகளாகவும், 40% ஒதுக்கங்களாகவும் ஒதுக்குவதற்கான ஆணைக்குழு தீர்மானத்தை சமர்ப்பித்தல்

இவ் விடயம் தொடர்பான ஆணைக்குழு வரையுளை பணிப்பளார்/நிதியிடம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், அதன் பிரகாரம் ஆணைக்குழு பத்திரமொன்றை சமர்ப்பிக்கும் படி ஆலோசனை வழங்கப்பட்டது.

**<u>பத்திரிக்கை இலக்கம் 03</u>**

காணி சீர்திருத்த ஆணைக்குழுவில் பணியாற்றிய அலுவலர்களுக்கு கடன் திட்டத்தின் படி கடன் வழங்கி ,கடன் செலுத்தாது தவறவிட்டுள்ள அலுவலர்களுக்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடைமுறைகள் தொடர்பாக கலந்துரையாடுதல்

இது தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்வதற்கென்றால் அலுவலர்கள் சேவைக்கு சேர்ந்த திகதி, கடன் தொகை அளிக்கப்பட்ட திகதி, பிணையாளர்கள் இருப்பின் அவர்களின் பெயர்கள், நிலுவை கடன் தொகை, கடன் அறவிடுவதற்காக இது வரை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்பன தொடர்பாக விரிவான தகவல்களை உள்ளடக்குதல் வேண்டும். பணிப்பளார் நிதியால் தயாரிக்கப்பட்டுள்ள 2014.06.24 ஆந் திகதிய பதிவேடு நிர்வாகப் பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்டு, உரிய எல்லா தகவல்களையும் பெற்றுக்கொண்டு விரிவான பதிவேடை தயாரிக்கும் படி பணிப்பளார் நிதியிடம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

**<u>ஆணைக்குழு பத்திரம் 04</u>**

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் நடவடிக்கைகளின் பொருட்டு பெறுகை வழிகாட்டல் கோவை மற்றும் பெறுகை திட்டம் கடைபிடித்தல் தொடர்பான கலந்துரையாடுதல்

பொது திறைசேரியால் வெளியிடப்பட்டுள்ள பெறுகை மற்றும் வழிகாட்டல் கோவையின் ஒழுங்குவிதிகளின் படி கேள்வி நடைமுறையை கடைபிடிக்கும் படியும், அந்தந்த கேள்வியின் பெறுமதி பிரகாரம் அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ள நபரால் தீர்மானிக்கப்பட்டதன் பின்னர் பெறுகை சபை மேற்கொள்ளும் தீர்மானம் இறுதி தீர்மானமெனவும், எவ்வாறாயினும் குறித்த தீர்மானத்தை ஆணைக்குழு அறிந்துகொள்வதற்காக சமரப்பிக்கும் படியும் ஆலோசனை வழங்கப்பட்டது.

**<u>ஆணைக்குழு பத்திரம் இலக்கம் 05</u>**

காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் அலுவலர்களது கொடுப்பனவுகள் தொடர்பாக கலந்துரையாடதல்

உதாரணம்,- மொழிபெயர்ப்பு, பிரயாணச் செலவுகள், பொதுவான பிரயாணச் சலெவு

இது நிர்வாக தீர்மானமாகும். எவ்வாறாயினும் தற்போதுள்ள நிலையில் பாரிய மாற்றங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் ஆணைக்குழு பத்திரமொன்றை சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

11. <u>குருணாகல் மாவட்ட அலுவலகம்</u>

இந்த அலுவலகத்தில் கடிதக்கோவைகள் தொடர்பாக தலைமை அலுவலகத்தின் கடிதக்கோவைகளை சார்ந்து பதிவேடை தயாரித்து, தற்போது குருணாகல் அலுவலகத்தில் உள்ள கடிதக்கோவைகளுடன் ஒப்பீட்டு அறிக்கை தயாரித்து அடுத்த குழு கூட்டத்தில் சமர்ப்பிக்கும் படி உள்ளக கணக்காய்வாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

111. <u>கேகாலை மாவட்ட அலுவலகம்</u>

இது தொடர்பாக கேகாலை மாவட்ட பணிப்பளாரிடம் விடயங்களை உசாவி இருப்பதாக குறிப்பிடப்பட்டிருப்பினும், அதற்கு உரிய காலப்பகுதிக்குள் பதில் பெற்றுக்கொண்டு ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு தெரிவித்தது.

அதே போன்று முன்னேற்றத்தை அடுத்த குழுவில் சமர்ப்பிக்கும் படி செயலாளரிடம் ஆலோசனை வழங்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டில் எல்லா மாவட்ட அலுவலகங்களையும் கணக்காய்வு செய்ய வேண்டுமெனவும், கணக்காய்வு மேற்கொள்கின்ற எல்லா மாவட்ட அலுவலகங்களிலும் அறிக்கைகளை கணக்காய்வு முகாமைத்துவ குழுவிடம் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

**பத்திரிக்கை இலக்கம் 02**

2014 ஆம் ஆண்டில் எதிர்கால நிகழ்ச்சித்திட்டம், 2014 ஆம் ஆண்டின் முன்னேற்றம், 2015 ஆம் ஆண்டில் எதிர்கால நிகழ்ச்சித்திட்டம்

உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தை கலந்துரையாடும் சந்தர்ப்பத்தில் கணக்காய்வு அதிகாரியால் தற்போது ஆணைக்குழுவின் கணக்கீட்டு நடவடிக்கைகள் manual முறையில் தயாரிக்கப்படுகின்றது என கூறியதுடன் அதற்கு மென்பொருள் முறையினை அறிமுகப்படுத்த வேண்டுமெனவும் பரிந்துரை செய்தார். இதனை முகாமைத்துவ குழுவாலும் அங்கீகரிக்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டில் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சிகளை ஆராய்ந்து பார்த்த பின்னர் அறிய வந்த விடயம் யாதெனில், சமரப்பிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டம் 100% முடிவுறுத்த முடியுமாயின் அதனூடாக முன்னேற்றத்தை அண்மித்துக்கொள்ளலாம் என்பதாகும்.

ஆயினும் 2014 ஆம் ஆண்டு 75% ஐ முடிவுறுத்த முடிந்தது. அதன் படி முதலாவது காலாண்டில் முன்னேற்றத்தை அடுத்த குழு கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

இதற்கு மேலதிகமாக அறிக்கையிடப்பட்ட நிதி மோசடிகள் தொடர்பாக மேற்கொள்கின்ற விசாரணைகளுக்கு மேலதிகமாக இனி வருங் காலங்களில் நடாத்தப்படும் விசாரணைகள் உள்ளக கணக்காய்வு நிகழ்ச்சிகளில் உள்ளடக்க வேண்டுமென குழு அவதானிக்கின்றது.

**பத்திரிக்கை இலக்கம் 03**

**2015 - 2019 இணைந்த திட்டம் மற்றும் செயற்றிட்டம் - 2015**

2015- 2019 அண்டகளுக்கான இணைந்த திட்டம் தொடர்பாக ஆராய்ந்த முகாமைத்துவ குழு உரிய காலப்பகுதியில் மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்படும் அடிப்படை கருமங்களில் அட்டவணை உள்ளடக்கிய திட்டமொன்று உபாயமுறை தொடர்பான திட்டத்திற்கு முன்னர் இணைந்த திட்டத்தில் உள்ளடக்க வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

குறித்த விடயங்களை உள்ளடக்கிய பின்னர் ஆணைக்குழுவிடம் சமரப்பிக்கப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக மேலதிக ஆலோசனைகள் திறைசேரி பணிப்பாளர் திருமதி அனோமா நந்தனியிடம் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் செயலாளர் அறிவித்தார்.

அடுத்த முகாமைத்துவ குழு கூட்டம் 2015.02.24 ஆந் திகதி பி.ப 2.00 மணிக்கு நடாத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டது.

………………………………… ……………………………..

தலைவர் செயலாளர்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| | பெயர் | பதவி | கையொப்பம் |
|---|---|---|---|
| 01. | திரு.ஏ.எஸ்.வீரசிங்க | - உறுப்பினர் | |
| 02. | திருமதி எம். அனோமா நந்தனி | - உறுப்பினர் | |
| 03. | திருமதி.எம்.ஆர்.ஆர். மல்லவ | - அவதானிப்பாளர் | |
| 04. | திரு.ரீ.நரேந்திரநாதன் | - பிரதான உள்ளக கணக்காய்வாளர் | |
| 05. | திருமதி. ஷியாமலி இரத்நாயக்க | - பணிப்பளார் நிதி | |